उ

नारायण करुणामय शरणं करवाणि तावकौ चरणौ

நாராயண கருணாமய ஶரணம் கரவாணி
தாவகௌ சரணௌ

பொருளடக்கம்

1. ஸ்ரீ சிவன் ஸார் 1
2. பகவன் நாம மஹிமை - மஹாபெரியவா உபதேசம் 15
3. ஸரஸ்வதி பெரியவா 27
4. ஸ்ரீமத்பாகவதத்தில் உத்தவ கீதையில் வரும் 24 குருக்கள் 33
5. ஸ்ருங்கேரி சாரதாம்பா காஞ்சி காமாக்ஷி 46
6. மஹாபெரியவா ஆராதனை 58
7. ஸ்ரீராம: சரணம் மம மஹாபெரியவா திருவடிகளே சரணம் 64
8. கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் ஆராதனை 77
9. மோக்ஷமென்னும் மாடிக்கு பக்தி மார்கத்தின் ஏணிப்படிகள் 87

உ





உ

ஸ்ரீ சிவன் ஸார்

மஹாபெரியவாளுடைய பூர்வாஸ்ரம தம்பி ஸ்ரீ சிவன் ஸார். அவரை தரிசிக்கிற பாக்கியமும் அவரோட பழகிய போது சில அனுபவங்களும் எனக்கு கிடைச்சுது. இதெல்லாம் அனுபவங்கள் என்று சொல்லக்கூடாது. ஒவ்வொரு தரிசனமும், அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் பெரிய அனுக்ரஹம். அதை இப்ப நான் புரிஞ்சுகிறேன். அதெல்லாம் பகிர்ந்துக்கணும்னு சில பேர் கேட்டா. நான் ரொம்பவே தயங்கிண்டே இருந்தேன். ஏன்னா, அவ்ளோ பெரிய மஹான், நம்மகிட்ட பழகி இருக்கார், வாஸ்தவம் தான். ஆனா அந்த லக்ஷணங்கள் ஒண்ணுமே நம்மகிட்ட இல்லையேன்னு நான் ஒவ்வொரு வாட்டியும் நினைப்பேன். இருந்தாலும் அந்த அனுபவங்களோட sweetness, அதை பகிர்ந்துகிறதுல தப்பு இல்லைன்னு நினைச்சு, அதைப்பத்தி பேசறேன்.

நான் ஸ்வாமிகள் கிட்ட (திருவல்லிக்கேணி பெரியவா என்றும் ஆங்கரை பெரியவா என்றும் அழைக்கப்பட்ட ஆங்கரை ஸ்ரீ கல்யாணராம பாகவதர்) பழகிண்டு இருந்தேன். அவர் என்னைத் தன் குழந்தையா வெச்சு காப்பாத்திண்டு இருந்தார். அவர் மூகபஞ்சசதி, விஷ்ணு சஹஸ்ரநாமம், ஆதிசங்கரரோட ஸ்லோகங்கள், சுந்தரகாண்டம் பாராயணம் என்று ஒவ்வொண்ணா ஆரம்பிச்சு சொல்லி கொடுத்துண்டு இருந்தார். ஸ்வாமிகள் கிட்ட பக்தியா இருந்தவா மஹாபெரியவா கிட்ட போனா, பெரியவா ரொம்ப கருணையா விசாரிச்சு, தனி அனுக்ரஹம் பண்ணியிருக்கா, என்று நிறைய கேள்விப்பட்டு இருந்தேன். ஸ்வாமிகள் அடிக்கடி "மஹாபெரியவாளை தரிசனம் பண்ணு" என்பார். நான் காஞ்சிபுரம் போய் பெரியவாளைப் பார்ப்பேன். ஆனா பெரியவா கிட்ட நெருங்கறதுக்கு ரொம்ப பயம். அந்த மடத்து ஆசாரங்கள், பெரியவாளோட தெய்வத்தின் குரல் படிச்சிருந்தேன். அதெல்லாம் வெச்சுண்டு, என்னமோ ஒரு பயம். ஆனா நமக்கும் அந்த மாதிரி ஸ்வாமிகளோட பக்தன் அப்படிங்கிற அளவுல மஹாபெரியவா அனுக்ரஹம் பண்ணனும், அப்படிங்கிறது பிரார்த்தனை. அது மனசுல இருந்துண்டே இருந்தது.

“**குருமூர்த்தே த்வாம் நமாமி காமாக்ஷி**” னு பெரியவாளை நமஸ்காரம் பண்ணு, உனக்கு பெரியவா அனுக்ரஹம் பண்ணுவா, என்று ஸ்வாமிகள் தினம் தினம் சொல்லிண்டு இருந்தார். அதனால அந்த ஒரு பிரார்த்தனை. மஹாபெரியவா கிட்ட ஒரு பிரார்த்தனை பண்ணினா அது நிறைவேறாம போகாது அப்படிங்கறதுக்கு, மஹாபெரியவா ஒரு குழந்தையாட்டம் அணைச்சு ஒருத்தருக்கு அன்பு பாராட்டினா எப்படி இருக்குமோ, அதே அனுபவத்தை நான் சிவன் ஸார் கிட்ட அடைஞ்சேன்.

சிவன் ஸாரைப் பத்தி ஸ்வாமிகளே தெரிஞ்சுண்டு அவரை தரிசித்த போது, ரொம்ப ஆச்சர்யப்பட்டார். "இப்படி ஒரு பெரிய சித்த புருஷர், பசி தாகத்துக்கு எல்லாம் மேலே இருக்கார், மஹாபெரிவாளோட சொந்த தம்பி, மடத்துல இவ்ளோ வருஷம் பழகி இருக்கோம், இப்படி ஒருத்தர் இருக்கார்னே தெரியலியே! இவ்ளோ வருஷம் கழிச்சுதான் நமக்கு தெரிஞ்சதிலிருந்தே இவர் எவ்வளவு பெரிய சித்த புருஷர் அப்படிங்கிறது தெரிகிறது. அவர் நினச்சாதான் அவர் கிட்ட நெருங்கவே முடியும்னு தெரியறது. பெரியவா மௌனம் போட்டு விட்டதால், எனக்கு வழி காட்ட ஸாஷாத் பெரியவாதான், சிவன் ஸார் ரூபத்துல வந்திருக்கார்", என்று ஸ்வாமிகள் உருக்கமாக சொல்லுவார்.

ஸ்வாமிகள் என்னிடம், சிவன் ஸாரை பாக்கும் போது “ஸதாசிவ ப்ரும்மேந்திர ஸ்வரூபேப்யோ சிவன் ஸார் சத்குருப்யோ நமஹ” என்று சொல்லி நமஸ்காரம் பண்ணு, என்று சொன்னார். நான் ஒரு நாள் போனேன். முதல் தரிசனம். ஸ்வாமிகள் சொல்லித் தந்த படி நமஸ்காரம் பண்ணினேன். “என் பேர் கணபதி சுப்ரமண்யம். திருவல்லிக்கேணில ஆங்கரை கல்யாணராம பாகவதர்னு ஒரு பெரியவா இருக்கா, பாகவத ராமாயணம் படிக்கிறவா. அவர் கிட்ட நான் ஸ்தோத்திரங்கள் எல்லாம் படிச்சுக்கிறேன்" என்று சொன்ன உடனே சிவன் ஸார், “அடியார்க்கு அடியனா நீ?” என்று கேட்டார். எனக்கு சட்டுன்னு புரியவேயில்ல. “என்ன பெரியவா?” என்று கேட்டேன். “நீ அடியார்க்கு அடியன்” என்று திரும்ப சொன்னவுடன் எனக்கு அப்படி ஒரு சந்தோஷம். நான் எதை மஹாபெரியவா கிட்ட பிரார்த்தனை பண்ணிண்டு இருந்தேனோ அது எனக்கு கிடைச்சுடுத்து. அப்பவே நமஸ்காரம் பண்ணி சிவன் சாருக்கு அடிமை ஆகி விட்டேன்.

அப்படி அவரை பார்த்த நாள் முதல் என்னை ஆட்கொண்டு ரொம்ப அன்பு பாராட்டினார். அவர் என்னை மாதிரி குழந்தைகள் எல்லாம் வந்தா கொடுக்கறதுக்கு, யாரையாவது “பாதாம் அல்வா பண்ணிண்டு வா” அப்படிம்பார். அந்த மாதிரி பக்ஷணங்கள் எல்லாம் பண்ணச் சொல்லி, அதை வெச்சுண்டு இருப்பார். நாங்க எல்லாம் அங்க வருவோம். மணிக்கணக்காக அங்க உட்கார்ந்துண்டு இருப்போம். ஏதாவது சின்ன சின்ன வேலைகள் குடுப்பார். அவர் கை கால்களில் தேங்காய் எண்ணெய் தடவி விடச் சொல்லுவார். கிளம்பும் போது எங்களுக்கு அந்த பாதாம் அல்வாவை பிரசாதம் மாதிரி கொடுப்பார். “நீ போய் பஜ்ஜி வாங்கிண்டு வா” அப்படிம்பார். தான் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு எனக்கு மீதியை தந்து விடுவார். "இது தனி taste இல்ல" என்று சொல்வார். “நீ இளநீ வாங்கிண்டு வருவியே” என்று சொல்வார். சரீன்னு போய் இளநீர் வாங்கிண்டு வருவேன். இப்படி அன்பு பாராட்டி, ஒரு வாரம் பத்து நாள்ல ரொம்ப நெருக்கம் ஆயிட்டார். அப்புறம் ஒரு மாதிரி regular ஆக போனேன்.

உ

ஒரு நாள் அவருடைய ஜாதகத்தையும், கௌசிக நாடின்னு அவரைப் பத்தி ஒரு நாடி இருந்தது. “அதை எழுதிக்கோ” அப்படினார். அதுல எவ்ளோ ஒசத்தியா அவரைபத்தி போட்டிருக்கு!

இது விஸ்வாமித்ர மகரிஷியோட வார்த்தைகள் -

“தாயான திரிபுர சுந்தரியே உந்தன்

தக்க அருள் இவன் அகம் புகுந்து தாயே

தக்க அத்வைதம் அதின் சாரமெல்லாம்

சத்குரு பேரருளால் தானே வந்து வலுவாய் கூடி

நான் இதை நடுவில் இருந்து படிக்கறேன், முன்னாடி உலக குருவான, மடாதிபதியான, இவருடைய அண்ணா மஹாபெரியவா, இவருடைய சத்குருன்னு mention பண்ணிட்டார்.

"அத்வைதம் அதின் சாரமெல்லாம்

சத்குரு பேரருளால் தானே வந்து வலுவாய் கூடி

பூரணத்தை மருவு சுக விழியினால் தரிசித்து ஏற்றி

எந்த வித செயல்கள் இவன் செய்த போதும்

எப்போதும் மாநத நிஷ்டை கூடி

சுந்தர ஜோதியின் அடியில் நிற்பன்"

என்று எவ்ளோ அழகான வார்த்தைகள்! இதுல,

"அம்பிகையே நேரில் கௌசிகருக்கு அறிவித்ததாவது"

அதாவது கௌசிகர் சொல்லி முடிச்ச உடனே அம்பாளே பதில் சொல்றா -

"இம்மைந்தன் உயர் பிறவி ஓங்கொடுக்கும்

இயல்பான தாய் தந்தை ஓங்கொடுக்கும்

பன்னிவன் கனிஷ்டன் கடை பெருத்த முக்தன்

பாரெங்கும் எம்மதத்திற்கும் ஆசான்

என்அருள் மிக வாய்ந்தோன்

நவசித்தர்க்கும் எழிலான மேம்புடைய ஞானி"

என்று அம்பாள் மஹாபெரியவாளை பத்தி “நவசித்தர்க்கும் எழிலான மேம்புடைய ஞானி” னு சொல்றா. ஸார் இதை எழுதிக்க சொன்னார். அவருடைய ஜாதகத்தில் அகண்ட சாம்ராஜ்ய யோகம் இருப்பதை காண்பித்தார்.

அப்புறம் ஸார், தன் கிட்ட வந்தவாளை எல்லாம், விலை கொடுத்து, ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகத்தை வாங்கி அதை படிக்கச் சொல்வார். அப்போ அந்த புஸ்தகத்துடைய விலை நூற்றி இருபது ரூபாயோ என்னவோ. அதை வாங்கிண்டேன். என் புஸ்தகத்தில்

“With best blessings to Chiranjeevi Ganapathy Subrahmanyam - Sadasivam”

என்று எழுதி கொடுத்து இருக்கிறார். ஒரு வாட்டி ஸார் என் friend சந்திரசேகரிடம் “க்ஷேமமாக இரு” என்று சொல்லி விட்டு “க்ஷேமமாக இரு” என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? என்று கேட்டார். அவன் "பெரியவா சொல்ல வேண்டும்" என்று கேட்ட போது “கார் பங்களா எல்லாம் இல்லை. health and happiness” என்று சொன்னார். Best blessings என்பதற்கு அதே பொருளை நான் வெச்சுண்டு இருக்கேன்.

ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகத்தில் அவர் கிட்டேயே நிறைய portions படிச்சேன். முதல்ல படிக்கிறவாளுக்கு ஸோலனும் க்ரீஸசும் என்கிற ஒரு topic படிக்கச் சொல்வார். ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகத்தை மூணு ஆவர்த்தி படிக்கச் சொன்னார். அதை படிச்சு முடிச்சேன். அதுக்கப்பறம் திரும்பவும் படிக்கட்டுமான்னு கேட்டேன். "நீ இதைத்தான் படிச்சு முடிச்சுட்டியே. நீ ராமகிருஷ்ண பரமஹம்சரோட புஸ்தகங்கள் வாங்கிப் படி," என்று சொன்னார். நான் அப்போ வேலையை விட்டுட்டு இருந்தேன். எனக்கு தினம் அப்பா பத்து ரூபா கொடுத்துண்டு இருந்தா. அந்த புஸ்தகங்கள் வாங்கறதுக்கு வசதி இல்ல. ராமகிருஷ்ண பரமஹம்சரோட புஸ்தகங்கள் அவ்வளவு மலிவு விலையில குடுக்கறா. அதை வாங்க முடியல. ஸ்வாமிகள் எனக்குப் பணம் கொடுத்தார். “சிவன் ஸார் சொல்லியிருகார்னா நீ உடனே வாங்கிப் படி. இன்னிக்கே வாங்கிப் படி” என்று சொல்லி என்னை படிக்க வெச்சார்.

அந்த ராமகிருஷ்ண பரமஹம்சரோட அமுதமொழிகள் மூணு பாகங்கள். அதுல மகேந்திரநாத் குப்தாங்கிறவர் ராமகிருஷ்ணரோட வாழ்கையில நடந்த சில நிகழ்ச்சிகளை பதிவு பண்ணியிருக்கார். அதை படிச்ச போது அந்த காட்சிகள் எல்லாம், ஸ்வாமிகள் கிட்ட நடக்கிற மாதிரியே தோணித்து. ஸ்வாமிகளுடைய அந்த தெய்வீகப் பித்து, பணத்துல பற்றின்மை, ஞானம் இதெல்லாம் புரிஞ்சுகிறதுக்காகத் தான், என்னை சிவன் ஸார் ராமகிருஷ்ண பரமஹம்சரை பத்திப் படின்னு சொன்னார் என்று நினைக்கிறேன்.

ஸ்வாமிகளோட பூர்வாஸ்ரமத்துல அப்பா வெச்ச பேர் "ராமகிருஷ்ண சர்மா". கூப்பிட்ட பேர் கல்யாணராமன். ஸ்வாமிகள் ஜாதகம், எண்பது பெர்சென்ட் ராமகிருஷ்ண பரமஹம்சர் ஜாதகம் போலவே இருக்கும். வாழ்க்கையும் அப்படி தான். தமிழ்நாட்டில் இவர் அவதரித்ததால் ஆசாரங்கள் மட்டும் கொஞ்சம் வேற மாதிரி. உலகத்தில் ஒட்டியும் ஒட்டாமல் வாழ்ந்த மஹான்.

இந்த போஸ்ட் கார்ட் incident முன்னாடியே நான் எழுதியிருக்கேன். சிவன் ஸாரோட ஏணிப்படிகளில் மாந்தர்கள் படிச்சா, அதுல நூத்தி எண்பது para இருக்கும். பாபி, பாமரன், விவேகி, ஸாது, அதுக்கு மேலே உயர் விவேகிகள் அப்படி எல்லாம். இதுல ஸ்வாமிகள் ஒரு தெய்வஸாதுவாக, மகானாக இருக்கார், சிவன் ஸார் துறவியா இருக்கார், மஹாபெரியவா ஞானி அப்படிங்கிறது புரிஞ்சது. ஆனா நம்மால இந்த பாபி, பாமரன் தாண்டவே முடியலயே! எது right, wrong தெரிஞ்சுகிறது, அதுல ஒரு சொட்டாவது முயற்சி பண்றது, விவேகம். தன்னலமே இல்லாம இருக்கறது ஸாது குணங்கள். இதெல்லாம் முடியவே முடியாதுங்கிறது போல இருக்கே காலம். இந்த இருபது வயசுக்குள்ள படிச்ச புஸ்தகங்களும், பார்த்த சினிமாவுமே, புத்தியை கெடுத்துடுத்து. இதுல எங்கே இருந்து மீள்றது, என்று ரொம்ப பயம் வந்தது.

ஸார்க்கு ஒரு கார்ட்ல எழுதி போட்டேன். "மஹாபெரியவாளை பாத்துருக்கேன், உங்களை தரிசனம் பண்ணியிருக்கேன். ஸ்வாமிகளை ஆச்ரயிச்சிருக்கேன், ஆனாலும் இந்த படிகள்ல மேலே போகறதுக்கு வழியே தெரியாம இருக்கே. நீங்கதான் எனக்கு தயவு பண்ணணும்" என்று எழுதி இருந்தேன். நான் போஸ்ட் கார்ட்ல எழுதி ஸார் இருந்த வ்யாசராவ் தெருவுக்கு போஸ்ட் பண்ணிட்டேன்.

அப்புறம் நாலு நாள் கழிச்சு அங்க போனேன். நான் போன அன்னிக்குதான் அந்த கார்டு வந்தது. போஸ்ட்மேன் கொண்டு வந்து கொடுத்தார். திருவாரூர் கணபதி சுப்ரமணிம்னு ஒருத்தர் அங்க அன்னிக்கு இருந்தார். அவர் அதை வாங்கி உள்ள கொண்டு வந்தார். "இவன் லெட்டர் போட்டுருக்கான்", என்று சொன்னார். ஸார் உடனே 'படீ'ன்னு சொன்னார். அவர் அதை படிச்சார். அப்போ சிவன் ஸார் என்னைப் பாத்து "நமஸ்காரம் பண்ணு" அப்படினார். நான் எழுந்து அவருக்கு நமஸ்காரம் பண்ணினேன். "நீ ஏன் பயப்படற. நீ தான் திருவல்லிக்கேணி பெரியவா காலைப் பிடிச்சுண்டு இருக்கியே. அவரை தியானம் பண்ணு, மேலே போலாம்" என்று சொன்னார். ஸாருக்குப் பெரிய கைகள். பெரிய கால்கள். அந்த பெரிய கையினால எனக்குப் பெரிய அபயம் கொடுத்தார். அந்த வார்த்தைகள் அவ்வளவு ஆறுதலா இருந்தது. அப்புறம் அந்த லெட்டரையும் எங்கிட்ட கொடுத்தார். நான் அதை வெச்சிண்டு இருக்கேன்.

அப்புறம் சாயங்காலம் வந்து ஸ்வாமிகள் கிட்ட இந்த மாதிரி நடந்துது என்று சொன்னேன். ஸ்வாமிகள் "நீ தியானம் பண்ணுன்னா ஏதாவது meditation class

போயிடாதே. நான் சொல்லிக் கொடுத்த ஸ்தோத்திரங்களை எல்லாம் பாராயணம் பண்ணு, இதுதான் தியானம்" என்று சொனார். அந்த வார்த்தைகளும் அவ்வளவு powerful. ஏன்னா, நாம கார்யமா ஒண்ணு பண்ணினா தான் நம்மால தியானம் எல்லாம் பண்ண முடியும். உட்கார்ந்து மூக பஞ்சசதி படி, ராமாயணம் படி என்று சொன்னாதால், அந்த ராமாயணத்தப் படிக்கும் போது ஸ்வாமிகள் ஞாபகம் வரது. அதுதான் தியானம். அப்படியில்லாம நாம வேற எப்படி மஹான்களை தியானம் பண்ண முடியும்? அவருடைய பேச்சை கேட்டு இந்த ஸ்தோத்திரங்கள் படிக்கிறதனால, அட்லீஸ்ட் ஒரு நாளைக்கு எல்லா ஓட்டத்துக்கு நடுவுலயும் கொஞ்ச நேரம் இவாளை எல்லாம் நினைக்க முடியறது.

அந்த காலகட்டத்துல, ஸ்வாமிகள் சிவன் ஸார் கிட்ட உத்தரவு வாங்கிண்டு ஸன்யாசம் வாங்கிண்டார். சிவன் ஸார் "ஸன்யாஸத்துக்குத் தடை விதித்து விடுவதே நலம், எல்லாரும் இந்த காலத்துல அந்த ஆஸ்ரமத்துக்கு களங்கம் கற்பிக்கிறா" என்று எழுதியிருக்கார். அதனால ஸ்வாமிகள் ஒருத்தர் மூலமாக சிவன் ஸார்கிட்ட ஸன்யாசம் வாங்கிக்கிறதுக்கு permission கேட்டார். "அவருக்கு என்னத்துக்கு? அவர் உத்தம ஜீவன். அவர் வேஷ்டி கட்டிண்டு இருந்தாலே ஸன்யாசி தான்" என்று ஸார் சொன்னார். அப்ப ஸ்வாமிகள் விட்டுட்டார். அப்புறம் திரும்பவும் ஒரு வாட்டி கேட்கச் சொன்னார். ஸார் "ஆஹா அவசியம் வாங்கிக்கச் சொல்லுங்கோ. அமோகமா இருப்பார். அந்த ஆத்து மாடியிலேயே இருக்க சொல்லுங்கோ" என்று சொல்லிட்டார். அப்பறம் ஸ்வாமிகள் ஸன்யாசம் வாங்கிண்டார். முண்டனம் பண்ணிண்டு, ப்ரைஷ மந்த்ரதைச் சொல்லி, மஹாபெரியவா பாதுகையில இருந்து காவியை எடுத்துக் கட்டிண்டு, ஸன்யாசம் வாங்கிண்டார். எனக்கு அன்னிக்கு ஸ்வாமிகள் ஸன்யாசம் எடுத்துக்கற அந்த காட்சியை பாக்கற பாக்கியம் கிடைச்சுது.

அதுக்கப்பறம் சிவன் ஸார் பல பேர் கிட்ட பல தடவை

"இவர் தான் geniune ஸன்யாசி."

"இந்த மாதிரி பாகவதத்துக்காக, ராமாயணத்துக்காக தன்னுடைய உடல், பொருள் ஆவியெல்லாம் அர்ப்பணிச்சவாளை பாக்கறதே புண்யம் என்று நான் எல்லார்கிட்டயும் சொல்லிண்டு இருக்கேன்."

"அவா உடம்பு நன்னா இருக்கணும். அபூர்வமான ஆத்மா."

"சாந்தத்தோட இருக்கார். provoke பண்ணாலும் கோபப் படாம இருக்கறதுக்குப் பேர் தான் சாந்தம். அப்படி பரம சாந்தத்தோட இருக்கார்."

"இவாளை ஆச்ரயிச்சிருக்கிறது உனக்கு ரெண்டாயிரம் ரூபா வேலைக்கு மேலே," (அப்போ நான் வேலை தேடிண்டு இருந்தேன். அதனால இவாளை ஆச்ரயிச்சிருக்கிறது அவ்ளோ பாக்கியம் என்ற அர்த்தத்தில்) சொன்னார்.

அப்படி "geniune ஸன்யாசி, ஸன்யாசத்துக்கு இவர்தான் பாத்திரம். இந்த அனுஷ்டானத்தோட பாகவதம் படிச்சுண்டு இருந்தாலே போறும், வேற தண்ட கமண்டலங்கள் வேண்டாம். அவரை சாதாரணமா ஸன்யாசின்னு சொல்லக் கூடாது. யதீந்திராள் என்று சொல்லணும்" இப்படி கோவிந்த தாமோதர ஸ்வாமிகளைப் பத்தி ஸார் நிறைய சொல்லிண்டே இருந்தார்.

என் கிட்டே நிறைய தடவை சொன்னார். ஜானகிராம மாமா, நாகராஜ மாமா, நாராயண ஐயர், எல்லார் கிட்டயும் ஸ்வாமிகளைப் பத்தி ரொம்ப சொன்னார். மோகன், சிவராமன் கௌரி, அப்படி பல பேரை ஸ்வாமிகள் கிட்ட போய் நல்ல விஷயங்கள் கத்துகோங்கோன்னு அனுப்பி வெச்சார்.

அப்படி அவருடைய ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகத்து மூலமாகவும், ஸ்வாமிகளோட தூய்மை, அவரோட உயர்ந்த நிலை, என்னனு புரிஞ்சுது. மேலும் ஸ்வாமிகள் பெருமையை சிவன் ஸார் சொல்லிண்டே இருந்தார். நானும் அப்பதான் ஸ்வாமிகள் கிட்ட பழகிண்டு இருந்தேன். எனக்கெல்லாம் அதை கேட்டதுனால தான் ஸ்வாமிகள் கிட்ட பக்தி வந்தது. ஸ்வாமிகள் ரொம்ப எளிமையா இருப்பார். அவர் தனியா பாராயணம் பண்ணிண்டு இருப்பார். வந்தவாளுக்கு ஆறுதல் சொல்லி, அவா கஷ்டம் தீரும். இத்தனை தூரம் அவரோட மஹிமையை புரிஞ்சுண்டு, அவர் கிட்ட பக்தியோட இருக்கணும்கிறது எனக்கு சிவன் ஸார் சொல்லிச் சொல்லிதான் வந்தது.

ஒரு வாட்டி நான் ஸ்வாமிகளோட உட்கார்ந்துண்டு இருக்கேன். ஸ்வாமிகள் மூக பஞ்சசதி படிச்சுண்டு இருக்கார்.

"காமாக்ஷி தாவாக கடாக்ஷ யதீஷ்வரொஸெள" என்று படிச்சார். காமாக்ஷியோட கடாக்ஷம் ஒரு யதீஷ்வரர் போல விளங்குகிறது, என்று அர்த்தம். அப்போது ஸ்ரீ நாராயண ஐயர் உள்ள வந்தார். "நான் சிவன் ஸாரை தரிசித்து நமஸ்காரம் பண்ணிட்டு வந்தேன்"னு சொன்னார். "உங்களை சாதாரண ஸன்யாசின்னு சொல்லக்கூடாது, யதீந்திராள் னு சொல்லணும்னு சொன்னார்" அப்படினார். படிச்ச அந்த ஸ்லோகத்தோட வரிக்கும், நாராயண ஐயர் சொல்றதுக்கும் அவ்வளவு பொருத்தமா இருந்தது.

ஸ்வாமிகளும் சிவன் ஸார் கிட்ட தெய்வ பக்தியா இருந்தார். அங்கே வந்தார்னா குழந்தை மாதிரி இருப்பார். பாகவதத்துல இருந்து, ஸாதுக்களை, யோகிகளை, புகழ்ந்து போற்றி, வரக்கூடிய ஸ்லோகங்களை எழுதிண்டு வருவார். அந்த ஸ்லோகங்களைச் சொல்லி நமஸ்காரம் பண்ணுவார். சில சமயம் என்னை

படிக்கச் சொல்வார். ஸ்வாமிகள் மஹாபெரியவா கிட்ட எப்படி இருந்தாரோ அதே மாதிரி சிவன் ஸார் கிட்ட, பக்தியோடு குழந்தை போல, தனக்கு எதுவும் தெரியாது, அனுக்ரஹம் வேணும் என்று இருப்பார். இப்படி இரண்டு மஹா புருஷர்களை சேர்ந்து தரிசத்தது எனக்கு ஒரு பெரும் பாக்கியம். ஒரு வாட்டி ஸார் ஸ்வாமிகள் கிட்ட "ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகத்தை படிச்சுட்டு நான் ஒரு மேதாவின்னு சொல்றா. பகவான் dictate பண்ணினார். நான் எழுதினேன். அவ்வளவு தான்!" என்று சொன்னார்.

ஸ்வாமிகள் ஆசார சீலர். ஆனால் சிவன் ஸார் சாப்பிட்டு விட்டு குடுப்பதை "உச்சிஷ்ட பிரசாதம்" என்று பக்தியோடு வாங்கி சாப்பிடுவார்.

ஸ்வாமிகள் உடம்பு ரொம்ப தளர்ந்து போன போது பாராயணம் மட்டும் பண்ணிண்டு இருந்தார். ஆனால் சிவன் ஸார் ஆசைபட்டார்னு சொல்லி, பதினைஞ்சு நாள்ல ரெண்டு ரெண்டு மணிநேரமா ஸ்ரீமத் பாகவதத்தை உபன்யாசம் பண்ணி இருக்கார். அந்த tape கூட இப்ப கிடைக்கறது. அது ஒரு பெரிய லாபம்.

ஸ்வாமிகள் ஒரு நாளைக்கு லலிதா ஸஹஸ்ரநாமம் பாராயணம் பண்ணிண்டு இருந்தார். அதுல "ஸதாசிவா அனுக்ரஹதா பஞ்சக்ருத்ய பராயணா" என்று வந்தவுடனே, “ஆஹா” என்று சொல்லி, ”சிவன் ஸாரோட பூர்வாஸ்ரம பேர் ஸதாசிவம். அந்த ஸதாசிவ அனுக்ரஹத்துக்காக தான் நான் காத்துண்டு இருக்கேன்.” என்று சொன்னார். அவ்வளவு உத்தம பக்தி வெச்சுண்டு இருந்தார்.

ஒரு வாட்டி சிவன் ஸார் “இந்த ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகத்துல ஒரு புஷ்பத்தை போட்டுண்டு வந்தாலே மேலே போகலாம்” என்று என்கிட்டே சொன்னார். நான் அதை ஸ்வாமிகள் கிட்ட சொன்ன அன்னியிலேருந்து, அவருடைய கடைசி நாள் வரைக்கும், தன் பூஜையில் அந்த புஸ்தகத்தை வெச்சு, அதுக்கு சந்தன குங்குமம் இட்டு புஷ்பம் போடுவார். அந்த புஸ்தகம் இன்னிக்கும் ஸ்வாமிகள் அதிஷ்டானத்தில் பூஜையில் இருக்கிறது.

ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகம், நர்மதா பதிப்பகத்தில் கிடைக்கிறது. தெய்வீகத்தை பற்றியும் ஆத்மீகத்தை பற்றியும் புரிந்து கொள்ள அவசியம் படிக்க வேண்டிய நூல். அதில் உள்ளது போல மஹான்கள் சரித்திரம், அவ்வளவு இனிமையாக, தெளிவாக எங்குமே பார்க்க முடியாது. வேத, தர்மசாஸ்த்ர, இதிகாச புராணங்களுக்கு நிகரான பொக்கிஷம்.

ஒரு வாட்டி நான் சிவன் ஸார் கிட்ட "உங்களுடைய ஏணிப்படிகளில் மாந்தர்கள் ஸ்ரீமத் பகவத்கீதையின் ஸாரம் ஸார். சிறந்த விவேகி, முற்றின விவேகி நிலைகள் வரைக்கும் கர்ம யோகமும், தெய்வ ஸாது, மஹான் வரைக்கும் பக்தி யோகமும், துறவி, ஞானி நிலைகள் ஞான யோகத்தையும் சொல்றாப் போல

இருக்கு" னு சொன்னேன். ஸார் புன்னகையோடு "வாஸ்தவம்! ஆனால் நான் உங்களுக்கெல்லாம் புரியற மாதிரி சொல்லி இருக்கேன்!" என்று சொன்னார்.

ஸ்வாமிகளை கோவிந்த தாமோதர ஸ்வாமிகள்னு கூப்பிடறதுக்கும் சிவன் ஸார் தான் காரணமா இருந்தார். ஒரு நாள் என்கிட்டே "அவாளை பெரியவான்னு சொல்லலாம். நான் exaggerate பண்றேன்னு நினைப்பா. ஸ்வாமிகள்னு சொல்லலாம்" என்று சொன்னார். நான் அதை வந்து ஸ்வாமிகள் கிட்ட சொன்னேன். கோவிந்த தாமோதர ஸ்தோத்திரத்துல ஸ்வாமிகளுக்கு ரொம்ப ப்ரியம். கோவிந்த நாமத்துலயும் ரொம்ப ப்ரீதி. அதுனால கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் னு கூப்பிடுங்கோன்னு சொன்னார்.

ஒரு வாட்டி நானும் என் தம்பியும் கிளம்பி ஹரித்வார், ரிஷிகேஷ் போயிட்டு வந்தோம். ஒரு canல கங்கா ஜலம் கொண்டு வந்தோம். அந்த கங்கா ஜலத்தை எங்கப்பா ஸ்வாமிகளுக்கு கொடுன்னு சொன்னார். நான் அதை ஸ்வாமிகளுக்கு கொடுத்தேன். அவர் அதை கொஞ்சம் எடுத்து ப்ராசனம் பண்ணிட்டு "இதை சிவன் ஸார் கிட்ட கொடு. அவர் தான் பரமேஸ்வர ஸ்வரூபம்" என்று சொன்னார்.

சிவன் ஸார் கிட்ட கொடுத்த உடனே அவர் "ஸ்வாமிகளுக்கு கொடுத்தியா?" என்று கேட்டார். நான் "கொடுத்துட்டேன்" அப்படினேன். சிவன் ஸார் "இந்த canஐ உடனே திருப்பித் தரணுமா?" என்று கேட்டார். "நீங்களே வெச்சுகோங்கோ ஸார்" என்று சொன்னேன். சிவன் ஸார் ஆறு மாசம், ஒரு வருஷத்துக்கு ஒரு தடவை தான் குளிப்பார். அப்படி அவர் ஸ்நானம் பண்ணும் போது இதை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பதற்காக "இந்த can இங்க இருக்கலாமா?" ன்னு கேட்டார். "தாராளமா. உங்களுக்காக தான் ஸார்" என்று சொன்னேன்.

ராமநாராயணன், ஜானகிராம மாமாவோட பிள்ளை. அவன் சிவன் ஸார் மேலே ரொம்ப பக்தியா இருந்தான். ஸ்வாமிகள் ரொம்ப encourage பண்ணி "நீ போய் அவருக்கு கைங்கர்யம் பண்ணு"ன்னு சொல்லி, சொல்லி அதை கெட்டியா பிடிச்சுண்டான். நிறைய கைங்கர்யம் பண்ணியிருக்கான். ஒரு நாள் அவா ஆத்துல ஒரு ராம பட்டாபிஷேகப் படம் கீழ விழுந்து frame உடைஞ்சுடுத்து. அது கொஞ்சம் மனசுக்கு கஷ்டமா இருந்தது என்று அவன் வந்து ஸார் கிட்ட கேட்டிருக்கான். "இந்த மாதிரி ஆத்துல படம் விழுந்து உடைஞ்சுது. ஏதாவது பரிகாரம் பண்ணணுமா? என்று கேட்டவுடன், சிவன் ஸார் "நீ ஸ்வாமிகள் கிட்ட கேட்டு அவர் என்ன பண்ணணும்னு சொல்றாரோ அதை பண்ணு" அப்படினார். ஸ்வாமிகள் "விபீஷண சரணாகதி மூணு ஸர்கம். அதை பாராயணம் பண்ணலாம்" என்று சொன்னார். அதை அவா அப்பா பண்ணினார். அந்த மாதிரி சிவன் ஸாருக்கு, ஸ்வாமிகள் சொல்றது எல்லாம் ஈஸ்வர வாக்கு.

கே.வி.நாராயணஸ்வாமினு பாட்டுப் பாடறவர் ஒருத்தர் இருந்தார். அவர் சிவன் ஸாரை நமஸ்காரம் பண்ண வந்தார். சிவன் ஸார் அவர்கிட்ட “திருவல்லிக்கேணில ஒரு பெரியவா இருக்கா, அவரை போய் நீ நமஸ்காரம் பண்ணுன்னு” சொல்லி, “அவர்கிட்ட தக்ஷிணாமூர்த்தி சம்பந்தமா ஏதாவது ஒரு மந்திரத்தை க்ரஹிச்சுக்கோ” என்று சொன்னார். அவர் அதே மாதிரி வந்து கேட்டுண்டார். அப்பறம் அவர் அடிக்கடி ஸ்வாமிகள் கிட்டே வந்து பாடுவார்.

"திருவல்லிக்கேணி ஸ்வாமிகள் கிட்டயிருந்து வந்திருக்கேன்", என்று ஸ்வாமிகள் பேரைச் சொன்னாலே கைகள் ரெண்டையும் தூக்கி தலை மேலே வெச்சுண்டு சிவன் ஸார் நமஸ்கரிப்பார். இப்படி கொண்டாடறேளே னு அதை பார்க்க ஆச்சர்யமா இருக்கும்.

ஒரு நாள் “ஸ்வாமிகளுக்கு இன்னிக்கு அறுபத்து மூணாவது ஜென்ம நக்ஷத்ரம். அவா ரொம்ப நாள் இருக்கணும்” என்று சொன்னேன். "இருப்பா. அவர் நன்னா இருக்கணும், நானும் வேண்டிக்கறேன்" என்று சொன்னார்.

ஒரு வாட்டி சிவன் ஸார் திருவாரூர் போயிட்டு வந்தார். ஒரு பத்து பதினைஞ்சு நாள் இருக்கும். திரும்பி வந்தபோது நான் உள்ள போனேன். அவர் “இப்பதான் உன்னை நினைச்சுண்டேன். நீ வந்துட்டு வந்துட்டு பூட்டின கதவ பாத்துட்டு போயிருப்பியே என்று உன்னை நினைச்சுண்டே இருந்தேன்” அப்படினார். இப்படியெல்லாம், மஹான்கள் இன்னிக்கும் நினைச்சு உருகும் அளவுக்கு அன்பு பாராட்டியிருக்கா.

ஆனா அந்த கால கட்டதுத்துல எனக்கு வேலைக்குப் போகப் பிடிக்கல. நான் ஸ்வாமிகள்கிட்ட “என்னால வேலை பாக்க முடியாது, நான் நீங்க சொல்ற பாராயணங்கள் பண்றேன், உங்களோடவே இருக்கேன்” என்று சொல்லி வேலையை விட்டுட்டேன். அப்போது அவர் “நீ ஏன் இப்படி பண்ற? அப்பா அம்மா படிக்க வெச்சிருக்கா, தங்கை கல்யாணம் இருக்கு, நீ வேலைக்குப் போகணும், உன்னோட ஜாதகத்துலயும் உனக்கு உலக வாழ்க்கைதான் இருக்கு, இந்த மாதிரி life இல்லை” என்று ஸ்வாமிகள் என்னை direct பண்ணிண்டு இருந்தார். அந்த நேரத்தில் சிவன் ஸார் தன்னுடைய ஒரு photo எனக்கு குடுத்தார். அதில் ஸார் ஒரு மாலை போட்டுக் கொண்டு இருப்பார். ஸ்வாமிகள் "பார்! உனக்கு குடுத்த photo வில் ஸார் மாலை போட்டுக் கொண்டு இருக்கிறார். உனக்கு க்ருஹஸ்த ஆஸ்ரமம் தான் நல்லது, என்பதற்காகத் தான்" என்று சொன்னார். சிரித்து விட்டேன்.

வேலை போயிடுத்து, உடம்பு ரொம்ப படுத்தித்து. விரை எல்லாம் வீங்கிண்டு hydrocilனு சொல்லி, கார்த்தால எல்லாம் வலி, சாயங்காலம் ஆச்சுனா தலைவலி. இது ஒரு ஆறு மாசம் இருந்தது. ஸ்வாமிகள் சொல்லி ஹோமியோபதி மருந்து சாப்பிட்டுண்டு இருந்தேன். இதை அனுபவிச்சுதான்

தீர்க்கணும்கிற மாதிரி இருந்தது. ஒரு வாட்டி ஸ்வாமிகள் சிவன் ஸார் கிட்ட, “இந்த குழந்தைக்கு ரொம்ப உடம்பு படுத்தறது” என்று சொன்ன உடனே, ஸார் “சரியாப் போயிடும்” அப்படினார். அப்புறம் கொஞ்ச நாள்ல உடனே சரியாய் போயிடுத்து. இப்படி மஹான்கள் அனுக்ரஹம் ஆபத்திலிருந்து காப்பற்றும்.

ஸ்வாமிகள் என்கிட்டே “நீ மூகபஞ்சசதி ஸ்தோத்ரம் பாராயணம் பண்ணு. அம்பாள் உபாசனை எல்லாம் வேண்டாம்” னு சொன்னார். ஸ்வாமிகள் அம்பாள் உபாசகர். ஷோடசாக்ஷரி மந்த்ர உபதேசம், கணக்கற்ற ஜபங்கள், பூஜைகள், பூர்ணாபிஷேகம் வரைக்கும் எல்லாம் அவருக்கு கிடைச்சுது. சில பேருக்கு பூஜை எடுத்தும் வெச்சிருக்கார். அது ரொம்ப நாள் முன்னாடி. ஸ்வாமிகள் பிறருக்கு மந்த்ரோபதேசங்கள் எல்லாம் ஒரு காலக்கட்டத்துல பண்ணிண்டு இருந்தார். தன் கிட்ட மந்த்ரோபதேசம் வாங்கிண்டு வெளிநாடு போறது, தன்னிஷ்டப்படி இருக்கறது என்று பார்த்த பின் மந்த்ரோபதேசம் பண்றதை அவர் நிறுத்திண்டுட்டார். கலியில் நாம ஜபம் தான். ராம நாம ஜபம் காப்பாத்தும், என்று எல்லார்க்கும் நாம ஜபத்தை சொல்லிண்டு இருந்தார்.

எனக்கு வந்து, எப்பவுமே விலக்ஷணமா இருந்தா தான் அதுக்கு விசேஷம். அப்படிங்கிரமாதிரி, uniqueஆ இருக்கணும் மந்த்ரோபதேசம் வேணும் என்று ஸ்வாமிகள் கிட்ட கேட்டேன். அவர் “வேண்டாம்ப்பா! காலம் சரியில்ல, நமக்கு அதை தாங்கறதுக்கு யோக்யதை இல்லை. நானே மூகபஞ்சசதி தான் படிச்சுண்டு இருக்கேன்” என்று சொன்னார். ஆனால் சத்தியமா அவர் காலம்பர ஒரு தடவை லலிதா சஹஸ்ரநாமம் பாராயணம் பண்ணுவார். சாயங்காலம் முழுக்க மூக பஞ்சசதி பாராயணம் பண்ணுவார். தான் ஒரு விசேஷமா பண்றோம், உனக்கு இது தான் லாயக்குன்னு அவர் சொல்லலை. அவரே விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம், ஒரு மணி நேர ராம நாம ஜபம், மூக பஞ்சசதி பாராயணம், ராமாயண பாகவத பாராயணம், இதைத் தான் வெச்சுண்டு இருந்தார். ஒரு show காக தான் ஏதோ தனியா special ஆ பண்றா மாதிரி எதுவுமே வெச்சுக்கல. அவரோட life ஒரு openbook.

அவர் எனக்கு அம்பாள் உபாசனை வேண்டாம், ஸ்தோத்ர பாராயணம் போறும் என்று சொன்னார். அப்பறம் நான் ரொம்ப ஆசைப்படறேன்னு பார்த்துட்டு, “நீ வேணா பெரியவா கிட்ட பிரார்த்தனை பண்ணிண்டு, லலிதா சஹஸ்ரநாமம் ஸ்தோத்ரம் மட்டும் படி” என்று சொன்னார். நான் உடனே ஒரு லலிதா சஹஸ்ரநாமம் புஸ்தகத்தை வாங்கி என்னோட ஜோல்னா பைல போட்டுண்டேன். அன்னிக்கு சிவன் ஸார் கிட்ட போனேன். சிவன் ஸார் “அந்த பைல என்ன இருக்கு?” என்று கேட்டார். நான் ஒரு பேனா இருக்கு, notebook இருக்குன்னு சொன்னேன். அவர் "எல்லாத்தையும் கீழ கொட்டு” அப்படினார். நான் எல்லாத்தையும் கொட்டினேன். அந்த லலிதா சஹஸ்ரநாம புஸ்தகத்தை

எடுத்து “இதைத்தான் உனக்கு வேண்டாம்னு சொன்னேனே” என்றார். நான் shock ஆயிட்டேன். சரி மஹான்கள் சொல்றத கேட்கணும்னு முடிவு செய்து கொண்டேன்.

இப்படி இவ்ளோ எல்லாம் அவா guide பண்ணலைன்னா. எனக்கு எல்லாம் தெரியும் என்கிற மாதிரி நான் ஒரு வழியில போயிருப்பேன். இங்கிலீஷ் படிப்பு, engineering படிச்சதுனால, ஒரு scientific temper. பல novels படிச்சு liberal views. பொறந்துதுல இருந்து நிறைய படிச்சு, ஆனந்தா கிட்ட எல்லாம் கீதா பிரவசனம் கேட்டு புத்தி குழம்பி போயிருந்தேன். ஆனா ஒரு கர்வமா இருந்தேன். அந்த கர்வத்தை எல்லாம் தட்டிவிட்டு, ஓரளவு நல்ல வழியில கொண்டு வந்தது, இந்த மஹான்களுடைய சத்சங்கம் தான். இப்பவும் ஒண்ணும் திருந்தினதா தெரியல. அட்லீஸ்ட் ஒரு தெளிவு, வேற எதுவும் பண்றது இல்ல, மூக பஞ்சசதி, விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம் பண்ணிண்டு இருக்கேன்.

சிவன் ஸாருக்கும், ஸ்வாமிகளுக்கும் ஒரு contradiction இருக்கற மாதிரி ஒரு எண்ணம் எனக்கு இருந்தது. ஸார் புஸ்தகத்தை படிச்சா அப்படி தோணும். “குதிரை ரேஸ்ல ஜெயிக்க, காதல் தோல்விக்கு, இதுக்கு எல்லாம் ஸ்தோத்ர புஸ்தகம் அச்சு அடிச்சு விக்கறா. இதெல்லாம் நெட்ரூ போட்டா ஒண்ணும் நடக்காது. காரியஸித்திக்கும், ஸ்தோத்ர பாராயணத்துக்கும் ஒண்ணும் சம்பந்தம் கிடையாது. இந்த காலத்து சாமியார்கள், ராமானு ஒரு தடவை சொன்னா எல்லா பாபமும் போயிடும் என்று சொல்லி ஜனங்கள் இஷ்டப்படி இருக்க தூண்டி விடறா. அதெல்லாம் ரொம்ப தப்பு. பாபத்துக்கு பயந்து ரொம்ப நேர்மையா இருக்கணும்” னு சொல்றார். அது ரொம்ப வாஸ்தவம்.

ஆனா அதை படிக்கும்போது ஒரு விதத்துல கலக்கமாக இருக்கும். ஸ்வாமிகள் விடாமல், "பகவன் நாமத்தோட மகிமை, ஸ்தோத்ர பாராயண மகிமை, ரிஷிகளோட வாக்கு, நம்பி பண்ணினால் நன்மை கிடைக்கும்" என்று சொல்வார். அதன் மூலமா அவர் பல பேருக்கு விதாயம் கொடுத்தார். பல பேருக்கு, கஷ்டம்னு வந்தா, அவாகிட்ட ஸ்வாமிகள் "இந்த ஸ்தோத்ரத்தைப் படி, கஷ்டம் போகும்" என்று சொல்லுவார். அவா அதை படிக்க ஆரம்பிக்கறதுக்குள்ளயே அவாளோட கஷ்டம் தீர்ந்துடும். தனக்கு இந்த கஷ்டம் இருந்துதாங்கற அளவுக்கு life நல்லபடியாக மாறி போயிடும். அதை நான் நிறைய பார்த்து இருக்கேன். ஸார் புஸ்தகத்துல இது மாதிரி இருக்கேன்னு நான் ஸ்வாமிகள்கிட்ட கேட்டதற்கு, அவர் “அது particular audience கு எழுதியிருக்கார். ரிஷிகள் வாக்கு சத்தியம். அதை போட்டு நீ குழப்பிக்காத” என்று சொல்லிட்டார்.

அதை ஒத்துக் கொள்வதைப் போல சிவன் ஸாரும் என்கிட்டே personal ஆ "ஸ்வாமிகள் சொன்ன ஸ்தோத்ர பாராயணம் பண்ணறேன்"னு சொன்னா

“நல்ல கார்யம். பண்ணு” என்று சொன்னார். நான் “ஸ்வாமிகள் சொல்லி ராம நாம ஜபம் பண்ணிண்டு இருக்கேன். அவர் அது தான் எல்லா தெய்வ வழிபாட்டுக்கும் மேலானது என்று சொல்றார்"னு சொன்ன போது, சிவன் ஸார் “வாஸ்தவம், அதுவும் ஒரு வழி. பொருட்பற்றை விலக்கி நாம ஜபம் பண்ணிண்டே இருந்தா அது தெய்வீகதுல கொண்டு போய் விடும்” னு சொன்னார்.

சிவன் ஸார் “நாம ஜபம் தெய்வீகத்துல கொண்டு போய் விடும்"னு சொல்றது கவனிக்க வேண்டிய விஷயம். அவரோட புஸ்தகத்தை படிக்கும் போது தான் தெய்வீகம் எவ்ளோ பெரிய உயர்ந்த நிலைன்னு புரியும். பகவன் நாமத்தை நம்பி அந்த நிலை வரைக்கும் போகலாம் அப்படிங்கிறது புரியும். ஸாரே ராம நாமத்தோட மகிமையை அவருடைய போதேந்தராள் சரித்தரத்துலயும் எழுதியிருக்கார். ஆனால் “நாம ஜபம் இருக்கு. நான் இஷ்டப்படி இருப்பேன்னு இருக்கக்கூடாது”

மஹான்களை நம்பியிருப்பது, நாம ஜபம் பண்ணுவது, அதைத்தான் இந்த கலியில பண்ண முடியும். அது மூலமா உயர்ந்த தெய்வீகத்தை அடையலாம், அப்படிங்கிற வாக்கு சிவன் ஸார் கொடுத்து இருக்கார். அவரே அதை சொன்னதுல இருந்து, எனக்கு ஒண்ணு புரிஞ்சுது. ஸ்வாமிகள் “நீ ராம ஜபம் பண்ணிண்டே போ, உனக்கு பற்றுகள் விலகும்”னு சொல்லி எழுதிக் கொடுத்துருக்கார். ஸார் “பற்றுக்களை விலக்கிட்டு நீ நாம ஜபம் பண்ணு” என்று சொல்றார். அந்த orderலதான் difference ஏ தவிர ரெண்டு பேரும் நாம ஜபத்தையும், ஸ்தோத்திர பாராயணத்தையும் மன அடக்கம், பணிவு, தெய்வபக்தி இதுல எல்லாம் உயரணும்கிற எண்ணத்தை, basis correct ஆ வெச்சுண்டு பண்ணு” என்று சொல்கிறார்கள் என்பது புரிஞ்சுது.

ஸ்வாமிகள் தன்கிட்ட வரவாளுக்கு ஆறுதல் சொல்லி “இதைப்படிங்கோ. உங்களுக்கு இந்த கஷ்டம் சரியாப் போயிடும். அல்லது இந்த நல்லது நடக்கும்” என்று சொல்றதை எங்கிட்டே சில பேர் கேலியா பேசினா. அது எனக்குக் கஷ்டமா இருந்தது. நான் ஸ்வாமிகள் கிட்ட “என்னத்துக்கு இந்த மாதிரி வரம் கொடுக்கறேள். சில பேர் கேலி பேசறா. ஸார் சொல்ற மாதிரி வினைகளை எல்லாம் அனுபவிச்சு தானே தீர்க்க வேண்டியிருக்கு” என்று சொன்னேன். ஸ்வாமிகள் “நான் ஏன் சொல்றேன்னு தெரியல. பணம் சம்பாதிக்கிற நோக்கத்துல நான் சொல்லலைங்கிறது நீ ஒத்துண்டா சரி” என்று சொன்னார். கொஞ்சம் hurt ஆயிட்டார். நான் அந்த மாதிரி பேசியிருக்கக்கூடாது. நமஸ்காரம் பண்ணி "மன்னிச்சுடுங்கோ" என்று சொன்னேன். அன்னிக்கு சிவன் ஸார் கிட்ட போனோம். சிவன் ஸார் ஸ்வாமிகளை காண்பிச்சு “இவா சொல்றது

எல்லாம் ஈஸ்வர வாக்கு" என்று சொன்னார். அதுல இருந்து நான் விதண்டாவாதம் பண்ணக்கூடாதுன்னு புரிஞ்சுண்டேன்.

மஹாபெரியவா ஸித்தி ஆன போது நான் சிவன் ஸாரிடம் இருந்தேன். காஞ்சிபுரம் போகட்டுமா என்று கேட்டேன். "நீ இங்கேயே இரு." என்று சொன்னார். "நீ கஷ்டம் தாங்க மாட்ட. அதனால் அப்படி சொல்லி இருக்கா." என்று ஸ்வாமிகள் சொன்னார்.

ஸார் கிட்ட உத்தரவு வாங்கிண்டு அமெரிக்கா போனேன். அங்கே இருந்த போது என் காலை சரி பண்ணிக் கொள்ள வேண்டும் என்ற ஒரு எண்ணம் வந்தது. அப்போது என் அம்மா அப்பாவை, சிவன் ஸாரை தரிசனம் பண்ணிட்டு வரும்படி கேட்டுக் கொண்டேன். அவர்கள் போயிருந்த போது ஸார் "கொஞ்சம் காலை விந்தி நடப்பானே, அந்த கணபதி தானே" என்று சொன்னார். அதைக் கேட்டவுடன் "இது நமக்கு அடையாளம்" என்று காலை அப்படியே விட்டு விட்டேன். இப்படி, எங்கிருந்தாலும் மஹான்கள் கருணை நம்மைக் காக்கிறது.

காமாக்ஷி வடிவமான மஹாபெரியவாளும், பரமேஸ்வர ஸ்வரூபமான சிவன் ஸாரும், மஹாவிஷ்ணு அம்சமான கோவிந்த தாமோதர ஸ்வாமிகளும் இருக்கும் போது நமக்கு ஒரு குறையும் இல்லை.

மஹான்கள் வழி காண்பிச்சிருக்கா. அந்த வழியில போகணும். எவ்வளவோ பெரியவா அநுக்ரஹம் இருந்தாலும், நான் ரொம்ப மெதுவாகத்தான் போயிண்டு இருக்கேன். உங்கள் ஆசீர்வாதம் வேணும்.

ஜானகி காந்த ஸ்மரணம் ஜய ஜய ராம ராம

பகவன் நாம மஹிமை - மஹாபெரியவா உபதேசம் - ஸ்வாமிகள் விளக்கம்

“நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே னு, நாமத்தை சொல்லிண்டு இருந்தா போறும் னுட்டு, கோடி காட்டி இருக்கா பெரியவா எல்லாரும்” அப்படீன்னு ஆரம்பிச்சு மஹாபெரியவா நாம சித்தாந்தத்தை பத்தி ஒரு அஞ்சு நிமிஷம் பேசி இருக்கா. அது பிரம்ம ஸூத்ரம், நாரத பக்தி ஸூத்ரம் போல, நாம சித்தாந்தத்துக்கு ஒரு ஸூத்ர புஸ்தகம் மாதிரி இருக்கு. அப்படி ஒவ்வொரு வார்த்தையும் ரத்னமா இருக்கு. அதுல இருக்கற ஒவ்வொரு வரியையும் எடுத்து நாம் நிறைய சிந்தனம் பண்ணலாம்.

மருதாநல்லூர் ஸத்குரு ஸ்வாமிகள் “ஒவ்வொரு நாளும் ராத்திரி 9 மணிக்கு படுத்துக்கறதுக்கு முன்னாடி யாராவது ஒருத்தருக்கு ஒரு அஞ்சு நிமிஷம் பகவன் நாம மஹிமையை சொல்லிட்டு அப்பறம் தூங்கணும்” னு சொல்லி இருக்கார். அதனால நம்ம கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் தினமும் பகவன் நாமத்தோட மஹிமையை சொல்வார். நிறைய சொல்லுவார். அதைக் கேட்டு கேட்டு கேட்டு, எனக்கு இந்த அஞ்சு நிமிஷத்துல மஹாபெரியவா சொன்னதுலேர்ந்து ஒவ்வொரு வரியையும் எடுத்து அதுக்கு ஸ்வாமிகள் சொன்ன விசேஷ அர்த்தங்களை சிந்தனம் பண்ணி, அது மூலமாக நமக்கு நாம பக்தி வருமான்னு நினைச்சு, அதைப்பேச ஆசைப் படறேன்.

“நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே” ங்கறது சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுடைய தேவாரம். சிவநாமத்துக்கு, நமசிவாய மந்த்ரத்துக்கு, தேவாரத்துல நிறைய பாட்டுகள் இருக்கு. “காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்ப்பது வேதம் நான்கிலும் மெய் பொருளாவது நாதன் நாமம் நமசிவாயவே” னு நாமத்தோட மஹிமையைப் பத்தி திருஞானசம்பந்தர் பாடி இருக்கார். “சொற்றுணை வேதியன் சோதிவானவன் பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக் கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணை யாவது நமச்சிவாயவே” அப்படினு அப்பர் ஸ்வாமிகளை கல் தூணிலே கட்டி, கடல்லே போட்ட போது கூட “என்னை நமசிவாயம் காப்பாத்தும்” னு சொல்லி, அந்த கல் தூண் கடலில் மிதந்து அவரைக் கரை சேர்த்தது. அப்படி பகவானோட நாமம் ஆபத்துலேர்ந்து காப்பாத்தும், அப்படிங்கற மாதிரி பதிகங்கள் எல்லாம் இருக்கு.

மஹாபெரியவா நாமத்தைப் பத்தி சொல்ல வரும்போது, "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே" அப்படிங்கற இந்த பதிகத்தை எடுத்து இருக்கா. ஏன்னா, இதுல emphasis என்னன்னா, நாமத்தை மனசு வெச்சு சொல்லணும், பக்தியோட சொல்லணும், அப்படிங்கறதெல்லாம் இல்லை. நாக்கு நாமத்தை சொன்னா போறும். இன்னொருத்தர் ஸ்வாமிகள் கிட்ட “ப்ராணாயாமம் பண்ணி மூச்சை அடக்கி நாம ஜபம் பண்ணினா தான் பலன்” அப்படின்னார். ஸ்வாமிகள் “எனக்கே ரொம்ப வயசு ஆயிடுத்து. என்னால அதெல்லாம் முடியலை. ஏதோ பெரியவா சொன்னதை நம்பி நான் நாமத்தை சொல்லிண்டு இருக்கேன்” அப்படின்னார். அது மாதிரி, அதெல்லாம் ஒண்ணும் வேண்டியதில்லை. நாம ஜபம் என்பது நாக்கு இருக்கு. நாமத்தை சொல்லணும். நம்பிக்கையோடு சொன்னா, பகவான் மனசுக்குள்ள வந்துடுவார் என்று அந்த emphasis குடுக்கறதுக்காக மஹாபெரியவா இந்த பதிகத்தை எடுத்து இருக்கா.

அப்பறம் பெரியவா, “மஹான்கள் இப்படி கோடி காண்பிச்சு இருக்கா, அதாவது hint குடுத்து இருக்கா. நாக்கு நாமத்தை சொல்லிண்டே இருந்தா போறும்னு, போதேந்தராள் நாமத்தை சொல்லிண்டே இருந்தா போறும்கிறதை ஒரு சித்தாந்தமாகவே பண்ணினார்” னு சொல்றார். போதேந்தராள் காஞ்சி காமகோடி பீடத்துல ஆசார்யாளாக இருந்தவர். அவர் சங்கர பாஷ்யங்கள் எல்லாம் படிச்சு, பக்தி பண்ணி, பகவான் கிட்ட பிரபத்தி பண்ணி, ஞானத்தை அடைஞ்சு, ப்ரம்ம ஸாக்ஷாத்காரம் அடைஞ்சு நிஷ்டையில இருக்கறவர். அப்படி நிஷ்டையில இருக்கறவர், ராம நாமத்தை சொல்லி, அந்த நாமத்துல ருசி ஏற்பட்டு, அதுல ஊறி ஊறி ஊறி அந்த அம்ருதத்தை பானம் பண்றது இதுக்கெல்லாம் மேலே. ராம நாமம்கிற அம்ருதத்தை பானம் பண்ணலைனா இதெல்லாம் ஒண்ணும் பிரயோஜனம் இல்லை னு தீர்மானம் பண்ணி, அதுக்கு

ஒரு லக்ஷம் ஸ்லோகங்கள் எழுதி நாம சித்தாந்தம் பண்ணி இருக்கார். அதை பெரியவா எடுத்து பேசறதுனால, மஹாபெரியவா அதை endorse பண்றா.

நம்ம ஸ்வாமிகள் சொல்வார், "மஹாபெரியவா மடாதிபதியா இருக்கறதுனால கர்மாநுஷ்டானம், பூஜை, பக்தி, ஞானம், சங்கரருடைய பாஷ்ய பாடம், எல்லாம் பண்றா. ஆனா அவர் மனசுக்குள்ள எப்பவும் ராம நாம தான். மஹாபெரியவா ஒரு மணி ஜபம் பண்றது கூட ராம நாமம் தான்னு நினைக்கிறேன். ஸன்யாசிகள் பிரணவ ஜபம் பண்றானு சொல்லுவா. என் நம்பிக்கை, அது ராம நாம ஜபம் தான். ஏன்னா சின்ன வயசுலேர்ந்து அவருக்குள்ள அந்த ராம நாம பக்தி இருக்கு. What life has taught me? னு Bhavan's journal ல பெரியவாளைக் கேட்டு ஒரு article எழுதி இருக்கா. அதுல பெரியவா சொல்றா, "என்னை பதிமூணு வயசுல அம்மாகிட்டேர்ந்து தனியா ஒரு வண்டியில கூட்டிண்டு போகும் போது, வண்டி ஒட்டிண்டு வந்த அந்த மேஸ்த்ரி சொன்னார், "தம்பி, இனிமே நீ வீட்டுக்கு திரும்ப போக முடியாது. நீ மடத்துல ஸன்யாசி ஆகப்போற. அம்மா அப்பாவெல்லாம் இனிமே பார்க்க முடியாது" னு சொன்னார். அப்ப எனக்கு இது என்ன புது திருப்பமா இருக்கேன்னு நினச்சு கலக்கமா இருந்தது. மீதி வழி முழுக்க "ராம ராம ராம ராம" னு சொல்லிண்டு இருந்தேன்" னு பெரியவா எழுதி இருக்கா.

அப்படி அன்னிக்கு ஆரம்பிச்சு, எந்த ஒரு ஆபத்துலேர்ந்தும், எந்த பயத்துலேர்ந்தும், நம்மை காப்பாத்தறது ராம நாமம் என்று உணர்ந்து, அதிலிருந்து பெரியவா தினமும் ஒரு மணி நேரம் ராம நாம ஜபம் பண்ணி, எவ்வளவெல்லாம் தாண்டி வந்திருக்கா. ராம நாமம், எவ்வளவு ஆபத்திலேர்ந்து அவாளை காப்பாத்தி, அவருக்கு பூரண ஞானத்தை குடுத்தது! அப்படி ஒரு மணி நேர ராம நாம ஜபம் பண்ணினதுனால தான் அவா பெருமை மேலும் மேலும் வளர்ந்துண்டே போச்சு. அப்படி சித்தர்களுக்கெல்லாம் வழிகாட்டும் ஞானியா விளங்கினார்" அப்படின்னு ஸ்வாமிகள் சொல்வார்.

அடுத்தது பெரியவா "இந்த ரெண்டு நாமா, ரெண்டு எழுத்து இருக்கும்படியான ராம நாமாவோ சிவ நாமாவோ எதை வேணா வெச்சுக்கோ" னு சொல்றா. ஶ்ரீசேஷயோர்பேததீ: னுட்டு ஶ்ரீஷ: என்றால் ரமா பதியான விஷ்ணு பகவான். ஈச: என்றால் பரமேஸ்வரன். இவா ரெண்டு பேர்க்குள்ள பேத புத்தி இருக்க கூடாது. அது ஒரு நாம அபராதம். சிவ நாமமும் ராம நாமமும் ஒண்ணு தான். ஒனக்கு எதுல பக்தி ஏற்படறதோ, பிடித்தம் வரதோ, அதை நீ பண்ணு என்கிறதுக்காக "இந்த ரெண்டு நாமத்துல ஏதாவது ஒண்ணை வெச்சுக்கோ. இந்த ரெண்டு நாமமும் தாரகம்" அப்படினு சொல்றா.

தாரகம்னா "உன்னை தாண்ட விடறது, ஆபத்துலேர்ந்து தாண்ட விடறது, பாபத்துலேர்ந்து தாண்ட விடறது." "ஆபத்துலேர்ந்து தாண்ட விட்டா போறாது

நமக்கு.” அப்படிங்கிறார். ஆபத்துலேர்ந்து தாண்ட விடணம். ஆபத்துல இருக்கும் போது நம்மைப் போல எளியவர்களுக்கு ராமநாமம் சொல்லவே முடியாது. ஆனா ஆபத்துலேர்ந்து வெளில வந்தா நாம என்ன பண்றோம்? திரும்பியும் பாபத்துல போயிடறோம். அப்படி போகாமல் இருக்கறதுக்கு, இந்த நாமம் உன்னை பாபத்துலேர்ந்து தாண்டி விட்டுடும். என்ன ஒரு அழகான அர்த்தம்! பகவத்கீதையோட சாரம் highest point இந்த ஸ்லோகம்.

ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் ஷரணம் வ்ரஜ |

அஹம் த்வா சர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச: ||

அப்படின்னு பகவான் கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்கு வாக்கு குடுக்கறார். “நீ உன்னுடைய தர்மங்களை எல்லாம் விட்டவனாக இருக்கே. என்கிட்ட சரணாகதி பண்ணு. அஹம் த்வா சர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி, உன்னை உன்னுடைய எல்லா பாபங்களிலிருந்தும் விடுவிச்சுடறேன். காமமும் க்ரோதமும் நம்மை பாபத்துல தூண்டறது. அப்படி பாபியாக பாமரனாக இருக்கற வரைக்கும் துக்கம் தான். நரகம் தான். பாபத்துலேர்ந்து உன்னை விடுவிச்சா தான், தூய்மையில உயரும் போது தான் உனக்கு துக்கம்கிறது போகும், சந்துஷ்டி ஏற்படும் அப்படிங்கற ஒரு அழகான அர்த்தம் பெரியவா சொல்லி, நாமத்தை நம்பி நீ ஜபம் பண்ணிண்டே இருந்தா, பாபத்துல உன் புத்தி போகாமல் உன்னை நான் காப்பாத்தறேன், அப்படின்னு இதுக்கு அர்த்தம் சொல்லி இருக்கா. மா சுச: அப்ப தான் உனக்கு சோகம் போகும்.

இதை நான் ஸ்வாமிகள் கிட்ட நேரே பார்த்து இருக்கேன். அவருக்கு ஆபத்துக்கள் வந்துண்டே இருந்தது. அதெல்லாம் ஒண்ணும் சரியும் ஆகலை. ஆனா அவர் அதபத்தி கவலைப் படலை. ஏன்னா அவர் பாபத்துலேர்ந்து விடுபட்டு இருந்தார். எந்த ஒரு பாபமும் வராமல் இருக்கறத்துக்கு, அவர் ஸதா சர்வதா பகவத் பஜனம் பண்ணிண்டே இருந்தார். அந்த பஜனத்தை குரங்கு பிடியா பிடிச்சுண்டு இருந்ததுனால, அவர் புத்தி பாப வழியிலே போகலை, அதுனாலயே பகவானை நம்பி ஒரு விதமான கவலையும் இல்லாம இருந்தார். அவருக்கு பயமோ, சோகமோ, மோஹமோ எதுவுமே இருக்கலை. அப்படி பக்தினா என்னங்கிறதை காண்பிச்சு குடுத்தார். வைராக்ய ஞானம் வந்து பகவானையே அடைஞ்சார்.

அடுத்தது பெரியவா ஶ்ரீதர ஐயாவாளை ஸ்மரிக்கிரார். ஶ்ரீதர ஐயாவாள் ஆக்யாஷஷ்டி ங்கிற புஸ்தகத்துல சிவ நாமத்தைப் பத்தி ரொம்ப விசேஷமா சொல்லி இருக்கா. பெரியவா “அவாளும் நிறைய்ய பக்தி பண்ணி” அப்படின்னு சொல்றார். அப்படினா என்ன அர்த்தம்? சிவ நாமத்தை கோடி கணக்கா ஜபம் பண்ணி இருக்கார்னு அர்த்தம். அந்த சிவ நாம ஜபத்தோட மஹிமை எப்படின்னா, அவர் கடைசியிலே திருவிடைமருதூர் மஹாலிங்க ஸ்வாமி

முன்னாடி வந்து நமஸ்காரம் பண்ணி, ஒரு ஜோதி வடிவமாகி லிங்கத்துக்குள்ளே கலந்துடறார். உடம்பையே காணலை. அப்பேற்பட்ட மஹான். அவரை ஸ்மரிக்கறார்.

அடுத்தது மருதாநல்லூர் ஸத்குரு ஸ்வாமிகள். இப்படி போதேந்த்ராள், ஐயாவாள், ஸத்குரு ஸ்வாமிகள் அவா மூணுபேர் அனுக்ரஹத்துல பஜனை பத்ததி ஏற்பட்டது அப்படிங்கறதை சொல்லும் போது "ஸததம் கீர்தயந்தோ மாம்" "போதயந்த: பரஸ்பரம்" னு மூலத்துலேயே "அப்பா, சொல்லிண்டு இரு. ஒருத்தருக்கு ஒருத்தர் பேசிண்டு இரு. பத்து பேரா சேர்ந்து கோஷ்டி கானம் பண்ணு." னு சொல்லி இருக்கு அப்படிங்கறார். பெரியவா மூலத்துலேயேனு சொல்றது ஸ்ரீமத்பகவத்கீதையிலே. பகவத்கீதை பத்தாவது அத்யாயத்துல

"மச்சிதஹா மத்கதப்ரணாஹா போதயந்த: பரஸ்பரம் |

கதயந்தச்ச மாம் நித்யம் துஷ்யந்திச்ச ரமந்தி ச ||

தேஷாம் ஸதத யுக்தானாம் பஜதாம் ப்ரீதி பூர்வகம் |

ததாமி புத்தி யோகம்தம் ஏன மாம் உபயாந்தி தே ||

தேஷாமேவ அனு கம்பார்த்தம் அஹம் அஞ்ஞானஜம் தமஹ |

நாசயாமி ஆத்ம பாவஸ்தஹ ஞான தீபேன பாஸ்வதா ||

என்று இந்த 3 ஸ்லோகங்கள் 10-வது அத்தியாத்துல வர்றது.

இதோட அர்த்தம் என்னன்னா,

"மச்சிதாஹா" என்னிடத்தில் மனசை வைத்தவர்கள்

"மத்கதப்ரணாஹா" தன்னுடைய புலன்கள், உயிர் எல்லாமே எனக்காகவே வாழறவா.

"போதயந்த: பரஸ்பரம்:" என்னுடைய விஷயத்தையே ஒருத்தருக்கு ஒருத்தர் பேசிப்பா.

"கதயந்தச்ச மாம் நித்யம்" - என்னையே பேசிண்டு, மத்த உலக விஷயங்களை பேசாம

"துஷ்யந்திச்ச ரமந்தி ச" - இதிலேயே திருப்திபட்டுண்டு இதுலேயே சந்தோஷப் பட்டுண்டு, "கரும்பும் துவர்த்து செந்தேனும் புளித்து அறக்கைத்ததுவே"

அப்படீன்னு அருணகிரிநாதர் சொல்றமாதிரி, உலக விஷயங்கள் எல்லாம் அவாளுக்கு புளிச்சு போயிடறது.

"தேஷாம் சதத யுக்தானாம்"ஆடும் பரிவேல் அணிசேவலென பாடும் பணியே பணியாய் அருள்வாய், அப்படி திருப்புகழை பாடிண்டே, பகவானோட கதையை பேசிண்டே இருக்கற அந்த பணி யாரு பண்றாளோ

"பஜதாம் ப்ரீதி பூர்வகம்", பக்தியோடு என்னோட பஜனத்தை பண்ணுகிறவர்களுக்கு

"ததாமி புத்தி யோகம் தம் ஏன மாம் உபயாந்தி தே" - அவர்களுக்கு என்னை வந்து அடையும்படியான ஒரு புத்தி யோகத்தை நான் அளிக்கறேன்.

"தேஷாமேவ அனுகம்பார்த்தம்" அவர்களுக்கு மட்டுமே கருணையினால்

"அஹம் அஞ்ஞானஜம் தமஹ நாசயாமி" நான் அவர்களுடைய அஞ்ஞான இருளை போக்குகிறேன். எப்படி என்றால்

"ஆத்ம பாவஸ்தஹ" அவா மனசுல நான் குடியிருந்து,

"ஞான தீபேன பாஸ்வதா" ஞான தீபத்தை அவா மனசுல ஏத்தி வச்சு, அதனால அஞ்ஞான இருளை போக்குகிறேன்.

மஹாபெரியவா பகவத்கீதையை தினமும் பாராயணம் பண்றவா. அவா மனசுல எந்த ஸ்லோகம் வந்திருக்கு பாருங்கோ! அதுக்கு மேலே "ஸததம் கீர்தயந்தோ மாம்" "போதயந்த: பரஸ்பரம்" ங்கறதுக்கு நாம ஜபம், பஜனைங்கறது மஹாபெரியவா போன்ற மஹான்கள் தான் சொல்லுவா. நம்ம ஸ்வாமிகள் சொல்வார். கீத ஞான யக்ஞ lecture பண்றவா வேதாந்திகள் எல்லாம் சொல்ல மாட்டா. பகவானை பாடிண்டே இருந்தா மனசுக்குள்ள பகவான் வந்துடுவான். மனசுல ஞான தீபத்தை ஏத்தி வெச்சு அக்ஞான இருளை போக்குவான். அதுவும் கருணையினால். அனுகம்பார்த்தம் னு சொல்லி இருக்கார் பகவான். கருணையினால் ஞானத்தை குடுத்துடுவேன் என்று சொல்லி இருப்பதால், மூலத்துலேயே இந்த basis இருக்கறதுனால, இந்த மூணு மஹான்கள் பஜனை மார்க்கம்னு ஒண்ணை உண்டாக்கினா அப்படின்னு சொல்றார்.

பெரியவா அதுல ஒரு ஜாக்ரதை பண்றார். "எதானு மருந்து சாப்படறதுக்கு, எதானு கொஞ்சம் ஒரு ஸஹாயம், ஒரு திதிப்பு கிதிப்பு குடுக்கற மாதிரி, பகவன்நாமாவுக்கு இதெல்லாம் கொஞ்சம் கூட இருந்தா, கொஞ்சம் சுலபமா பகவன்நாமாவை, நாம வந்து அந்த அம்ருதத்தை அனுபவிக்க

முடியும்கிறத்துக்காக” கோஷ்டி பஜனை அப்படினு சொல்றார். உலக விஷயங்கள் விஷம். ஆனா நமக்கு ரொம்ப தேனா இனிக்கிறது. பகவன்நாமம் அம்ருதம். ஆனாஅதுல ருசி வர மாட்டேன்கிறது. அது கசக்கறது. கசப்பு மருந்துக்கு ஒரு திதிப்பு கிதிப்பு, தேன் சேர்த்து சாப்படற மாதிரி, இந்த பத்து பேரா சேர்ந்து கோஷ்டி கானம் பண்றது. சங்கங்கள் வெச்சு பஜனை பண்றது. இப்படியெல்லாம் கொஞ்சம் சாதகம் அதுக்கு. அது ஒரு crutch, ஊன்றுகோல் மாதிரி தான் நினைக்கணுமே தவிர அதில மாட்டிக்க கூடாதுங்கற warning பெரியவா சொல்றதுல இருக்கு. இன்னொரு இடத்துல வெளிப்படையாகவே பெரியவா “சாஸ்வதமான புண்ய கீர்த்தியை உடைய வியாசர், வால்மீகி அவாளோட ஸுக்திகளை பாராயணம் பண்றது, அதுவே ஒரு பெரிய ஸத்சங்கம்” அப்படின்னு சொல்லி இருக்கா.

கூடவே மருதாநல்லூர் ஸத்குரு ஸ்வாமிகள், அவாளைச் சொல்லி, அவர் நாம சித்தாந்தத்தை அனுஷ்டானத்துக்கு கொண்டு வந்தார்னு சொல்றா. அந்த அனுஷ்டானம் என்னன்னா, ஸத்குரு ஸ்வாமிகள் “பக்தி சந்தேக த்வாந்த பாஸ்கரம்” னு ஒரு புஸ்தகம் எழுதி இருக்கார். அதுல, தினமும் கார்த்தால ஒரு லக்ஷம் ராம நாம ஜபம் பண்ணனும். கிட்டதட்ட ஆறு மணி நேரம் ஆகும். அதுக்கப்பறம் ஆஹாரம் பண்ணின பின்ன, ராமாயண பாகவத பாராயணம் பண்ணனும். சாயங்காலத்துல மஹான்களோட கிருதிகளை கொண்டு தீப பிரதக்ஷிணம், சம்பிரதாய ஹரி பஜனை பண்ணனும். ராத்திரி படுத்துக்கறதுக்கு முன்னாடி யாராவது ஒருத்தருக்கு ஒரு அஞ்சு நிமிஷம் பகவன் நாம மஹிமையை சொல்லிட்டு அப்பறம் தூங்கணும். இப்படி ஒருத்தர் பண்ணிண்டு வந்தா, அவர் மூணு வருஷத்துல ஜீவன் முக்தராக ஆகி விடுவார்னு சொல்லி இருக்கார். இதைத்தான் பெரியவா, போதேந்த்ராளுடைய நாம சித்தாந்தத்தை ஸத்குரு ஸ்வாமிகள் அனுஷ்டானத்துக்கு கொண்டு வந்தார் அப்படினு சொல்றா.

அதுல போதேந்த்ராளுடைய பாதுகையை ஆராதனை பண்றது, ஐயாவாள், நாராயண தீர்த்தர், ஜெயதேவர் இப்படி மஹான்களோட கீர்த்தனைகள், அந்த புஸ்தகங்கள், அதெல்லாம் கொண்டு ஒரு பஜனை பத்ததி ஏற்படுத்தினார். அந்த சம்ப்ரதாயத்துல, க்ரமம் ஒண்ணு, மடம் ஒண்ணு, அதுலேர்ந்து, பகவன் நாம சித்தாந்ததுக்காக ஏற்பட்டு இருக்குனு மஹாபெரியவா சொல்றா.

இங்க என் மனசுல ஒண்ணு தோணறது.

நாம இந்த மஹாபெரியவா அஞ்சு நிமிஷம் சொன்ன நாம சித்தாந்த ஸுத்ரத்தை மூலமாக வெச்சுண்டு, சிவன் ஸார் ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகத்துல போதேந்த்ராள், ஐயாவாள், ஸத்குரு ஸ்வாமிகள், அப்பர், மாணிக்கவாசகர், இவாளோட சரித்ரத்தை எல்லாம் ரொம்ப அழகாக சொல்லி, “ராம நாமத்தின் அப்பேற்பட்ட மஹிமை உலகுக்கு உணர்த்த மனம் கொண்டார் மஹான்”

அப்படின்னு போதேந்த்ராள் சரித்ரத்துல சொல்றார். "மௌனத்தை ஏற்றாலும் பகவன்நாமாவை உச்சரிப்பவர் மஹான்" அப்படின்னு நாம ஜபம்கிறது மஹான்கள் பண்ற விஷயம்னு காண்பிச்சு புரிய வெச்சுருக்கார். நம் கோவிந்த தாமோதர ஸ்வாமிகள், வாழ்க்கை முழுக்க ராமாயண பாகவதம், நாம ஜபம்னு பஜன மார்கத்துல இருந்தா. இப்படி ஸன்யாசிகளா போதேந்த்ராள், க்ருஹஸ்தாளா ஐயாவாள், பாகவத சம்ப்ரதாயமா ஸத்குரு ஸ்வாமிகள்வாள் அவா மூணு பேர் அவதாரம் பண்ணின மாதிரி, நம் காலத்துல, மஹாபெரியவா, சிவன் ஸார், கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் இவா மும்மூர்த்திகள் நமக்காக அவதாரம் பண்ணி இருக்கா. இந்த மூணு பேரை நாம ஸ்மரிச்சுண்டு, முடிஞ்ச வரைக்கும் தனிமையில் பஜனம், நாம ஜபம் பண்ணலாம்னு தோணறது.

தற்கால ஸத்சங்கங்கள் ஓரளவு தான். அங்க இருக்கும் போது கண் ஜலம் வரது. முருகன் குமரன் குகன் என்று மொழிந்து உருகும் செயல் தந்து உணர்வு என்று அருள்வாய், பொரு புங்கவரும் புவியும் பரவும் குரு புங்கவ எண்குண பஞ்சரனே அப்படினு சொல்றார் அருணகிரி. நாம பண்ற ஸத்சங்கதுனால முருகன் குமரன் குகன் னு சொல்லும் போது, மனசு உருகறது ஜாஸ்தி ஆச்சுனா அந்த சங்கம் வெச்சுக்கணம். இல்லைனா தனிமையில் அந்த கந்தர் அனுபூதியை நிறைய ஆவர்த்தி பண்ணணும் அப்படிங்கற hint பெரியவா சொல்றதுல இருக்கு. ஒரு திதிப்பு கிதிப்பு சேர்த்துகற மாதிரி அப்படினு சொல்றா. அது மாதிரி நாமத்துல ருசி ஏற்பட்டு, அதுல ஊறி ஊறி ஊறி அந்த அம்ருதத்தை எப்போதும் பானம் பண்ணணும் கிறது தான் goal. அதை நோக்கி போயிண்டு இருக்கோமானு பாத்துக்கணம். அதுக்கு கூட்டிண்டு போறது தான் ஸத்சங்கம். அந்த ஞாபகம் இருக்கறதுக்கு நாம மஹாபெரியவா, சிவன் ஸார், கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் இவாள நினச்சுண்டோம்னா, இவா அடைஞ்ச நிலைமையை அடையறதுக்காக தான் நாம் நாம ஜபம் பண்றோம் அப்படிங்கற goal மறக்காம இருக்கும். யாராவது நம்மை ஸ்தோத்ரம் பண்ணினா கர்வம் வராது. நாமளே நூத்துக்கு முப்பது மார்க் வாங்கறோம். நம்மைவிட கம்மி மார்க் வாங்கறவன் நம்மை புகழ்ந்தா ஏதோ centum வாங்கின மாதிரி நினச்சுக்கறோம். இந்த மஹான்களை த்யானம் பண்ணினா, அப்படி கர்வப்பட்டு வழி தவறாம இருக்க, ஒரு ஹேதுவாக இருக்கும்.

ஆகையினால, நாக்கு இருக்கு. நாமம் இருக்கு. அப்பறம் பயம் ஏது? அப்படின்னு பெரியவா அபயம் குடுக்கறா. போதேந்த்ராள் சரித்ரத்துல ஒரு சம்பவம். ஒரு ஊமைப் பிள்ளைக்கு அவர் வாக்கு குடுக்கறார். ராமா னு சொல்லுனு சொல்றார். அவன் ராமானு சொல்றான். அப்பறம் பேச்சு வந்துடறது. அது ஏன்னா, இவனுக்கு நாமம் சொல்ல முடியாம இருக்கேன்னு போதேந்த்ரா ஸ்வாமிகளுக்கு கருணை ஏற்பட்டு, பகவான் கிட்ட வேண்டிண்டு

அவனுக்கு அனுக்ரஹம் பண்றார். நமக்கு நாக்கு இருக்கும் போது கவலை இல்லை. பயப்படவே வேண்டாம்.

किं वा फलति ममान्यैर्बिम्बाधरचुम्बिमन्दहासमुखी ।

सम्बाधकरी तमसामम्बा जागर्ति मनसि कामाक्षी ॥

கிம் வா பலதி மம அன்யை: பிம்பாதர சும்பி மந்தஹாஸ முகி |

சம்பாதகரி தமஸாம் அம்பா ஜாகர்தி மனஸி காமாக்ஷி னு

என் மனத்தில் மந்தஹாஸத்தோடு காமாக்ஷி அம்பாள் விளங்கும் போது எனக்கு மத்தவாளால என்ன ஆகப் போகிறது! என்று மூக கவி சொல்றா மாதிரி, காமம், கோபம், பயமெல்லாம் போகிற வரைக்கும் நாம ஜபத்தை விடாமல் பண்ணிண்டே இருக்கணும். நாமம் சொலறவனை எல்லாக் காலத்திலும், எல்லா இடத்திலும், எல்லாக் கோணத்திலும் பகவான் காப்பாற்றுகிறார் னு ஸ்வாமிகள் அடிக்கடி சொல்வார்.

அதுக்கப்பறம் மஹாபெரியவா கிருஷ்ண சைதன்ய மஹாப்ரபு, துகாராம், மீராபாய் அவாளை எல்லாம் ஸ்மரிக்கறா. அப்பேர்ப்பட்ட மஹான்களை ஸ்மரித்தாலே நமக்கு நாம பக்தி வந்துடும். அவாளை ஸ்மரித்தவுடன் பெரியவாளுக்கு கிருஷ்ண சைதன்ய மஹாப்ரபு பண்ணின சிக்ஷாஷ்டகம் ஞாபகம் வரது. நாம ரொம்ப humble ஆக இருக்கணும். அது தப்பு, இது தப்பு னுட்டு வெசுண்டு மாத்திரம் இருக்காதே. நீ லக்ஷம் நாமம் சொல்றது வெச்சுண்டுட்டா மத்ததை வையரதுக்கு நேரமே இருக்காதே. வெசா நாமத்துலேர்ந்து பகவதனுக்ரஹம் வீணாபோயிடும் அப்படினு பெரியவா முக்கியமான ஒரு warning குடுக்கறா. இன்னிக்கு உலகம் இருக்கற தசையில, வியவஹாரங்களை விட்டுட்டு, ஒரு த்யாகம் பண்ணி, ஒருத்தர் ஒரு நல்ல கார்யம் பண்ணும் போது, அதை நாம ஏன் criticize பண்ணணும்? மத்த புண்ய கார்யங்களில் த்ரவ்ய தோஷம் முதலானது இருக்கும், நாம தனிமையில பஜனம் பண்ணணும் னு நினைச்சா அதை பண்ணிண்டே போ. ஒண்ணையும் வையாதே நீ. அந்தந்த மார்கத்துல அது சரி. நமக்கென்னமோ நாம ரொம்ப அல்பம், நமக்கு இதுதான் னு ரொம்ப humble ஆ இருந்துக்கோ. அப்போ இது உன்னை கடைத்தேறி விட்டுடும்.

तृणादपि सुनीचेन तरोरपि सहिष्णुना | अमानिना मानदेन कीर्तनीय सदा हरि ||

த்ருணாதபி சுநீசேன தரோரபி ஸஹிஷ்ணுனா, அமானினா மானதேன கீர்தனீயஸ் ஸதா ஹரி: னு கிருஷ்ண சைதன்ய மஹாப்ரபு சிக்ஷாஷ்டகத்துல சொல்றார். த்ருணாதபி சுநீசேன - புல்லைக் காட்டிலும் அற்பமாக தன்னை நினைச்சுக்கணும். தரோரபி ஸஹிஷ்ணுனா - ஒரு மரத்தைக் காட்டிலும்

பொறுமையா இருக்கணும். தன்னை வெட்டறவனுக்கு கூட மரம் பழங்களைக் குடுக்கிறது இல்லையா? அமானினா - கர்வப் படக்கூடாது. மானதேன - மத்த ஸாதுக்களை கௌரவிக்க வேண்டும். கீர்தனீயஸ் ஸதா ஹரி: - இப்படி இருந்துண்டு எப்பவும் ஹரி கீர்த்தனம் பண்ண வேண்டும்.

இங்கே "நாம அபராதா: தச" னு நாமத்துக்கு பண்ற பத்து அபராதங்கள் னு போதேந்திராள் சொல்லி இருக்கார். அதெல்லாம் தெரிஞ்சுண்டு அதை விலக்கி, நாம் நாம பக்தி பண்ணினோமான வெகு விரைவில் அனுக்ரஹம் கிடைக்கும். மூணு வருஷத்துல ஜீவன் முக்திங்கறது, இப்படி நாம அபராதங்களை விலக்கி இடையறாத நாம ஜபம் பண்ணினா கிடைக்கும். அந்த நாம அபராதங்கள் என்னனா

सन्निन्दाऽसतिनाम वैभव कथा श्रीशेशयोर्भेदधीः

अश्रद्धाश्रुतिशास्त्रदैशिकागिराँनाम्न्यर्थवाद भ्रमः॥

नामास्तीति निषिद्ध कर्म विहित त्यागोहि धर्मान्तरैः

साम्यं नामानि शङ्करस्य च हरेर्नामापराधादशः॥

ஸந்நிந்தா - ஸாதுக்களை நிந்தனை பண்றது,

அஸதி நாம வைபவ கதா - அஸத்துக்கள் கிட்ட போய் நாம வைபவத்தை பேசறது.

ஶ்ரீசேஷயோர்பேததீ: - ஶ்ரீஷ: என்றால் ரமா பதியான விஷ்ணு பகவான். ஈச: என்றால் பரமேஸ்வரன். இவா ரெண்டு பேர்க்குள்ள பேத புத்தி பாராட்டறது.

அஷ்ரத்தா ஸ்ருதி சாஸ்த்ர தேசிக கிராம் - ஸ்ருதி னா வேதங்கள், சாஸ்த்ரம்னா தர்ம சாஸ்திரங்கள், தேசிக கிராம் குரு சொன்ன வார்த்தை, அஷ்ரத்தா னா இதில் நம்பிக்கை இல்லாமல் இருக்கறது. இந்த மூணும் மூணு அபராதங்கள்.

நாம்னி அர்த்தவாத ப்ரம: ஏஷமே சர்வ தர்மாணாம் தர்மோதிகமதோ மத: | யத் பக்த்யா புன்டரீகாஷம் ஸ்தவை: அர்சேந் நர: ஸதா || நானறிந்த தர்மங்களிலே மிக சிறந்த தர்மம் – கமலக்கண்ணனை, அன்போடு, ரிஷிகள் எடுத்துக் கொடுத்துள்ள, ஆயிரம் நாமங்கள் கொண்ட இந்த ஸ்தோத்ரத்தை வாயினால் பாடி அர்ச்சனை செய்வதே, அப்படின்னு பீஷ்மாசார்யாள் சொல்ற வார்த்தையை "இதெல்லாம் அதிஷயோக்தி exaggeration அப்படின்னு நினைக்காதே. ஸத்யம்னு நம்பு. நம்பி நாம ஜபம் பண்ணணும். இன்னொருத்தர் வேற ஒரு புண்ய கார்யம் பண்ணலாம் வான்னு சொன்னா போகப்படாது. நீ நாம ஜபத்தையே பண்ணணும். நாம ஜபத்தின் மேல் அசையாத நம்பிக்கை இருந்தால், தான் விடாமல் பண்ண முடியும்.

“நாமாஸ்தீதி நிஷித்த கர்ம விஹித த்யாகோ” னுட்டு ஸத்கர்மாவை விடறது, கெட்ட கார்யத்தை செய்யறது, இதெல்லாம் பண்ணாதே. சந்த்யாவந்தனம், தர்ப்பணம், ஸ்ராத்தம் இதெல்லாம் கூட பண்ண வேண்டாம். பஜனை பண்ணினால் போதும் அப்படின்னு போகாதே. முடிஞ்ச வரைக்கும் நல்ல கார்யங்களை சத்கர்மாக்களை பண்ணு. நான் நாம ஜபம் பண்றேன் என்ன வேணா தப்பு பண்ணலாம் னு நினைக்காதே. விஷய சுகங்களை தோஷ புத்தியோடு அனுபவிச்சுண்டு, பக்தி பண்ணு. அப்ப அது உன்னை விட்டுடும்.

தர்மாந்தரை: ஸாம்யம் நாமநி - இன்னொரு தர்மத்துக்கு சமமாக நாம ஜபத்தை நினைக்காதே. இதுவே எல்லாத்துக்கும் மேலான தர்மம் அப்படிங்கற ஞாபகத்தோடு இரு.

சங்கரஸ்ய ச ஹரே: நாம அபராதா: தச. இது சிவ நாமத்துக்கு, ஹரி நாமத்துக்கு ஏற்படும் பத்து அபராதங்கள். இதை விலக்கிட்டு நாம ஜபம் பண்ணுங்கோ அப்படினு இந்த நாம அபராதா: தசங்கறதையும் பெரியவாஅந்த அஞ்சு நிமிஷ உபன்யாசதுல கொண்டு வந்துட்டா.

இந்த நாம அபராதத்தை பத்தி பேசும் போது, சேஷாத்ரி ஸ்வாமிகள் சரித்ரத்துல ஒரு நிகழ்ச்சி ஞாபகம் வரது. குழுமணி நாராயண சாஸ்த்ரிகள்னு ஒரு பெரியவர் தான், சேஷாத்ரி ஸ்வாமிகள் கிட்ட வினயமாக பழகி, விஷயங்களை க்ரஹிச்சுண்டு, அவருடைய சரித்ரத்தையும் உபதேசங்களையும் ஒரு புஸ்தகமாக எழுதி இருக்கார். ரமண பகவான் அந்த சரித்ரத்தை ரொம்ப கொண்டாடி இருக்கார். நாராயண சாஸ்த்ரிகள் அந்த புஸ்தகத்தில் தன்னை ரேணுனு குறிப்பிட்டுப்பார். பாத தூளினு அர்த்தம். சேஷாத்ரி ஸ்வாமிகள் பல பேருக்கு ராம நாமம், நாராயண நாம ஜபம் உபதேசம் பண்ணி இருக்கார். இந்த நாராயண சாஸ்த்ரிகளுக்கும் ராம நாமத்தை உபதேசம் பண்ணி இருக்கார்.

ஒரு தடவை சாஸ்த்ரிகள், இந்த நாம அபராதா: தச பத்தி தெரிஞ்சுண்டு அந்த ஸ்லோகத்தை ஒரு பேப்பர்ல எழுதி தன்னோட பாகவத புஸ்தகத்துல வெச்சுண்டு, சேஷாத்ரி ஸ்வாமிகள் கிட்ட வரார். அன்னிக்கு அவரோடு படுத்துக்கறார். அன்னிக்கு அவருக்கு ஒரு கனவு வரது. அதில் இவர் ராம நாம ஜபம் பண்ணிண்டு இருக்கார். சேஷாத்ரி ஸ்வாமிகள் இவரை ஒரு கத்தியால் வெட்ட வரார். இவர் பயப்படுகிறார். அப்போ ஸ்வாமிகள் "இப்படி தான் நாம ஜபம் பண்றதா?" அப்படின்னு கேட்டு விட்டு, அவர் உட்கார்ந்துண்டு, பட்ட கட்டை போல மணிக்கணக்காக ஜபம் செய்கிறார். சாஸ்த்ரிகள் முழிச்சுண்ட போது ரொம்ப ஆச்சர்யப் பட்டு, இது ஒரு உபதேசம்னு எடுத்துக் கொள்கிறார். அப்போ தன் பாகவத புஸ்தகத்தை எடுத்து பார்க்கும் போது, அந்த நாம அபராதா: தச எழுதி வெச்சுருந்த அந்த பேப்பரை சேஷாத்ரி ஸ்வாமிகள் கிழிச்சு அதில் வெச்சுருக்கார். அப்போ இவர் "கத்தியால் வெட்டினாலும் தெரியாத

அளவுக்கு லயிச்சு ராம நாம ஜபம் பண்ணினால் நாம அபராதம் பத்தி கூட கவலைப் பட வேண்டாம்" னு புரிஞ்சுண்டேன் னு எழுதி இருக்கார். இந்த நிகழ்ச்சியை படிக்கும் போது நம் ஸ்வாமிகள் ரொம்ப ரசிப்பார்.

கடைசில மஹாபெரியவா "நாம ஜபம் நமக்கு ரொம்ப சுலபமான உபாயம். எப்ப நாம வேணும்னாலும் அதை நாம உபயோகப்படுத்திக்கலாம். நம்ம மதத்துல எல்லாம் கஷ்டமா இருக்கே, கடினமா இருக்கே அப்படீன்னு சந்தேஹமா இருந்ததானா, இதைக் காட்டிலும் சுலபமான வழியே கிடையாதுங்கறதும், நம்ம மதத்துலதான் இருக்கு. அதுனால எல்லாம் என்ன பிரயோஜனமோ அந்த பிரயோஜனம் இதுனால சுலபமா வந்துடும்"னு சொல்றா.

ஒரு வாட்டி மஹாபெரியவா "ரா" ங்கிறது தான் மூலாதாரம். "ம" ங்கிறது சஹஸ்ராரம். ராம நாம ஜபம் தான் குண்டலினி யோகம் னு சொல்லி இருக்கா. ஸ்வாமிகள் ரொம்ப ஆச்சர்யப் பட்டு "இப்படி ஒரு ரஹஸ்யமான விஷயத்தை மஹாபெரியவா யாருக்கோ சொல்லி இருக்கா. நமக்கு இது தெரிஞ்சது, கிடைச்சது பெரிய பாக்யம். ராம நாம ஜபம் பண்ணு" னு சொல்வார்.

"அந்த மாதிரி எல்லாம் பகவன்நாமா தான். ஆரக்கண்டாலும் நாமாவைச் சொல்லிச் சொல்லிச் சொல்லி உன்னுடைய க்ஷேமத்தை அடை" அப்படிங்கற மார்கத்தை போதேந்த்ராள் உபதேசம் பண்ணி அனுக்ரஹம் பண்ணி இருக்கா" அப்படீன்னு முடிக்கறா பெரியவா. அந்த மார்கத்துல போய் க்ஷேமத்தை அடைஞ்ச ஒரு மஹான் நம்முடைய கோவிந்த தாமோதர ஸ்வாமிகள்.

கோவிந்த கோவிந்த ஹரே முராரே

கோவிந்த கோவிந்த முகுந்த கிருஷ்ணா

கோவிந்த கோவிந்த ரதாங்கபாணே

கோவிந்த தாமோதர மாதவேதி

னு ஸ்வாமிகள் சொல்லும் போது அவருக்கு தொண்டை கத்கதமாகும். ஆனந்தகண்ணீர் பெருகும். மயிர்கூச்செறியும். அப்படி நாம ஜபத்தில் பேரானந்தத்தை கண்ட ஒரு மஹானை நாம தர்சனம் பண்ணி இருக்கோம். அவர் ராம நாம ஜபம் பண்ணுனு உபதேசம் பண்ணி இருக்கார்.

நாக்கு இருக்கு, ராம நாமம் இருக்கு! பயம் ஏதுங்கிற மஹாபெரியவா அபய வாக்கும் இருக்கு. ராம ராம ராம ராம ராம ராம னுசொல்லிண்டே இருக்க வேண்டியது தான்.

ஜானகீ காந்தஸ்மரணம்! ஜயஜய ராம ராம!

ஸரஸ்வதி பெரியவா



நான் ஸ்வாமிகளை தரிசனம் பண்ணின பதினைஞ்சு வயசுல இருந்து, மஹா பெரியவா சித்தி ஆகிற வரைக்கும், அந்த ஒரு எட்டு வருஷத்துல, ஸ்வாமிகள், அடிக்கடி “நீ போய் பெரியவாளை தரிசனம் பண்ணு. அவாதான் காமாக்ஷி. உனக்கு மூக பஞ்சசதி கிடைச்சிருக்கு, போயி பாத்துட்டு வா”, அப்படின்னு சொல்லுவார். நான், காஞ்சிபுரத்துல வந்து பெரியவாளைத் தள்ளி நின்னு, தரிசனம் பண்ணிட்டு வந்துடுவேன். அதுல எனக்கு அதிகமா ஞாபகம் இருக்கிற காட்சி என்னன்னா, பெரியவா புஸ்தகங்கள் படிப்பா. ஒரு கூடை நிறைய லென்ஸ் வெச்சிருப்பா. கண்ணுல ஒரு கண்ணாடி. அந்த லென்ஸ்ல இருந்து ஏதாவது ஒண்ண எடுத்து, ஒரு புஸ்தகத்து மேலே காண்பிச்சிண்டு, ஒரு டார்ச் லைட் அடிச்சு புஸ்தகம் படிப்பா. எனக்கு ரொம்ப ஆச்சர்யமா இருக்கும். இவ்வளவு உலகமே, ஸர்வக்ஞர்ன்னு, அப்படின்னு, கொண்டாடற ஒரு மஹான் புத்தகம் படிக்கிறார். அப்படின்னு எனக்கு ரொம்ப ஆச்சர்யமா இருக்கும்.

அந்த புஸ்தகங்கள்ல எவ்வளவு ஆவல்னா, ஒரு வாட்டி, நான் பாத்துண்டு இருக்கும்போது, வானதி திருநாவுக்கரசு செட்டியார், தான் அப்பப்போ போட்ட புத்தகங்கள் எல்லாம் எடுத்துண்டு வருவார். அதையெல்லாம் ஒரு கூட தட்டுல அடுக்கி அதை பெரியவா முன்னால வைப்பார். பெரியவா அதுல இருந்து சில புஸ்தகங்களை எடுத்து வெச்சுப்பார். ஒரு few hours அந்த புஸ்தகங்களை ஒண்ணுஒண்ணா எடுத்துப் பார்த்து, படிச்சு முடிச்ச புஸ்தகங்களை எல்லாம் இந்த பக்கம் வெப்பார். அப்படி, புஸ்தகம் படிக்கிறது நிறைய பாத்துருக்கேன். அதை தவிர, வித்வத் சதஸ் conduct பண்றது பாத்துருக்கேன். பெரியவா பாத்துண்டு இருப்பா. ஏதாவது, ஒரு ஒரு வார்த்தைதான் பேசுவா. இல்லைனா ஒரு சைகை காண்பிப்பா. அதையே அந்த பண்டிதர்கள் புரிஞ்சுண்டு, பெரியவா என்ன சொல்ல விரும்பறான்னு, அதை அவா சொல்லுவா. அதே மாதிரி, தமிழ் பண்டிதர்களை எல்லாம் வெச்சுண்டு ஒரு சதஸ் பண்றதை பாத்துருக்கேன்.

இப்படி மஹாபெரியவா தரிசனம் அப்படினா, எனக்கு personal ஆ ஞாபகம் இருக்கிறது, அவருக்கு படிப்புல, ரொம்ப தீராத ஆவல். அப்படிங்கிறது எனக்கு ஞாபகம் இருக்கு.

இப்போ பெரியவாளை பத்தி எல்லாரும் சொல்ற அனுபவங்கள் எல்லாம் கேட்கும்போதும், அது ரொம்ப correctன்னு தெரியறது. கி.வா.ஜகன்னாதன் அவருடையப் புஸ்தகங்களில் பார்த்தாலோ, அவரோட நாட்டுப்பெண் சித்ராங்கறவா பேசியிருக்கா. அதுல பாத்தா, மஹாபெரியவா, கி.வா ஜ வை திருப்புகழ் researchல ரொம்ப encourage பண்ணியிருக்கார். மு.மு.இஸ்மாயிலை கம்ப ராமாயணத்துல encourage பண்ணியிருக்கார். சிவன் ஸாரை அவரோட photography திறமையை வெளிப்படுத்தும்படியா பெரியவா test வெச்சு இருக்கா. பெரியவா ஒரு குளத்தங்கரையில நிக்கறா. “நாங்க எல்லாரும் வரும்படியா ஒரு photo எடு”ன்னு, சொன்ன உடனே சிவன் ஸார் மடமடன்னு அந்த குளத்துக்குள்ள இறங்கி ஒரு photo எடுத்துருக்கார். அதே மாதிரி, “சிதம்பரத்தோட எல்லா கோபுரங்களும் தெரியற மாதிரி photo எடு”ன்னு சொன்ன உடனே சிவன்ஸார் அந்த மாதிரி photo எடுத்துருக்கார். இந்த மாதிரி சித்திரக்கலைல பெரியவா அவரை encourage பண்ணியிருக்கா. இந்த கும்பகோணத்துல மடத்து லைப்ரரியப் பாத்துக்கச் சொல்லியிருக்கா. தேதியூர் சுப்ரமணிய சாஸ்த்ரிகள் ஶ்ரீ வித்யா சம்பந்தமான புஸ்தகங்கள் எல்லாம் போடறதுக்கு பெரியவா encourage பண்ணியிருக்கா. எஸ்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்னு சமஸ்கிருத காலேஜ்ல இருந்தார். அவர்கிட்ட வேதம், சங்கர பாஷ்யம் கேட்டு இருக்கார். நம்ம ஸ்வாமிகள்கிட்ட ஶ்ரீமத் பாகவதம் கேட்டுருக்கார். சங்கீதம்னா மணி ஐயர். அந்த மாதிரி, சித்திரம் வரையரதுன்னா சில்பி. கல்வெட்டுனா நாகசாமி. சிற்பம்னா கணபதி ஸ்தபதி, வில்லுப் பாட்டு னா ஆறுமுகம். ராமாயணம் காளிதாசர் காவ்யங்கள் னா வீழிநாதன் மாமா, அப்படின்னு, இந்த மாதிரி பண்டிதர்களை பெரியவா நிறைய encourage பண்ணியிருக்கா, அப்படிங்கிறது காதுல விழுந்துண்டே இருக்கு.

அந்த மாதிரி, மஹா பெரியவா சொல்றா “அம்மா குழந்தைக்கு பால் கொடுத்து ஆளாக்கிற மாதிரி, அம்பாள் குரு வடிவாக வந்து ஞானப் பால் கொடுத்து, ஒருத்தனோட அக்ஞானத்தைப் போக்கறா. அதுனாலதான் அம்பாளோட உபாசனைக்கு ஶ்ரீவித்யா உபாசனைன்னு பேர். அப்படின்னு சொல்றா. அது பெரியவாளுக்குதான் பொருந்தும்.

அந்த ஞானத்தை அம்பாள்தான் கொடுக்கறா அப்படிங்கிறதுக்கு, பெரியவா கேனோபநிஷத்ல இருந்து ஒரு கதை சொல்றா. அதாவது தேவர்களுக்கே கூட அம்பாள்தான் ஞானத்தைக் குடுத்தாங்கிற ஒரு கதை.

உ

ஒரு தடவை தேவாசுர யுத்தத்தின்போது, தேவர்கள் ஜெயிச்சுடரா. அவா வெற்றி விழா கொண்டாடறா. ஒருத்தர ஒருத்தர் ஸ்தோத்திரம் பண்ணிண்டு, இப்படி. அப்போ, பரமாத்மா பார்த்தாராம். இது என்னடா, இந்த தேவர்களுக்கே ஜெயிச்ச உடனே, அசுர குணம் வந்துடும் போல இருக்கே, அப்படின்னு நினைச்சு, அப்படி அவா கெட்டுப் போகக் கூடாதுன்னு சொல்லி, பக்கத்துலயே ஒரு அடிமுடி காண முடியாத மாதிரி ஒரு ஜோதி ஸ்வரூபமா, ஒளி வடிவமா பகவான் காட்சி கொடுக்கறார். இது என்னன்னு, இவாளுக்கு எல்லாம் வியப்பா இருக்கு. இப்போ நமக்கு புரியாததை யட்சிணினு சொல்றோமொல்யோ, அந்தமாதிரி அவா அதை யக்ஷம்னு சொன்னா.

அந்த யக்ஷத்துக்கிட்ட முதல்ல அக்னிய அனுப்பறா. அக்னி போயி நீ யாருன்னு கேட்கறதுக்குள்ள, அந்த யக்ஷம் அக்னிய பாத்து நீ யாருன்னு? கேட்கறது. உடனே அக்னி "என் பேர் ஜாதவேதஸ். அக்னி பகவான்", அப்படின்னு சொன்ன உடனே, உன்னுடைய ஷக்தி என்னன்னு அந்த யக்ஷம் கேட்கறது. அதுக்கு அக்னி பகவான், நான் எதையும் பஸ்மீகரம் பண்ணிடுவேன் அப்படின்ன உடன், யக்ஷம் ஒரு துரும்பை கீழ போட்டு இதை எரி பாக்கலாம் அப்படின்ன உடனே, அக்னி தன்னோட முழு பலத்தையும் உபயோகப் படுத்தி அதை எரிக்கப் பாக்கறார். ஆனா அவரால எரிக்க முடியல. அக்னி பகவான் வெக்கப் பட்டுண்டு திரும்பி வந்துடறார்.

அப்புறம் வாயுவ அனுப்பறா. வாயு அதுக் கிட்டப் போன உடனே நீ யார்?னு யக்ஷம் கேட்கறது. வாயு என் பேர் மாதரீஷ்வன், நான் எதையும் புரட்டி போட்ருவேன், அப்படின்ன உடனே, திரும்பவும் யக்ஷம் ஒரு துரும்பை போட்டு, இதை தூக்கு பாக்கலாம், அப்படின்ன உடனே, தன்னோட முழு பலத்தையும் use பண்ணி அதை தூக்கப் பாக்கறார். வாயு பகவானால அதை தூக்க முடியல. வாயுவும் வெக்கப் பட்டுண்டு திரும்பி வந்துடறார்.

என்னடா அது, நாம எல்லாம் வெற்றி விழா கொண்டாடும் போது, இந்த ஒரு யக்ஷம் என்னன்னே தெரியல, அதுவே நமக்கு ஒரு தோல்வி. நம்முடைய பக்ஷத்துல ரொம்ப சக்திமானான அக்னி, வாயுவெல்லாம் தோத்துப் போயிட்டானு நினைச்சு, அந்த வெற்றி விழா, அவாளுக்கு அபஜயம் ஆகிவிடறது, அவமானமா ஆகிவிடறது. கொஞ்சம் நல்லறிவும் வரது. விநயம் வரது. இந்திரன் பணிவோட அந்த யக்ஷத்தை நெருங்கி நமஸ்காரம் பண்றான். அப்போ "அந்த யக்ஷம் இருந்த இடத்தில் ஒரு ஸ்திரீ ரூபத்தில், உமா தேவி, ஹைமவதியாக காக்ஷி கொடுத்தாள்" அப்படீன்னு அந்த உபநிஷத்தில வரது.

"பஹு ஷோபமானா" ரொம்ப ஷோபையோடு, அழகோடு, காக்ஷி கொடுத்தா. "ஞானம் தான் ஷோபை" அப்படீன்னு ஆதி சங்கரர், ஆச்சார்யாள் இங்கே

பாஷ்யம் எழுதி இருக்காளாம். அப்படி ஞான வடிவமான அம்பாள் தங்கமயமாக ஒளி உருவமாக காக்ஷி கொடுத்தா.

அப்போ இந்திரன் "இங்கே இப்போ ஒரு ஜோதி தெரிஞ்சுதே, அது என்ன"னு கேட்கறான். அப்போ அம்பாள் சொல்றா "அது தான்பா பரப்ரம்மம். அது தான் அகண்டமான சக்தி. அந்த அகண்டமான சக்தியோட துளித்துளி தான் நம்ம எல்லோர்கிட்டேயும் இருக்கறது. தேவர்களுக்கும், அசுரர்களுக்கும், மனுஷ்யர்களுக்கும் எல்லார்கிட்ட இருக்கற சக்தியும் அந்த பரப்ரம்மத்தோட சக்தி தான்" அப்படீன்னு ஞானோபதேசம் பண்றா, அப்படீங்கற உபநிஷத் கதையை சொல்லிட்டு பெரியவா சொல்றா,

நான் காளஹஸ்திக்கு போயிருந்தேன். அங்கே கிரி பிரதக்ஷிணம் பண்ணினேன். அங்கே மலை மேலே ஒரு சஹ்ஸ்ரலிங்கம் கோவில் இருந்தது. அந்த லிங்கத்தை தரிசனம் பண்ணினேன். பக்கத்துலேயே யக்ஷ லிங்கம்னு ஒண்ணு இருக்கு. அது பக்கத்துல இந்திர லிங்கம் னு ஒண்ணு இருக்கு. காலஹஸ்தில பெரிய கோவிலில் அம்பாள் பெயரும் "ஞான ப்ரஸூனாம்பா" "ஞானப்பூங்கோதை" னு தமிழ்ல சொல்றா. அதுனால இந்த அடிமுடி காணாத ஜோதி ஸ்வரூபம்னு சொன்னவுடன் உங்களுக்கு திருவண்ணாமலை அருணாசலம் ஞாபகம் வந்திருக்கும். ஆனா எனக்கு, இந்த காளஹஸ்தியில் தான் இந்த கேனோபநிஷத் சம்பவம் நடந்து இருக்கு னு தோணறதுனு பெரியவா சொல்றா.

"கிருஷ்ணனோடு ஆவிர்பவிச்ச துர்கா தேவி துஷ்ட சம்ஹாரம் பண்ணினதை சாரதா நவராத்திரினு கொண்டாடறோம். ராமரோடு அம்பாள் ஞானாம்பிகையாக ஆவிர்பவிச்சதை வசந்த நவராத்திரி ஒன்பது நாட்களில் கொண்டாடுகிறோம்" அப்படீன்னு சொல்லி முடிக்கறா.

குரு வடிவாக அம்பாள் வந்து ஞானோபதேசம் பண்றா, ஞானப் பால் குடுக்கறானு கேட்ட உடனே எனக்கு காமாக்ஷி ஞாபகம் வரது. "குருமூர்த்தே த்வாம் நமாமி காமாக்ஷி"னு மஹாபெரியவா காமாக்ஷியோட அவதாரம் தானே. மூக பஞ்சசதி ல ஸ்துதி சதகத்துல ஒரு ஸ்லோகம் வரது

नित्यं निश्चलतामुपेत्य मरुतां रक्षाविधिं पुष्णती

तेजस्सञ्चयपाटवेन किरणानुष्णद्युतेर्मुष्णती ।

काञ्चीमध्यगतापि दीप्तिजननी विश्वान्तरे जृम्भते

काचिच्चित्रमहो स्मृतापि तमसां निर्वापिका दीपिका ॥

நித்யம் நிஸ்ச்சலதாம் உபேத்ய மருதாம் ரக்ஷாவிதிம் புஷ்ணதீ

தேஜசஞ்சய பாடவேன கிரணான் உஷ்ணத்யுதேர் முஷ்ணதீ |

காஞ்சிமத்யகதாபி தீப்தி ஜனனீ விஷ்வாந்தரே ஜ்ரும்பதே

காசித்சித்ரம் அஹோ ஸ்ம்ருதாபி தமஸாம் நிர்வாபிகா தீபிகா ||

காஞ்சி தேசத்துல ஒரு தீபம் இருக்கு. தீபச்சுடர் காத்துல அசையும். ஆனா இந்த தீபம் "நித்யம் நிஸ்ச்சலதாம் உபேத்ய" சுடர் அசையாத தீபம். காத்துல தானே தீபம் அசையும். இந்த தீபம் மருத்துக்களையே காப்பாத்தறது, என்ன ஆச்சர்யம்? மருத்துக்கள்னா தேவர்களில் ஒரு காத்து வகை. அந்த மருத்துக்கள், தேவர்களை எல்லாம் அம்பாள் தான் காப்பாத்தறா, அப்படீன்னு சொல்றார்.

"தேஜசஞ்சய பாடவேன கிரணான் உஷ்ணத்யுதேர் முஷ்ணதீ" எல்லா ஒளியையும் தன்னிடத்தில் தேக்கி வெச்சுண்டு இருக்கறதுன்னு பார்த்தா உஷ்ணத்யுதி யான சூரியன். அந்த சூரியனோட ஒளியையே மழுங்க அடிக்க கூடிய ஒளியோடு இந்த தீபம் விளங்கறது.

"காஞ்சிமத்யகதாபி தீப்தி ஜனனீ விஷ்வாந்தரே ஜ்ரும்பதே" காஞ்சி மத்யத்துல இருந்தாலும் இந்த விளக்கோட ஒளி விஷ்வாந்தரம் அண்டத்திலுள்ள எல்லா இடங்களிலும் இந்த தீபத்தோட ஒளி பரவி இருக்கு.

“காசித்சித்ரம்” இதுக்கெல்லாம் மேலே ரொம்ப ஆச்சர்யம் என்னனா

“அஹோ ஸ்ம்ருதாபி தமஸாம் நிர்வாபிகா தீபிகா” ஒரு விளக்கை ஏத்தி வெச்சா தான் அந்த அறையில் இருக்கற இருள் போகும். இந்த காமாக்ஷிங்கற விளக்கை நினைச்சாலே நம்ம மனசுல இருக்கற அக்ஞானம்கிற இருள் போயிடும் அப்படீன்னு மூககவி சொல்றார்.

இந்த ஸ்லோகத்துக்கு பெரியவா தான் பொருள். அவரை நினைச்சா லே அக்ஞானம் போகும்.

பெரியவா படிப்புல ஆர்வம் காண்பிச்சா ங்கறதுக்கு best example சுந்தரராம மாமா. “துரைஸ்வாமியோட பிள்ளை சுந்தரராமன்” (Sundararaman, that son of Duraiswamy) என்று அந்த மாமா, மஹாபெரியவா தன்னை எப்பாடுபட்டு படிக்க வெச்சான்னு ஒரு கட்டுரை எழுதி இருக்கா. அது ரொம்ப அழகா இருக்கும். தனியா அவர் ஒரு பத்து நிமிஷம் பேசி இருக்கார். அதுல சொல்றார் – “மஹாபெரியவாளுக்கு எல்லாரும் நன்னா படிக்கணும். என்கிட்டே ‘நீ என்ன படிக்கற?’ னு கேட்டார். Mathematics ல ரிசர்ச் பண்றேன்னு சொன்னேன். ஸ்ரீனிவாச ராமானுஜம் ஒருத்தர் தானா? அவருக்கும் எத்தனையோ ச்ரமங்கள் இருந்தது. ஆனாலும் மூளைக்குள்ளேயே நிறைய ரிசர்ச் பண்ணி அவர் பேரோட விளங்கினார். அந்த மாதிரி ஒவ்வொருத்தரும் அவாவாளோட வேலையில், ஆராய்ச்சியில், எந்த vocationனா இருந்தாலும் முயற்சியோட நம்பிக்கையோட நிறைய படிச்சு, நிறைய ரிசர்ச் பண்ணணும். கல்யாணம், குழந்தைகள் அவ்வளவு

தானா வாழ்க்கை? ஜனங்களுக்கு உபயோகமாக புத்தியைக் கொண்டு ஏதாவது பண்ணணும்" னு personal ஆக சொல்லி இருக்கா. அவரும் chance கிடைக்கும் போதெல்லாம் அதை எல்லாருக்கும் சொல்லிண்டே இருந்தார்.

பெரியவா வெறும் வேதாந்தி கிடையாது. செயல் வேதாந்தி. எல்லாரும் நன்னா இருக்கணும். உலகமே க்ஷேமமாக இருக்கணும். ஒருத்தருக்கு ஒருத்தர் பரோபகாரம் பண்றதுக்கு புத்தியை உபயோகப் படுத்தணும். பாரத தேசம் intellectuals நிறைஞ்ச தேசமாக இருந்தது. திரும்பவும் அப்படி கொண்டு வரணும் அப்படின்னு பெரியவா சொல்லி இருக்கா.

அதைக்கேட்ட போது தான் இந்த ஸரஸ்வதி பெரியவாளைப் பத்தி பேசணும் னு ஒரு inspiration.

ஜானகீ காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம...

உ

ஸ்ரீமத்பாகவதத்தில் உத்தவ கீதையில் வரும் 24 குருக்கள்

மஹாபெரியவாளைப் பத்தி எல்லாரும் அவா, அவா அனுபவங்களை பகிர்ந்துக்கும் போது, நமக்கு இந்த மாதிரி ஒரு பாக்கியம் கிடைக்கலையே, ஒரு பொள்ளாச்சி ஜெயம் பாட்டி மாதிரியோ, ஒரு தியாகுத் தாத்தா மாதிரியோ, நாம மஹாபெரியவாளுக்குக் கைங்கர்யம் பண்ணி, அவாளோட நெருங்கியிருந்து, அவாளை அனுபவிக்கலையே அப்படின்னு, ரொம்ப குறையா வர்றது. ஆனா அதுக்கு என்ன பண்றது? அதுக்கு நான் ஒரு சமாதானம் சொல்றேன்.

ஸ்ரீமத் பாகவதத்துல, 11வது ஸ்கந்தத்துல உத்தவ கீதைன்னு ஒண்ணு வர்றது. கிருஷ்ண பரமாத்மா 125 வருஷம் இந்த பூமியில தர்ம சம்ஸ்தாபனம் பண்ணிட்டு, வைகுண்டத்துக்குப் போகப் போறார். அப்போ உத்தவர் போய் நமஸ்காரம் பண்ணி, சரணாகதி பண்ணி, எனக்குப் புரியற மாதிரி உபதேசம் பண்ணுங்கோ, அப்படின்னு கேட்கறார். அந்த உத்தவருக்குக் கிருஷ்ணர் பண்ண உபதேசங்கள் உத்தவ கீதைன்னு சொல்றா. அதுக்கு தனியான ஒரு ஏத்தம்.

அந்த மாதிரி நாம எல்லாம், நம்முடைய சின்ன வயசுல, மஹாபெரியவா, சிவன் ஸார், கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் எல்லாம் பழுத்த பழமா இருக்கும்போது, அவா பண்ண உபதேசங்கள கேட்டு இருக்கோம். அது நம்ம காதுல விழுந்திருக்கு. அது வந்து உத்தவ கீதை மாதிரி ஒரு தனி ஏத்தம், அப்படின்னு சமாதானப் படுத்திப்போம்.

இன்னொன்னு, நாம எல்லாம் பெரியவா கிட்ட நெருங்கிப் பழகி இருந்தாக்கூட, ஒரு கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் மாதிரியோ, இல்ல மேட்டூர் ஸ்வாமிகள் மாதிரியோ பணிவா கைங்கர்யம் பண்ணியிருப்போமான்னு தெரியல. நம்ம அம்மா அப்பாக்கிட்ட எப்படி நடந்துக்கறோம்? அப்படி அவாளோடப் பெருமையைப் புரிஞ்சா நடந்துக்கறோம்? நாம மஹாபெரியவா கிட்ட அபசாரம் கூடப் பண்ணியிருக்கலாம், அது இல்லாம பொழச்சுதேன்னு ஒரு சமாதானம் பண்ணிக்கலாம்.

அந்த உத்தவ கீதைல, முதல்ல கிருஷ்ணர் உத்தவர் கிட்ட, சொல்றார். எங்களுடைய பூர்வீகர்கள், கூடஸ்த்தர்களான, யது மஹாராஜா, தத்தாத்ரேய மஹா யோகி கிட்ட, “நீங்கள் பேரானந்தத்துல இருக்கேளே, அதோட ரஹஸ்யம் என்ன?” அப்படின்னு கேட்ட போது, தத்தாத்ரேய மஹா யோகி, 24 குருமார்களப் பத்தி சொல்றா, அப்படின்னு அந்த 24 குருக்கள்ன்னு ஒரு விஷயம் வர்றது. இதை ஸ்வாமிகள், ரொம்ப அழகா சொல்வார்.

இந்த 11வது ஸ்கந்தம் முழுக்க, ஸன்யாசிகள் கேட்கணும்னு சொல்லி, மஹாபெரியவா ஸ்வாமிகள் கிட்ட பிரவசனம் கேட்கும்போது, இந்த 11வது ஸ்கந்தம் வரும்போது, மத்த ஸன்யாசிகள் எல்லாரையும் வரச் சொல்லு, என்று சொல்வாராம். அவ்வளவு அது விசேஷம்.

யது மஹாராஜன், தத்தாத்ரேய மஹா யோகியப் பார்க்கும்போது நமஸ்காரம் பண்ணிக் கேட்கறான். “நீங்க பலிஷ்டரா இருக்கேள், healthyஆ இருக்கேள். ரொம்ப புத்திமானாவும் இருக்கேள். ஆனா ஒரு கார்யம் பண்றது இல்ல. ஆனா நீங்க எங்களை மாதிரியெல்லாம் இந்த சம்சார தாபத்துல தவிக்காம பேரானந்தத்துல இருக்கேள். ஒரு காட்டுத்தீயில எல்லா மிருகங்களும் அவஸ்தை படும்போது, ஒரு யானை மட்டும் தப்பிச்சுப் போய் கங்கையோட ஒரு மடுவுல, ஜலத்துகுள்ள இருந்தா எவ்வளவு ஆனந்தமா இருக்குமோ, அந்த மாதிரி நீங்க இருக்கேள். துக்கக் கலப்பில்லாத ஆனந்தத்துல இருக்கேள். அது எப்படீன்னு எங்களுக்குச் சொல்லிக் கொடுங்கோ”, அப்படின்னு கேட்கறார்.

இந்த துக்கக் கலப்பிலாத ஆனந்தம், அப்படிங்கிறது, அந்த வார்த்தைய சொல்லும்போது,

दधानो मन्दारस्तबकपरिपाटीं नखरुचा
वहन्दीप्तां शोणाङ्गुलिपटलचाम्पेयकलिकाम् ।
अशोकोल्लासं नः प्रचुरयतु कामाक्षि चरणः
विकासी वासन्तः समय इव ते शर्वदयिते ॥

“ததானோ மந்தாரஸ்தபக பரிபாடீம் நகருசா

வஹன்தீப்தா: சோ’ணாங்குலிபடல சாம்பேயகலிகாம் |

அசோகோல்லாஸம் ந:ப்ரசுரயது காமாக்ஷி சரண:

விகாஸீ வாஸந்த: ஸமய இவ தே ச’ர்வதயிதே ||

அப்படின்னு மூகபஞ்சசதி பாதாரவிந்த சதகத்துல, 66வது ஸ்லோகம் ஞாபகம் வரது.

அம்மா, உன்னோட பாதத்தில் நக காந்தி மந்தாரப் புஷ்பம் போல இருக்கு, விரல்கள் சம்பகப் புஷ்பம் போல செக்கச்செவேல்னு இருக்கு. இதெல்லாம் பார்த்தால் பாதம்கிற வசந்த ருது வந்த உடனே இந்த மலர்கள் எல்லாம் மலர்ந்துடுத்துன்னு தெரியறது. என் மனசுல, ‘அசோகோல்லாசம்’, வசந்த ருது அசோகப் புஷ்பங்களையும் மலரச் செய்யட்டும். அப்படின்னு ஒரு அர்த்தம். அசோகோல்லாசம் அப்படிங்கிறத்துக்கு, சோகமே இல்லாத துக்கக் கலப்பில்லாத ஆனந்தத்தை உன்னுடைய பாதம் தரட்டும். அப்படின்னு அர்த்தம்.

இந்த இடத்துல ஸ்வாமிகள் சொல்வார், “துக்கக் கலப்பில்லாத ஆனந்தம்கறது, ஞானம் ஏற்பட்டாதான் கிடைக்கும். அந்த மாதிரி அம்பாளுடைய சரணத் தியானம் ஞானத்தை கொடுக்கும் என்பதை கவி இவ்வளவு அழகா சொல்றார்” அப்படிம்பார்.

அந்த தத்தாத்ரேய மஹா யோகி ‘எனக்கு ஞானம் இருக்கு, அதனால்தான் நான் ஆனந்தத்துல இருக்கேன்’, அப்படின்னு சொல்லலை. அவர் சொல்றார், ‘எனக்கு 24 குருமார்கள். அவாகிட்டயிருந்து நான் படிப்பினை தெரிஞ்சுண்டேன்’, அப்படின்னு சொல்றார். அந்த மாதிரி உலகத்துல பார்த்த இடத்துல இருந்தெல்லாம் படிப்பினை தெரிஞ்சுகலாம்னாலே, எவ்வளவு பணிவு வேணும்! அந்த humilityங்கிறதே, ego இல்லாம ஒவ்வொண்ணுத்துல இருந்தும் ஒன்னு தெரிஞ்சிக்கணும்கிற அந்த குணமே, பாதி ஆத்ம ஞானம்.

மஹாபெரியவா ஒரு தடவை காசிக்குப் போயிருந்தபோது, பண்டிதர்கள் சில பேர் வந்து, “உங்கள என்ன ஜகத்குருங்கிறாளே, நாங்க எல்லாம் உங்களை குருன்னு நினைக்கலையே எப்படி நீங்க ஜகத்குருவா இருக்க முடியும்?” அப்படின்னு கேட்கறா. பெரியவா “இல்லை இல்லை, நீங்க தப்பா புரிஞ்சுண்டு இருக்கேள், நான் ஜகத்துக்கே குரு கிடையாது. இந்த ஜகத்தே எனக்கு குரு. இங்க பாருங்கோ ஒரு குருவிக் கூடு இருக்கு. அந்த குருவிக்கு ஒரு கிரியா சக்தி இருக்கு. இவ்வளவு அழகா ஒரு கூடு கட்டறது. இந்த மாதிரி நம்மால பண்ணமுடியுமோ? குருவி கிட்டேர்ந்து அதை கத்துண்டேன். இப்படி எல்லாத்துகிட்டருந்தும் நான் விஷயங்கள் கத்துக்கறேன். அதுனால இந்த ஜகத் எனக்கு குரு”, அப்படின்னு சொல்றா. அந்த பண்டிதர்கள் நமஸ்காரம் பண்ணி “மன்னிச்சுடுங்கோ, உங்களோட பெருமை தெரியாம கர்வமா பேசிட்டோம்,

நீங்கதான் ஜகத்குரு” அப்படின்னு சொல்லிட்டுப் போறா. அப்படி எல்லாத்துலருந்தும் ஒண்ணு தெரிஞ்சுக்கலாம்ங்கிறத சொன்ன உடனே, மஹாபெரியவா தான் ஞாபகம் வர்றது. இந்த தத்தாத்ரேய மஹா யோகியும் அந்த மாதிரி சொல்றார்.

1. அந்த இருபத்து நாலுல, முதல்ல என்னனா பூமி. ‘ஜனனி ப்ரித்வி காமதுக்காஸ்தே, ஜனகோ தேவஹ சகல தயாளோ’ அப்படின்னு மைத்ரீம் பஜத பெரியவா சொல்லியிருக்கார் இல்லையா, அந்த ஜனனி, பூமி தேவி, பூமித்தாய். பூமியை வெட்டறோம், குண்டு வெச்சு வெடிக்கறோம், என்னென்னவோ பாடு படுத்தறோம், ஆனா பூமி எல்லாத்தையும் பொறுத்துண்டு, நமக்கு தானியங்களையும், மரங்களையும், இன்னும் தங்கம், வெள்ளிங்கிற எல்லா செல்வங்களையும், கொடுக்கறா. அப்பேற்பட்ட அந்த குணத்தை பூமிகிட்டயிருந்து கத்துக்கணும். கஷ்டத்தை பொறுத்துக்கணும், நம்மள கஷ்டப் படுத்தறவாளுக்கும் நாம நன்மை செய்யணும்.

இதை கேட்கும்போது எனக்கு தியாகு தாத்தா ஒண்ணு சொல்வார். அது ஞாபகம் வர்றது. சின்ன வயசுல பெரியவா அவரை ஆட்கொண்டு அழைச்சுண்டு போயி பதினைஞ்சு வருஷம் தன்கிட்ட service பண்ண வெச்சு, அப்புறம் “நீ கிரஹஸ்தாச்ரமத்துல போகணும், அதுனால வேலைக்கு போ” அப்படின்னு அனுப்பிடறார். இப்படி நெருங்கி பழகி, பெரியவாளோட பக்தி, வைராக்கியம் எல்லாம் தெரிஞ்சவர் அவர். அவர் கல்யாணம் ஆகி கொஞ்ச நாள் கழிச்சு, பெரியவாகிட்ட வரும்போது, பெரியவா, அவருடைய மனைவி கிட்ட தனியா பிரசாதம் கொடுக்கறா. இது, இவருக்கு ஏதோ மாறுபாடா மனசுல பட்டு கோபம் வந்துடுத்து. எல்லா ஸன்யாசிகளும் இப்படிதான், அப்படின்னு feel பண்ணி, அவர் பஸ் ஸ்டாப் போகும்போது, திட்டிண்டே வரார். மனசு வேறுபாடு வந்துடுத்து. பெரியவாகிட்டயே போகல. அப்புறம் எல்லாம் சரியாகி ஒரு வருஷம் கழிச்சு இதெல்லாம் மறந்தே போயிடறது அவருக்கு. பெரியவா கிட்ட வரார், அப்போ பெரியவா சொல்றார், ‘இவனுக்கு ஜாதகத்துல த்வீகளத்ர தோஷம் இருக்கு. அதாவது, மனைவி காலமாகி இன்னொரு கல்யாணம் பண்ணிக்கணும்ங்கிற தோஷம் இருக்கு. அந்த மாதிரி இவன் கஷ்டப்படக் கூடாதேங்கிறதுக்காக, நான் இவன் மனைவிக்கு ஒரு பிரசாதம் கொடுத்தேன், இவன் அவ்வளவு கோச்சுண்டுட்டான் என்கிட்டே, இங்கேயிருந்து பஸ் ஸ்டாப் போறவரைக்கும் எனக்கு சஹஸ்ரநாமம் அர்ச்சனை பண்ணியிருக்கான், அதாவது என்னை திட்டியிருக்கான்’, அப்படின்னு சிரிச்சுண்டே சொல்றா பெரியவா. அப்பறம் இவர் feel பண்ணி நமஸ்காரம் பண்றார். இது முப்பத்தைஞ்சு வயசுல. அப்புறம் தொண்ணூறு வயசு வரைக்கும் பெரியவா அவருக்கு அவ்வளவு கருணை காண்பிச்சிருக்கா.

இன்னொருத்தர் இந்த மாதிரி நம்மள தப்பா நினைச்சா, நமக்கு எவ்வளவு கோபம் வரும்? அதை பெரியவா பொறுத்துண்டாங்கிறது இல்ல, அதுக்கப்றமும் அப்படி அனுக்ரஹம் பண்ணியிருக்கா. இந்த மாதிரி ரொம்ப பூமியாட்டம் பொறுமையா இருக்கணும்ங்கிறத தெரிஞ்சுண்டேன் அப்படிங்கிறார், தத்தாத்ரேய யோகி. இது முதல் குரு.

2. அப்பறம் வாயு. வாயு ஒரு மல்லிகைப் பூ தோட்டத்து வழியா போனா அது மல்லிகை பூ வாசனை அடிக்கிறது, அடுத்து ரோஜா தோட்டத்து வழியா போனா ரோஜா வாசனை அடிக்கிறது, வேற துர்நாற்றம் னா அதுவும் வந்துடறது. வாயு எதுக்காகவாது கவலை படறதோ? என்னோட மல்லிகை பூ வாசனை போயிடுத்தே, அப்படின்னு கவலை படறதோ. அந்த மாதிரி நாம எல்லாரோடையும் பழகலாம், அவாளுடைய குணங்கள் நம்ம மேலே படக் கூடாது. ஒரு நாள் AC, அடுத்த நாள் கொசுக்கடி எல்லாம் பொறுத்துக்கணும். ACல பற்று வெச்சாதானே கொசுக்கடி ரொம்ப கஷ்டமா இருக்கும். அந்த மாதிரி, எதுலயும் பற்று வைக்கக் கூடாதுன்னு வாயுவைப் பார்த்து கத்துண்டேன். அப்படின்னு சொல்றார்.

3. அடுத்தது, ஆகாசம். வாயு உடம்பு மேலே படறது, நாம feel பண்றோம், உள்ளுக்குள்ள மூச்சுக்காத்தா போய்ட்டு வரது. அதே மாதிரி தான் ஆகாசமும். நாம நிமிர்ந்து பார்த்தா வானத்துல தெரியறது ஆகாசம்னு நினைக்கிறோம், ஆகாசம்ங்கிறது, சர்வவியாபி. எங்கும் இருக்கு. நமக்கு உள்ளும் புறமும் இருக்கு. அதே மாதிரிதான் பகவானும். பகவான் எங்கும் நிறைஞ்சிருக்கார். ஆனா, ஆகாசங்கிறது எதுலயும் ஈஷிக்கிறது இல்ல. அந்த மாதிரி உலகத்துல எதுலயும் பற்று வைக்காம பகவத் பஜனம் பண்ணிண்டே இருக்கணும், அப்படின்னு ஆகாசத்துக்கிட்டயிருந்து கத்துண்டேன். அப்படி பஜனம் பண்ணினா ஆகாச ரூபமாக பிரம்ம ஸ்வரூபமா ஆயிடலாம் அப்படின்னு ஸ்வாமிகள் சொல்றார்.

4. அடுத்தது ஜலம். ஆத்தங்கரையில, குளத்துல எங்க ஜலத்தப் பார்த்தாலும், மனசுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும். அந்த மாதிரி பாக்கறதுக்கு, பழகறதுக்கு ரொம்ப இனிமையா இருக்கணும் நாம, அப்படின்னு கத்துண்டேன். சிலபேர் எப்ப பார்த்தாலும், கோச்சுண்டே இருப்பா, ரொம்ப வள்ளு வள்ளுன்னு விழுவா, இல்ல வருத்தப்பட்டுண்டே இருப்பா. எப்பப்பாத்தாலும் ரொம்ப moodyயா இருப்பா, அப்படி இருக்கக் கூடாது. ரொம்ப உல்லாசமா இருக்கணும், எல்லாருக்கும் சந்தோஷத்தை கொடுக்கணும். நம்மகிட்ட வந்து பேசினா பழகினா அவாளுக்கு ஆனந்தம் ஏற்படணும்.

இன்னொன்னு, ஜலத்தை குடிச்சா தாக சாந்தி ஏற்படறது. ஏதாவது முடிஞ்ச உபகாரம் பண்ணி அதன் மூலமா அது மூலமா மத்தவாளுக்கு தாப சாந்தி ஏற்படுத்தணும்.

அதே மாதிரி நம்மக்கிட்ட வந்து பழகினா, அவாளுக்கு, பகவானுடைய நாமங்களையும், மஹாபெரியவாளுடைய சரித்ரம், சிவன் சாருடைய சரித்ரம், ஸ்வாமிகளுடைய சரித்ரம், பகவானுடைய சரித்ரம் இதையெல்லாம் சொல்லி, அவாளுக்கு தாப சாந்தி ஏற்படுத்தணும், நம்மோட பழகறதுனால அவா தூய்மை அடையணும். ஜலத்தை வெச்சு குளிச்சா தூய்மை அடையற மாதிரி, அவா, நம்மோட பழகறதுனால நல்ல விஷயங்கள் தெரிஞ்சு, மனசு தூய்மை அடையும்படியா நாம நடந்துக்கணும்.

5. அடுத்தது நெருப்பு. நெருப்பு, எதை போட்டாலும் ஜீரணம் பண்ணிடறது. அதே மாதிரி, யாராத்துல சாப்ட்டாலும், எதை சாப்ட்டாலும் ஜீரணம் பண்ற அளவுக்கு நமக்கு தபஸ் ஜாஸ்தியா இருக்கணும். அப்படின்னு சொல்றது. இங்கே ஸ்வாமிகள் சொல்றார், சிவன் ஸார் மாதிரி, சிவன் ஸார் எங்க வேணா, எது வேணா சாப்டுவார். கிம்போக்தவ்யம், கிமபோக்தவ்யம் அப்படின்னு எங்க வேணா சாப்டுவார். ஒரு எரியற தீக்குச்சியை ஈரமா இருக்கற விறகுக்கட்டை மேலே போட்டா, அணைஞ்சு போயிடும். ஆனா காட்டுத்தீயில பச்சை மரமெல்லாம் கூட பஸ்மம் ஆயிடும். அந்த மாதிரி நாம பத்து காயத்ரிதான் பண்றோம்னா, இங்க சாப்பிடலாமா, அங்க சாப்பிடலாமானுதான் பாக்கணும். பரம பக்தனா இருந்துட்டா, சிவன் ஸார் மாதிரி, ஞானாக்னி எல்லாத்தையும் எரிச்சுடும். அப்படின்னு சொல்றார் ஸ்வாமிகள்.

6. அடுத்தது சந்திரன். சந்திரன் வளர்றது, தேயறது. அதுல சந்திரன் தேயறது இல்ல. அதோட பிறைகள் தானே, அதோட கலைகள் தானே தேய்ஞ்சு வளரர்து. அந்த மாதிரி இந்த உடம்பு, ஒவ்வொரு பருவத்துல, இளமை பருவத்துல, முதுமை பருவத்துல மாறறது. அதே மாதிரி ஸ்தூலமாறது, ஒல்லியாறது, குண்டாறது எல்லாம் இந்த உடம்புக்கு தானே தவிர, உள்ள இருக்கிற ஆத்மாக்கு இல்ல, அப்படின்னு தெரிஞ்சுக்கணும் அப்படின்னு சொல்றார். இது இந்த காலத்துல ரொம்ப முக்யமான உபதேசம்னு தோன்றது. இங்க இருக்கற இருபத்துநாலுமே ஸன்யாசிகளுக்கு மட்டும் இல்ல. எல்லாருக்குமே இதுல ஒரு பாடம் இருக்கு. அந்த மாதிரி, இந்த காலத்துல உடம்போட பருமன், ஒல்லிய பத்தி எல்லாரும் எவ்வளவு கவலைப்படறா. உடம்பு வாகுன்னு ஒன்னு இருக்கு. இவ்வளவு கவலைப்பட வேண்டாம், அப்படின்னு சந்திரன்கிட்டயிருந்து தெரிஞ்சுக்கலாம்.

7. சூரிய பகவான். நிஜ சூரியன் ஆகாசத்துல இருக்கு. ஒரு டப்பு (tub) ஜலத்துல, சூரியன், பிரதிபலிக்கிறது. அந்த டப்பு ஜலத்தைக் கொட்டிட்டா இங்க இருக்கிற

சூரியன் மறைஞ்சுடுமே தவிர, நிஜ சூரியனுக்கு ஏதாவது ஆபத்து உண்டோ? அந்த மாதிரி பரமாத்மா அகண்டமானவர். அவர் எல்லா ஜீவராசிகளிலும் துளிதுளியா தெரியறார். இங்க இருக்கிற எல்லா ஜீவராசிகளும் அழிஞ்சாலும் சரி, பகவான் அவ்யயம், அழியாத வஸ்து, அப்படின்னு சூரியனை பாத்து தெரிஞ்சுக்கணும், அப்படின்னு சொல்றார்.

வேற ஒரு இடத்துல இருந்து ஸ்வாமிகள் சொல்வார். சூரியன் ஜலத்தை இழுக்கறான். வேற எங்கயோ கொண்டு போயி விடறான். அந்த ஜலத்தை வந்து சூரியன் என்னோட ஜலம் அப்படின்னு சொல்றானோ? அந்த மாதிரி நாம சம்பாதிக்கிறோம், யாரோ அதை எடுத்துண்டு போயி செலவு பண்றா, யாரோ சம்பாதிக்கிறா, யாரோ செலவு பண்றா அப்படினுட்டு அதை பத்தி ரொம்ப சர்ச்சை பண்ணிண்டு சிரமப் படக் கூடாது. அப்படின்னு சூரியன வெச்சு ஒண்ணு சொல்லுவார்.

8. அடுத்தது, மாடப் புறா. ஆண் புறாவும் பெண் புறாவும் சேர்ந்து இரை தேடப் போச்சு, அப்படின்னு ஒருகதை ஆரம்பிக்கிறது. இந்த இடத்துல ஸ்வாமிகள் சொல்வார், இந்த காலத்து மாதிரி. Husband and wife சேர்ந்து வேலைக்குப் போறாளோல்யோ, அப்படினு சொல்வார், அப்படி இரை தேடிண்டு வந்து குஞ்சுகளுக்குக் கொடுக்கறது. குஞ்சுகள் அதை சாப்பிட்டு, ரொம்ப சந்தோஷப் படறது. அப்படி இருக்கும்போது ஒரு வேடன், இந்த ரெண்டு புறாவும் இரை தேடப் போயிருந்தபோது, அந்த குஞ்சுகளை வலையிலப் பிடிச்சுடறான். பெண் புறா, இதை பாத்த உடனே வருத்தப் பட்டு துக்கம் தாங்காம தானும் போயி அந்த வலையில விழுந்துடறது, என் குழந்தைகள் இல்லாம நான் என்ன பண்ணுவேன் அப்படின்னு, ஆண் புறாவும் இதை பார்த்துட்டு என்னுடைய மனைவி, குழந்தைகள் இல்லாம நான் என்ன பண்ணுவேன், அப்படினுட்டு அதுவும் போயி வலையில விழுந்துடறது. இந்த கதையில இருந்து என்ன தெரிஞ்சுக்கணும்? ஸ்வாமிகள் ரொம்ப அழகா ஒரு, practical உபமானம் சொல்லிபுரிய வைக்கிறார். இல்லேன்னா இது வந்து தியாகம் தானே, ஜீவ காருண்யம், இதுல என்ன தப்புன்னு நமக்குத் தோணும். ஆனா ஸ்வாமிகள் சொல்றார், இப்ப, குழந்தைகள் foreign போயிடறா. அடுத்தது மாட்டுப் பொண்ணு உண்டாயிருக்கா, இல்லை பையனுக்கு சமைக்கத் தெரியல, அப்படின்னு சொல்லி பின்னாடியே அம்மாவும் போறா. அம்மா போன உடனே இவரும் சரின்னு, அவ பின்னாடி போயிடறார், அங்க போனா ஒரு தர்ப்பணம் உண்டா, திவசம் உண்டா. ஸ்வதர்மங்கள் ஒண்ணுமே கடைபிடிக்க முடியாம ஆத்மா வீணா போயிடறது. ஸ்வாமிகள், இந்த மாடப்புறா கதையில இருந்து இதைத் தெரிஞ்சுக்கணும், நம்ம ஸ்வதர்மத்தை விடாம நாம காப்பாத்தணும், அப்படின்னு சொல்லியிருக்கார். நான் கொஞ்ச நாள் foreign போயிருந்தேன். எங்க அப்பாவைக் கூப்பிட்டேன். எங்க அப்பா கட்டாயம்

வரமாட்டேன்னுட்டார். எங்கப்பா கிளம்பலைனா எங்கம்மா கிளம்ப மாட்டா. ரெண்டு பேரும் வராம இருந்ததுனாலயே நான் திரும்பி வந்தேன். அப்படி நம்முடைய ஸ்வதர்மம் ரொம்ப முக்கியம், அப்படிங்கிறது மஹான்கள் எல்லாம் follow பண்ணியிருக்கா.

9. அடுத்தது மலைப்பாம்பு. மலைப்பாம்பு அசையாம இருக்கும். அது நாலஞ்சு நாள் பட்டினி கிடக்கும், திடீர்னு ஒரு பெரிய மிருகம் வந்ததுனா அதை சாப்டுக்கும், அதை ஒரு மாசம் ஜீரணம் பண்ணும். அப்படி, சாப்பாடுக்கு, உலக சுகங்களுக்கு நீ பரபரக்கவே வேண்டாம், அது வரும்போது வரும். அப்படின்னு வைராக்கியத்தோட இருக்கணும், கிடைச்ச போது அனுபவிக்கணும், கிடைக்காதபோது அதை பத்தி நினைக்கக் கூடாது. அப்படின்னு மலைப்பாம்பு பார்த்துக் கத்துண்டேன். அப்படின்னு சொல்றார்.

10. அடுத்தது கடல். கடற்கரைக்குப் போனா நமக்கு என்ன கிடைக்கறது. கிளிஞ்சல் தான் கிடைக்கறது. கடலுக்கு உள்ள ரத்தினங்கள் இருக்கு. அந்த மாதிரி உலகத்துக்கு நம்ம மனசுக்குள்ள இருக்கிற ஞானவைராக்யத்த வெளிபடுத்தக் கூடாது. இவன் பெரிய ஸன்யாசியா அப்படின்னு கேலி பண்ணி நல்ல வழியிலிருந்து நம்மள கெடுத்துடுவா. அதனால, ரத்தினமான நம்ம மனசை அம்பாள் சரணத்துல ஒளிச்சு வைக்கணும். அதை ஜனங்களுக்கு காண்பிக்கக் கூடாது. கிளிஞ்சலை தானே கடல் காண்பிக்கறது. அதுமாதிரி நாம வெளியில எல்லாரைப் போலவும் இருந்துட்டுப் போயிடணும், அப்படின்னு சொல்வார். மூகபஞ்சசதி ஆர்யா சதகத்துல

कुसुमशरगर्वसम्पत्कोशगृहं भाति काञ्चिदेशगतम् ।
स्थापितमस्मिन्कथमपि गोपितमन्तर्मया मनोरत्नम् ॥

குஸுமசர கர்வ ஸம்பத் கோஷக்ருஹம் பாதி காஞ்சி தேசகதம் |

ஸ்தாபிதம் அஸ்மின் கதமபி கோபிதம் அந்தர் மயா மனோ ரத்னம் ||

என்னோட மனோரத்தினத்தை அம்பாளோட சரணம்கிற பெட்டியில பத்திரமா வெச்சுட்டேன், அப்படின்னு சொல்வார். இந்த மூகபஞ்சசதி படிக்கிறயோல்யோ அதனால மனோரத்தினம். இதை ஜாக்கிரதயா வெச்சுக்கணும். அப்படின்னு சொல்வார்.

11. அடுத்தது விட்டில் பூச்சி. விட்டில் பூச்சி நெருப்பை பழம்னு நினைச்சு போயி அதுல பட்டு செத்துப் போயிடும். அந்த மாதிரி கண்ணுக்குக் கவர்ச்சியான விஷயங்களை எல்லாம் பார்த்து, பத்தினி, புத்ராள், வஸ்திரங்கள், இந்த மாதிரி attractionல போயி உயிரை விட்டுறக் கூடாது.

12. அடுத்தது யானை. யானைக்கு தொடற உணர்ச்சி ரொம்ப ஜாஸ்தி போல இருக்கு. அதுல அதுக்கு ஆசை ஜாஸ்தியா இருக்கறதுனால, ஒரு பெண் யானையை இந்த பக்கம் நிறுத்தி, நடுவுல ஒரு குழி பண்ணி வெச்சுடுவா. அந்த பக்கம் காட்டுல இருக்கிற ஆண் யானை இந்த பெண் யானையை பார்த்த உடனே வந்து இந்த குழியில விழுந்துடும். ஆண் யானையை பிடிச்சுண்டு போயிடுவா. அந்த மாதிரி தொடற உணர்ச்சிக்கு வசப்பட்டு மாட்டிக்கக் கூடாது.

13. மான். மானுக்கு பாட்டு கேட்கறது பிடிக்கும் போல இருக்கு. வேடன் வந்து பாட்டு பாடுவான். அந்த பாட்டை மான் கேட்டுண்டு அப்படியே நிக்குமாம். வேடன் வந்து அம்பு போட்டு அடிச்சுடுவானாம். கிராமிய கீதத்துல ஆசை இருக்கக் கூடாது. ஸ்வாமிகள் சொல்வார். சினிமா பாட்டுல மனசு வெச்சா வீணா போயிடுவோம் அப்படின்னு சொல்வார்.

14. அடுத்தது தேனீ. தேனீ பூவிலேர்ந்து தேன் எடுக்கிறது, அதுவும் சாப்பிடறது இல்ல. யாராவது தேனை எடுக்க வந்தா அவாளை கொட்டறது. லோபிகள், கருமிகள் பணத்தை அவா சேர்த்து வெச்சுக்கறா. அவாளும் செலவு பண்றது இல்ல. மத்தவாளுக்கும் செலவு பண்றது இல்ல. இப்படி இருக்கக் கூடாது, அப்படின்னு தெரிஞ்சுண்டேன்,

15.அந்த மாதிரி தேனை இன்னொருத்தன் எடுத்துண்டு போறான். அந்த தேனை எடுக்கிறவன் ஒரு குரு, அப்படிங்கிறார். அந்த மாதிரி, நீ பணத்தை சேர்த்து வெச்சாலும் சரி, யாராவது ஒருத்தன் வந்து ஒரு நாளைக்கு revolver அ காண்பிச்சு எல்லாத்தையும் எடுத்துண்டு போயிடுவான். அப்படின்னு ஸ்வாமிகள் சொல்வார். இல்லேன்னா ஒரு நாளைக்கு, எமன் வந்துட்டான்னா, எவ்வளவு சேர்த்து வெச்சு என்ன பிரயோஜனம், அந்த மாதிரி பணத்தை சேர்த்து வைக்கக் கூடாது, அதை யாராவதுதான் தூக்கிண்டு போகப் போறா, அப்படின்னு சொல்லி, தான தர்மங்கள் பண்ணணும். பணத்தை சேர்த்து வெக்கறதுல ஆசை வெக்கக் கூடாதுன்னு, தெரிஞ்சுண்டேன். அப்படின்னு சொல்றார்.

16. அப்புறம் மீன். மீன் தூண்டில்ல ஒரு புழு இருக்கு. அதை திங்கறதுக்கு ஆசை பட்டுண்டு, உயிரை விட்டுறது. அந்த மாதிரி, நாக்கு சபலம் கூடாது, இந்த இடத்துல ஸ்வாமிகள் சொல்வார், உன்னை உப்பு குறைச்சலாப் போடுங்கறேன், நீ கூடப் போட்டுருக்கியேன்னு சண்டை போடுவான், தட்டை விட்டெறிவான், அப்படின்னு சொல்வார். நான் நினச்சுண்டேன், எனக்கு வந்து உப்பு கூட போடுங்கறேன், குறைச்சலாப் போடறியேன்னு தானே நாம சண்டை போடறோம். அப்படின்னு நினைச்சுண்டேன்,

17. அப்புறம் குரர பக்ஷின்னு ஒண்ணு. இந்த பக்ஷி வந்து, மாமிசத் துண்டை எடுத்துண்டு போகும்போது, அதைவிட பெரிய பக்ஷிகள், கழுகு, பருந்து

அதெலாம் வந்து அதை அடிக்கிறதாம், அது fight பண்ணிண்டே இருக்கு. சண்டைபோடறது. ஆனா ஒரு கட்டத்துல அந்த மாமிசத்தைப் போட்டுட்டு போயி மரக்கிளையில உட்கார்ந்துடறது. அது வரைக்கும் அடி வாங்கறது, அப்புறம் நிம்மதியா இருக்கு. இந்த இடத்துல ஸ்வாமிகள் சொல்றார். retire ஆன உடனே கொஞ்சம் பணம் வரும். உறவுக் காரா எல்லாம் அதுக்காக, பிடுங்கிண்டு இருப்பா. அதை ஏதாவதொரு ஸ்வாமி காரியமா வெச்சிருக்கேன், அப்படின்னு சொல்லிட்டானா நிம்மதியா இருக்கலாம், அப்படின்னு சொல்றார்.

18. அப்புறம் பிங்கலைன்னு ஒரு வேசி. அவளுக்கு பகவத் அனுக்ருஹத்னால வைராக்யம் வரது. அப்போ அவ சொல்றா. ஆசைதான் துக்கத்துக்குக் காரணம். வைராக்கியம் தான் சுகத்தை கொடுக்கும். அப்படின்னு சொல்றா. அதுனால நாம ஆசையா விட்டாதான் நிம்மதி அப்படின்னு அவளை பார்த்து கத்துண்டேன். அப்படின்னு சொல்றார்.

19. ஒரு குழந்தை, ஒரு குரு. அதாவது ரொம்ப சின்னக் குழந்தை, அப்படின்னு ஸ்வாமிகள் சொல்றார். அது வந்து, இவா நம்மளைக் கொஞ்சினா, அப்படின்னு அவா மேலொரு விருப்பம், இவா நம்ம தொட்டிலை தட்டி விட்டுட்டா. அதனால நாம அடி பட்டுண்டுட்டோம் அப்படின்னு அவா மேலே ஒரு வெறுப்போ அப்படியெல்லாம் இருக்காதோல்யோ! அந்த மாதிரி இந்த உலகத்துல வந்து குழந்தை போல உல்லாசமா இருக்கணும். விருப்பு வெறுப்பு வெச்சுண்டு கஷ்டப் படக் கூடாதுன்னு கத்துண்டேன், அப்படின்னு சொல்றார். நான் நினைச்சுப்பேன். அந்த மாதிரி இருந்தவா - மஹாபெரியவா, சிவன் ஸார், கோவிந்த தாமோதர ஸ்வாமிகள். மஹாபெரியவாளுடைய அந்த வாழ்க்கை, ஸ்வாமிகளோட அந்த வாழ்க்கை, அந்த வாழ்க்கையோட 75 வருஷத்தோட அனுபவங்களும், அது எங்க, எவ்வளவு டீல் பண்ணியிருக்கா அவா எல்லாம். ஆனா அவளோட அந்த பேச்சும் சிரிப்பும் பார்த்தா, என்னமா குழந்தையா இருக்கா அவா. என்ன ஒரு பாக்கியம், அப்படின்னு வியப்பாக இருக்கும். பகவத் பஜனம்கிறது இதை கொடுக்கும்னா, நாமும் பஜனம் பண்ணலாமேன்னு நமக்கு அதுல ஆசை வர்றது. அப்படி பேரானந்தத்துல திளைச்சு அது ததும்பி வழிஞ்சுண்டுருக்கும். குழந்தை மாதிரி சந்தோஷமா இருந்தா. ஒரு விஷயத்துல கவலை இல்லாம இருந்தா. அதை நினைச்சு நினைச்சு பாக்கறேன் நான்.

20. அடுத்தது ஒரு பெண் குழந்தை. அவளோட கார்யத்துல இருந்து ஒண்ணு கத்துண்டேன் அப்படிங்கிறார். அந்த பொண்ண வந்து கல்யாணம் பேசியிருக்கா. வர பக்ஷத்துலேருந்து (மாப்பிள்ளை வீட்டார்) சில பேர் வந்திருக்காளாம் ஆத்துக்கு. இவ கையில நிறைய வளையல் போட்டுண்டு இருக்கா. நெல்லு குத்தறா. இவ நினைச்சுக்கறாளாம். தினம் தினம் நெல்லு குத்திதான் அரிசி பண்ணி இவா சாப்பிடறா. அன்னாடம் காச்சின்னு

நினச்சுப்பா, அப்படின்னு சொல்லி, அந்த பொண்ணு வந்து ரெண்டு கையில இருந்தும் ரெண்டு ரெண்டு வளையல மட்டும் வெச்சுண்டு மத்த எல்லா வளையலையும் கழட்டி வெச்சுடறா. அப்புறம் நிறைய வளையல் இருந்தா எட்டாத்துக்கு கேட்கும். ரெண்டு வளையல் இருந்தாகூட இங்க வந்தவாளுக்குக் கேட்கும், அப்படின்னுட்டு, ஒரு வளையல வந்து, முழங்கைலயும் இன்னொரு வளையல மணிக்கட்டுலயும் இடிச்சுக்காத மாதிரி நகர்த்தி வெச்சுண்டாளாம். இந்த இடத்துல ஸ்வாமிகள் சொல்றார். இந்த காலத்துல மன்றம் வெச்சு பஜனம் பண்றோம்னு நினைச்சுக்கறா. ஆனா ஓயாத சண்டைதான் போடறா. நிறைய பேர் வேண்டாம். atleast ஸ்ருதி போடறதுக்கு ஒருத்தர் வேண்டாமா. தனியா பாடறதுக்கு ரொம்ப ஸ்ரமம். அப்படின்னு சொல்லிண்டு இன்னும் ஒருத்தர சேர்த்துக்கறா. இவர் என்ன பண்ணுவார், இன்னிக்கு ஏகாதசி. நீ ஏழு மணிக்கு வா. நாம பாண்டுரங்கன் கோவில்ல பஜனம் பண்ணுவோம், அப்படின்னு சொல்லியிருப்பார். அவன் ஒன்பதரைக்கு வருவான், இன்னொருத்தன். அப்போ, என்னடா late. சரி வா ஒரு அரை மணியாவது பஜனை பண்ணுவோம் அப்படின்னு சொல்லுவார். அதை ஏன் கேட்கற, அப்படின்னு அவன் officer ஐ பத்தி திட்ட ஆரம்பிப்பான். பதினொரு மணி ஆயிடும். அந்த மாதிரி நிறைய பேர் இருந்தா கலகம். ரெண்டு பேர் இருந்தா கூட வீண் பேச்சா போயிடும். பகவத் பஜனம் ஏகாந்தத்துல பண்ணனும், அப்படின்னு ஸ்வாமிகள் சொல்வார். அவர் அந்த மாதிரி பண்ணியிருக்கார். நிறைய பண்ணியிருக்கார். நான் அதை பார்த்து ரசிச்சிருக்கேன். கார்த்தால ஆறு மணிக்கு ஆரம்பிச்சா மத்யானம் ஒரு மணி வரைக்கும் புஸ்தகத்தை வெச்சு படிச்சுண்டு இருப்பார். அவருக்கும் அந்த வால்மீகிக்கும்தான் அந்த சங்கம். அதுதான் சத்சங்கம். கண் ஜலம் வரும், எப்படி சந்தோஷப் படறார் அப்படின்னு பார்த்திருக்கேன்.

21. அடுத்தது பாம்பு ஒரு குரு. பாம்பு தனக்கா வீடு கட்டறது இல்ல. அது கரையான் புத்துல போயி இருந்துக்குமாம். அந்த மாதிரி சொந்த வீடு கட்டணும், அப்படின்னு இந்த வீடு கட்டறது ஒரு ஸ்ரமம். அப்படின்னு பாகவதத்துல சொல்லியிருக்கு அப்படிங்கிறார், ஸ்வாமிகள். ஏனா ஜனங்கள் அதை ரசிப்பாளோ அப்படின்னு. இந்த காலத்துல வந்து இந்த ரெண்டாவது வீடு அதுக்கு EMI அப்படின்னு சொல்லியே எல்லோரும் மாட்டிக்கிறா. ஒருத்தர் கட்டின வீட்டுல போயி வசிச்சுட்டா, ஒரு ரெண்டு மூணு வருஷம் project ஆ வீடு கட்டறது வீடு கட்டறதுன்னு அதை பத்தி கவலைகள், அதை பத்தி அந்த கடன் தொல்லைகள் அப்படிங்கிற ஒரு கவலை இல்லாம இருக்கும்.

22. அடுத்தது ஒரு பாணத்தை ஒருத்தன் கூர் பண்றானாம். அவன் ஒரு குரு. அங்க ராஜா பவனி போறார். ரொம்ப வைபவமா அந்த ராஜா பவனி போறார். இவன் இந்த பாணத்தைக் கூர் பண்ணிண்டு இருக்கான், அதை முடிச்ச பின்ன, என்னடா ராஜா போறார் பாக்கலையா அப்படின்னா, அவன் பாக்கவே

இல்லையே அப்படிங்கிறானாம். அவ்வளவு ஏகாகிரச் சித்தத்தோட அவன் வேலை பண்ணிண்டு இருக்கான். அந்த மாதிரி நாம பகவான்கிட்ட மனச வைக்கணும். இந்த இடத்துல ரொம்ப useful ஆ ஸ்வாமிகள் ஒண்ணு சொல்றார். நம்பாத்துல டிவி போடாதேன்னு சொன்னா கேட்பா. பக்கத்தாத்துல டிவி சத்தம் கேட்கறதே. அதுனால நாம மனசு வெச்சு இந்த ராமாயண, பாகவதத்த படிக்கறதுக்கு கத்துண்டோமோ பொழச்சோம். இல்லேன்னா இந்த காலத்துல படிக்கவே முடியாது. அப்படிங்கிறார். அப்படி பகவத் பஜனம் பண்ணும் போது லயிச்சு போகணும், அப்படின்னு இந்த பாணத்தைக் கூர் பண்றவன்கிட்டயிருந்து கத்துண்டேன், அப்படின்னு சொல்றார்.

23. அடுத்தது சிலந்தி. சிலந்தி தன்னோட உடம்புல இருந்தே திரவத்தை உற்பத்தி பண்ணி, அதை வெச்சு ஒரு வலை பின்னி, அந்த வலையில கொஞ்ச நாள் விளையாடிட்டு, அப்புறம் அதை தனக்குள்ளயே இழுத்துக்கறது. அதே மாதிரி பகவானும், தனக்குள்ள இருந்தே சாமக்ரியைகள் வெச்சுண்டு, சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் பண்றார். விளையாடறார். அலகிலா விளையாட்டுடையான் அப்படின்னு அந்த பகவானோட பெருமையை நினைச்சுப் பாக்கணும், அப்படின்னு சொல்றார்.

24. கடைசில 24 வது குரு குளவி. இந்த குளவி ஒரு புழுவக் கொட்டிட்டுப் போன உடனே அந்த புழு, குளவி வந்து கொட்டுமோ கொட்டுமொன்னு நினைச்சு அதுவும் குளவி ஆயிடும். அது மாதிரி யத் பாவம் தத் பவதி, எதை நாம நினைச்சுண்டு இருக்கோமோ அதே மாதிரி ஆயிடுவோம். அந்த மாதிரி பகவத் பஜனம் பண்ணோம்னா நமக்கு பகவானோட சாயுஜ்யம் கிடைக்கும். அப்படின்னு ஸ்வாமிகள் சொல்றார்.

இதுக்கெல்லாம் மேலே நம்முடைய உடம்பே ஒரு குரு. அப்படின்னு சொல்லி முடிக்கிறார். இந்த உடம்பு வந்து வயசான பின்ன, ஒவ்வொரு part படுத்தறது, கை நாம சொன்னா கேட்க மாட்டேன்கிறது. கால் நாம சொன்னா கேட்க மாட்டேன்கிறது. இதுக்காக நாம வந்து கைய வெறுக்கறோமோ, காலை வெறுக்கறோமோ. உன்ன பொறந்த நாளில இருந்து எண்ணைய் தேய்ச்சு விட்டேன், சோப்பு போட்டு குளிப்பாட்டினேன். நான் சொன்னா கேட்க மாட்டேங்கிறயேன்னு உடம்பை நாம வந்து தண்டிக்கறோமோ. அப்படி பண்றது இல்ல. அப்படி இருக்கிறச்ச, இந்த உடம்பே நீ சொல்றதை கேட்க மாட்டேன்கிற போது, பிள்ளையும் பேரனும் சொன்னா கேட்க மாட்டேங்கிறான்னு ஏன் நீ தவிக்கிற, அப்படின்னு சொல்றார் ஸ்வாமிகள். அப்படின்னு, உடம்புகிட்ட இருந்தே ஒரு பாடம் கத்துக்கறேன்.

அப்படி அந்த தத்தாத்ரேய மஹாயோகி யது மஹா ராஜாகிட்ட சொன்னதை கிருஷ்ண பகவான் உத்தவருக்கு சொன்னார். இன்னிக்கு நாம கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் மூலமா அதை தெரிஞ்சுண்டோம்.

ஜானகி காந்த ஸ்மரணம் ஜய ஜய ராம ராம.

உ

ஸ்ருங்கேரி சாரதாம்பா காஞ்சி காமாக்ஷி

அம்பாள் கிருபையினால, ஒரு நாலு நாள் ஸ்ருங்கேரி க்ஷேத்திரத்துல போய் தங்கி இருந்து, சாரதாம்பாளை தரிசனம் பண்ணி, சந்திரமௌலீஸ்வர பூஜை எல்லாம் பார்த்து ரொம்ப ஆனந்தமா கழிச்சோம். திருவண்ணாமலைன்னு சொன்னாலே நம்ம சேஷாத்ரி ஸ்வாமிகள், ரமண பகவான் ஞாபகம் வர மாதிரி, இந்த ஸ்ருங்கேரி க்ஷேத்ரத்தை நினைச்சாலே, ராமாயண காலத்துல ரிஷ்யஸ்ருங்கர், அவர் காட்டுல தபஸ் பண்ணிண்டு இருக்கார். பஞ்சத்தை போக்க அவரை ரோமபாத மன்னர், பெண்களை கொண்டு தன் நாட்டுக்கு வரவழைத்தார். முனிவர் கால் பட்ட உடன் அங்கே மழை பெய்தது. அப்புறம் தசரத மஹாராஜா, ரிஷ்யஸ்ருங்கரை கூட்டிண்டு போயி, அஸ்வமேதயாகம், புத்ரகாமேஷ்டி பண்ணி, ராமர் அவதாரம் பண்ணார். அப்புறம் ரிஷ்யசிருங்கர் திரும்பவும் இந்த காட்டுக்கே வந்து, இங்க 'கிக்க' ங்கிற இடத்துல தபஸ் பண்ணி, அவர் பரமேஸ்வரனோட ஐக்யம் ஆயிட்டார் அப்படின்னு ஐதீகம். அங்க ஒரு சிவலிங்கம். அந்த சிவலிங்கத்துக்கு ஒரு கொம்பு இருக்கு. அதை ரிஷ்யஸ்ருங்கரோட அதிஷ்டானம் மாதிரி, அங்க பூஜை பண்றா.

ரிஷ்யஸ்ருங்கரோட அப்பா விபண்டக முனிவர், அவருக்கு ஸ்ருங்கேரியிலையே, மலஹானிகரேஸ்வரர் கோயில்ன்னு ஒண்ணு இருக்கு. ஒரு நூற்றி ஐம்பது படி மேலே ஏறி போனா, பவானி சமேத மலஹானிகரேஸ்வர் அப்படின்னு சன்னிதி. விபாண்டகர் பூஜை பண்ணி, அங்க ஸ்வாமியோட ஐக்யம் ஆனார், அப்படின்னு சொல்றா.

இந்த விபண்டகர், ரிஷ்யஸ்ருங்கர்ல இருந்து ஆரம்பிச்சு, ஆதி சங்கரர் அங்கே வந்து சாரதாம்பாளை பிரதிஷ்டை பண்ணினது, அப்புறம் சுரேச்வராச்சார்யாள் முதற்கொண்டு, ஸ்ருங்கேரில சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள், அந்த மஹான்களை எல்லாம் நினைக்கணும். சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளை நினைச்சா, உடனே நம்ம சந்திரசேகர ஸரஸ்வதி ஸ்வாமிகள், மஹாபெரியவா இப்படி எல்லா ஞானிகளையும் த்யானம் பண்றதுக்கு ஒரு நல்ல வாய்ப்பா இருந்தது.

மஹாபெரியவா தெய்வத்தின் குரல்ல, ஐந்தாவது பகுதியில, ஆதி சங்கருடைய சரித்திரத்தை அவருக்கே உண்டான அழகான ஒரு ஷைலில விஸ்தாரமா

சொல்லியிருக்கா. அதனால ஸ்ருங்கேரின்ன உடனே அந்த பகுதிகளை எல்லாம் எடுத்து படிச்சேன். என்ன ஆனந்தம்!

ஆதி சங்கரர், காசி க்ஷேத்ரத்துல, தன்னுடைய பதினாறாவது வயசுல, பிரஸ்தான த்ரய பாஷ்யங்கள் எழுதி முடிக்கிறார். அப்போ வியாசர் ஒரு கிழவர் மாதிரி வந்து, அவர்கிட்ட பலவிதமான வாதங்களை பண்றார். எப்படி மாத்தி மாத்தி வாதம் பண்ணினாலும் ஆதி சங்கரர், அதுக்கு அழகா பதில் சொன்ன உடனே, வியாசர் அவருக்கு தரிசனம் கொடுத்து, இன்னொரு பதினாறு வருஷம், இந்த பாரத பூமி முழுக்க நீங்களே பிரயாணம் பண்ணி எல்லாருக்கும் தரிசனம் கொடுத்து, உங்க தரிசனத்துனாலயும், அங்கங்க இருக்கற பண்டிதர்களுக்கு, உங்களுடைய வாதத்துனாலயும், எல்லாருக்கும் தெளிவை கொடுக்கணும், அப்படின்னு அனுக்ரஹம் பண்றார்.

அங்கே இருந்து ஆதி சங்கரர், கிளம்பி முதல்ல பிரயாகை வந்து குமாரில பட்டரை பாக்கறார், அப்படின்னு சரித்ரம். இந்த குமாரில பட்டர் சுப்ரமணிய ஸ்வாமியோட அவதாரம். அதுக்கு முன்னாடி பௌத்த மதம் தீவிரமா இந்தியாவில் இருந்தது. பௌத்த மதத்துல என்னன்னா, ஒரு விளக்கை ஊதி அணைக்கற மாதிரி, மனசை அழிச்சுடணும். ஆசையே துன்பத்திற்கு காரணம். மனசே எல்லா ஆசைக்கும் காரணம். மனசே இல்லாம பண்ணிக்கறது. அப்படின்னு அதோட நிறுத்திடரா. அதுக்கு மேலே, அந்த மனோலயம் ஆன பின்ன, ஆத்மா, ஸ்வச்சமா விளங்கும். அந்த ஆத்ம அனுபவம், மனசுக்கும் எட்டாத அந்த ஆத்ம அனுபவம், பேரானந்தம், அப்படிங்கிற அந்த ஞான மார்கத்தை அவா சொல்றதில்லை. அவா வேதத்தையே ஒத்துகாதவா. அதனால, அந்த பௌத்தர்கள் வேதத்துல சொன்ன கர்மாக்களை எல்லாமும் விட்டுட்டா. அதனால குமார ஸ்வாமியே குமாரிலபட்டரா அவதாரம் பண்ணி பூர்வ மீமாம்சைக்கு ரொம்ப உழைச்சு, வைதீக கர்மாக்களை எல்லோரும் பண்ண வெச்சார்.

அதுல ஒரு கதை என்னன்னா, குமாரில பட்டர் பௌத்தர்களை கண்டனம் பண்றதுக்கு, பௌத்தர்களோடையே போயி சேர்ந்துண்டு, அவாகிட்டயே ஏழு வருஷம், எல்லாத்தையும் படிச்சுக்கறார். ஆனா அவா இவர் வைதீகர் அப்படின்னு கண்டு பிடிச்சுடரா. அதனால வஞ்சனையா அவரை ஏழாவது

மாடிக்கு கூட்டிண்டு போயி, அஹிம்சாவாதிகள்னு பேரு. ஆனா அவரை அங்கிருந்து கீழ தள்ளி விட்டுடறா. அவர் விழும் போது 'வேதம் ஸத்யம் என்பது உண்மையானால், எனக்கு ஒரு ஹானி வரக் கூடாது. ஆபத்து வரக் கூடாது', அப்படின்னு, சொல்லிண்டே விழறார். அவர் விழும் போது, அவர் உடம்புக்கு ஒண்ணுமே ஆகலயாம். ஒரு எலும்பு உடையல. ஆனா கண்ல ஒரு கல் குத்தித்தாம். அவர் 'என்ன இது?' அப்படின்னு கேட்டாராம். அப்போ அசரீரி கேட்டதாம். 'நீங்கள் வேதமே ஸத்யம். அது என்னை காப்பாத்தட்டும்', அப்படின்னு சொல்லாம, ஸத்யம் என்பது உண்மையானால், அப்படி 'யதி'னு சொன்னதுனால, இந்த ஒரு சின்ன ஹானி, அப்படின்னு, சொல்லித்தாம்.

அந்த மாதிரி, அப்படி அவர் வேதத்தையும், தர்ம சாஸ்திரங்களையும் நம்பறவர். கர்ம மார்கத்துல இருக்கறவர். ஆனால், அவர், குருத் த்ரோஹம் பண்ணிட்டோம்னு, ஒரு எழுத்து சொல்லி கொடுத்தால் கூட குரு. அந்த பௌத்தர்களிடத்துல எல்லாத்தையும் கத்துண்டு, இன்னிக்கு இந்தியாவுல பௌத்த மதமே இல்லை. எங்கயோ சீனா, ஜப்பான்ல தான் இருக்கு. அந்த மாதிரி, பண்ணினவர் குமாரில பட்டர்.

அப்படி நாம குரு த்ரோஹம் பண்ணிட்டோம். இதுக்கு என்ன பிராயச்சித்தம், அப்படின்னு புஸ்தகத்துல தேடினாராம். தன் உடம்பை நெருப்புல கொஞ்சம் கொஞ்சமா வருத்தி உயிரை விடறதுதான் பிராயச்சித்தம், அப்படின்னு எழுதி இருந்ததாம். மஹாபெரியவா வேடிக்கையா சொல்றா 'இந்த மாதிரி ஒரு புஸ்தகத்துல போட்டு இருந்ததுன்னா நாம அந்த புஸ்தகத்தை நெருப்புல போட்டுடுவோம். குமாரில பட்டருக்கு தர்ம சாஸ்த்ரத்துல இருக்கற நம்பிக்கையினால இந்த பிராயச்சித்தத்தை பண்ணிண்டு இருந்தார். உமியை வெச்சு அதுல நெருப்பு மூட்டி அதுக்குள்ள அவர் உட்கார்ந்து இருந்தார்.'

இதை ஆதி சங்கரர் கேள்வி பட்ட உடனே அவருக்கு தரிசனம் கொடுக்க ஓடோடி வந்தார். அவருக்கு ஞானோபதேசமும் பண்ணார். கர்மாங்கிறது சித்த சுத்திக்கு. அதுக்கு மேலே பக்தி பண்ணி ஸகுணோபாசனை, நிர்குணோபாசனை பண்ணி, கார்யங்கள் எல்லாம் விட்ட நிலைமை ஒண்ணு இருக்கு. அது ஜீவன் முக்த தசை, அப்படின்னு அதை பத்தி சொன்ன உடனே அவருக்கு ஞானம் வந்துடறது. ஆதி சங்கரரை தரிசனம் பண்ணின உடனே அவருக்கு, அந்த

அக்னியோட தாபம் போயிடுத்தாம். ஞானோபதேசத்தையும் கேட்ட உடனே அவர் ஞானி ஆயிடறார். உடம்பு எரிஞ்சு போயிடறது. ஒண்ணும் கவலை இல்லை. அந்த மாதிரி மஹான்களோட தியாகம் இருக்கு நம்முடைய மதத்துக்கு. யாரும் இந்த வேத மதத்தை அசைக்க முடியாது, அப்படின்னு மஹா பெரியவா சொல்றா. அந்த இடத்துல

மாசில் வீணையும் மாலை மதியமும்

வீசு தென்றலும் வீங்குழல் வேனிலும்

மூசு வண்டறி பொய்கையும் போன்றதே

ஈசன் எந்தன் இணையடி நிழலே

அப்படின்னு அப்பர் பெருமானை எப்படி சுண்ணாம்புக் காளவாயில போட்டபோது அவருக்கு ஒண்ணும் பாதிக்கலையோ, அந்த மாதிரி குமாரில பட்டருக்கு, ஆதி சங்கரரை பார்த்த உடனே அந்த தரிசனத்துனால அவருக்கு அந்த நெருப்பு சுடலை. அம்பாள் அனுக்ரஹத்துனால ஹனுமாருக்கு எப்படி அவருடைய வாலில் இருந்த நெருப்பு எப்படி சுடாம இருந்ததோ அந்த மாதிரி இவருக்கு இந்த நெருப்பு சுடாம இருந்தது. ஒண்ணும் கஷ்டத்தை கொடுக்கலை. அவர் ஞானம் அடைஞ்சுட்டார்.

போறதுக்கு முன்னாடி, "நீங்க, மாஹிஷ்மதில மண்டன மிஸ்ரர் அப்படின்னு ஒருத்தர் இருக்கார். அவருக்கு நூத்துக்கணக்கான சிஷ்யர்கள் இருக்கா. நிறைய யாகங்கள் எல்லாம் பண்ணிண்டு கர்ம மார்கத்துல ரொம்ப தீவிரமா இருக்கார்.அவரை நீங்க உங்க ஞான மார்க்கத்தை ஒத்துக்க வெச்சேள்னா, அத்வைதத்தை அவர் ஒப்புத்துண்டார்னா, இந்த பாரத தேசத்துல எல்லாருமே அதுனால மாறுவா" அப்படின்னு, சொல்றார். ஆஹான்னு சொல்லி இந்த மாஹிஷ்மதிக்கு ஆதி சங்கரர் வரார். வந்த போது, மண்டன மிஸ்ரர் க்ருஹம் எதுன்னு கேட்கறார். 'எந்த வீட்டு வாசல்ல பெண் கிளிகள் கூட சாஸ்த்ர விசாரம், ஸ்வத:ப்ரமாணம், பரத:ப்ரமாணம் பற்றி சர்ச்சை எல்லாம் பண்ணிண்டு இருக்கோ, அந்த வீடு தான்' அப்படின்னு சொல்றாளாம். அப்போ அதை வெச்சுண்டு தேடி போறார்.

அன்னிக்கு மண்டன மிஸ்ரர் ஸ்ரார்த்தம் பண்ணிண்டு இருக்கார். அவருக்கு ஜைமினியும் வ்யாசருமே ஸ்ராத்த பிராமணர்களா வந்திருக்கா. அந்த மண்டன மிஸ்ரர் தீவிர மீமாம்சகரா இருக்கர்துனால இந்த கர்மாவை விட்ட ஸன்யாசிகளை பாக்கறதே இல்லைன்னு சபதம் வெச்சுண்டு இருந்தார்.

அதுனால ஆதி சங்கரர் என்னடா பண்றதுன்னு யோசிச்சாராம். அந்த காலத்துல தென்னை மரத்துல ஏறி தேங்காய் பறிக்கரவா ஒரு மந்திரம் சொல்வாளாம். தென்னை மரம் வளைஞ்சு கொடுக்குமாம். அங்க ஒரு சாணான் கிட்ட அதை கத்துண்டு ஒரு தென்னை மரத்துல ஏறிண்டு அவா ஆத்துக்குள்ள போயி குதிச்சாராம், ஆதி சங்கரர்.

அவர் மண்டன மிஸ்ரர், ஸ்ரார்த்தம் பண்ணிண்டு இருக்கார். அவருக்கு ஸன்யாசியை பார்த்த உடனே கோபம் வரது. எங்கே இருந்து முண்டி? அப்படின்னு கேட்டாராம். முண்டினா மொட்டை அடிச்சுண்டவர்னு அர்த்தம். ஆதி சங்கரர் விளையாட்டா, கழுத்துக்கு மேலே முண்டி அப்படின்னு சொன்னாராம் ஆதி சங்கரர். ஸன்யாசிகள் கழுத்துக்கு கீழ வபனம் பண்ணிக்க மாட்டா. அப்படி வேடிக்கையா பதில் சொன்னாராம். அப்படி அவர் கேட்டதுக்கு எல்லாமே இப்படி, அவர் தர்க்க சாஸ்த்ரத்துல நிபுணரா இருந்ததால் அதுக்கு மேலே அழகா பதில்கள் சொன்னாராம். எங்க வந்தேள்? நான் ஸ்ரார்த்தம் பண்ணணும் என்ற போது ஜைமினி முனிவரும் வியாச முனிவரும், விஷ்ணு இலையில ஸன்யாசியை உட்கார வைக்கலாம் அப்படின்னு சொல்றா. உடனே மண்டன மிச்ரரும் நீங்க பிக்ஷைக்கு வாங்கோ அப்படின்னு கூப்பிடறார். அப்போ ஆதி சங்கரர் நான் அன்ன பிக்ஷைக்கு வரலை வாத பிக்ஷைக்கு வந்திருக்கேன். அப்படின்னு சொல்றார். இப்போதைக்கு சாப்பிடுங்கோ அப்புறம் வாதம் பண்ணலாம் அப்படின்னு, ஸ்ரார்த்தத்தை நல்ல படியா முடிச்ச பின்ன, ஆதி சங்கரரும், மண்டன மிச்ரரும் உட்கார்ந்து வாதம் பண்றா. இதுக்கு மத்யஸ்தம், யாரை வைக்கலாம்னா, மண்டன மிஸ்ரரோட மனைவி சரசவாணி.

இந்த மண்டன மிச்ரரும் சரசவாணியும், பிரம்மாவும், ஸரஸ்வதி தேவியும்தான். அந்த கிளிகளே புத்திமதிகளா, இருக்கிறபோது ஸரஸவாணி சாக்ஷாத் ஸரஸ்வதி தேவி. உபய பாரதி அப்படின்னு பட்டம் எல்லாம் வாங்கி இருக்கா. அவளை மத்யஸ்தமா வெச்சு, வாதம் பண்றா. அவ தன்னுடைய கணவரையும் தோத்துட்டார்னு சொல்ல முடியாது. இந்த ஸன்யாசியையும் தோத்துட்டார்னு சொல்ல முடியாதுன்னு சொல்லி, ரெண்டு மாலையை கொடுத்து, அவா கழுத்துல போட்டுக்க சொல்லி, யார் கழுத்துல இருக்கிற மாலை முதலில் வாடறதோ அவா அபஜயம். யார் மாலை வாடாம இருக்கோ அவா ஜெயிச்சா. அப்படின்னு சொல்லி தன்னுடைய சித்தத்தை அந்த மாலையில வெச்சிருக்கா. இல்லேன்னா நாட் கணக்குல அந்த மாலை வாடாம இருக்குமா?

உ

அந்த மாதிரி ரெண்டு பேரும் இருபத்தொரு நாள் வாதம் பண்றா. ஆதி சங்கரர் சொல்றத கேட்க கேட்க, மண்டன மிஸ்ரருக்கு அது தான் ஸத்யம், தான் நினைச்சது தப்புன்னு கொஞ்சம் கொஞ்சமா புரியறது. மனசுக்கு புரிஞ்ச உடனே அவர் கழுத்துல இருக்கிற மாலை வாடிடறது.

அப்போ ஸரஸவாணியும் சில கேள்விகள் கேட்டா. அதுக்கு பதில் சொன்னார்னு ஒரு கதை இருக்கு. ஸரஸ்வதி தேவியையே ஆதி சங்கரர் ஜெயிச்சார். ஸர்வக்ஞர்ங்கிறதுக்கு. அப்படி ஒரு கதை. அதுக்கபுறம் “ரெண்டு பேரும் பிக்ஷைக்கு வாங்கோ” அப்படின்னு கூப்பிட்டாளாம் ஸரஸ்வதி தேவி. அதாவது ரெண்டு பேரும் ஸன்யாசிகள் இப்போ. முதல்ல ஒரு பந்தயம் வெச்சுக்கறா. மண்டன மிஸ்ரர் தோத்து போனா, அவர் ஸன்யாசி ஆயிடணும், ஆதி சங்கரர் தோத்து போனா கிருஹஸ்தர் ஆகி,கர்மா எல்லாம் பண்ணணும் அப்படி ஒரு பந்தயம் வெச்சுக்கறா. இப்ப ரெண்டு பேரையும் பிக்ஷைக்கு வாங்கோன்னு கூப்பிடறா, அதாவது ரெண்டு பேரும் இப்ப ஸன்யாசிகள் அப்படின்னு அர்த்தம். தன் பர்த்தா ஸன்யாசம் வாங்கிக்கறதை பத்னி ஒத்துண்டா னா எவ்வளவு பெரிய த்யாகம்! சங்கரரை போல மதத்துக்காக இவாளும் அப்படி த்யாகம் பண்ணி இருக்கா!

அப்பறம் சாப்பிட்ட பின்ன சரசவாணி, நான் பிரம்ம லோகத்துக்குப் போறேன்னு சொன்ன உடனே ஆதி சங்கரர், வன துர்கா மந்திரத்துனால கட்டி நீங்க இங்கயே இருக்கணும், இந்த பூமியில பிரதிஷ்டையா இருந்து எல்லாருக்கும், நல்ல புத்தியையும் ஆத்ம வித்தையும் உபதேசம் பண்ணணும், அப்படின்னு கேட்கறார். அப்போ சரீன்னு சொல்லி, ‘நீ பால ஸன்யாசி, நீ முன்னாடி போ, நான் பின்னாடி வந்துண்டே இருக்கேன். எங்க நீ திரும்பி பார்க்கறயோ அங்கேயே நான் பிரதிஷ்டை ஆயிடறேன்’, அப்படின்னு அம்பாள் சொல்றா. சரீன்னு எல்லாரும் போயிண்டு இருக்கா. இப்படி போயிண்டே இருக்கும்போது ஆதி சங்கரர் இந்த ஸ்ருங்ககிரிக்கு வரார். அங்க துங்கா தீரத்துல கர்ப்பமா இருக்கிற தவளைக்கு ஒரு பாம்பு வெயில் படாம குடை பிடிச்சுண்டு இருக்கு. ஆதி சங்கரர் இதைப் பார்த்த உடனே ‘இயல்பாகவே எதிரிகளா இருக்கறவா கூட இந்த க்ஷேத்ரத்துல ஒருத்தருக்கு ஒருத்தர் நட்பாக இருக்காளே! இது ரொம்ப அபூர்வமான ஒரு க்ஷேத்ரம். இங்க அம்பாள் இருந்தா நன்னா இருக்கும்னு நினைக்கிறார். அதே நேரத்துல அம்பாளோட சலங்கை ஒலி கேட்கலை. அம்பாள் மணல் மேலே நடந்து வந்துண்டு இருக்கார். அப்ப சலங்கை ஒலி நின்னு போச்சு. என்னனு இவர்

திரும்பி பார்க்கிறார். அங்கேயே அம்பாள் சிலை ஆகிவிடுகிறாள். அங்கேயே சாராதா தேவியை பிரதிஷ்டை பண்ணி ஒரு கோவில் கட்டி இருக்கார்.

அந்த கோவிலில் வெள்ளி ரதத்தில் புறப்பாடு. தங்க பாவாடை சாத்தி கையில் வீணையோடு ஒரு தர்சனம் இப்படி நாலு நாள் ஆனந்தமாக தர்சனம் பண்ணிண்டு இருந்தோம். அந்த சாரதாதேவி மேலே கமலஜதயிதாஷ்டகம் னு ஒரு ஸ்லோகம் சச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதி ஸ்வாமிகள்னு சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளோட குரு, ஒரு அஷ்டகம் பண்ணி இருக்கார். அவர் நிறைய கிரந்தங்கள் பண்ணி இருக்கார். அவர் தான் ஆதி சங்கரருடைய எல்லா புஸ்தகங்களையும் அச்சுக்கு கொண்டு வந்தார். பெரிய மஹான். அந்தமஹான் மஹான் பண்ணின கமலஜதயிதாஷ்டகதுலேர்ந்து ஒரு ஸ்லோகத்தை கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் எல்லாருக்கும் சொல்வார்.

कर्मस्वात्मोचितेषु स्थिरतरधिषणां देहदार्ढ्यं तदर्थं

दीर्घंचायुर्यशश्च त्रिभुवनविदितं पापमार्गाद्विरक्तिम् ।

सत्सङ्गं सत्कथायाः श्रवणमपि सदा देवि दत्वा कृपाब्धे

विद्यां शुद्धां च बुद्धिं कमलजदयिते सत्वरं देहि मह्यम् ॥

கர்மஸு ஆத்மோசிதேஷு ஸ்திரதர திஷணாம் தேஹதார்ட்யம் ததர்த்தம்

தீர்க்கம்சாயு: யஷஸ்ச த்ரிபுவன விதிதம் பாபமார்காத் விரக்திம் |

ஸத்சங்கம் ஸத்கதாயா: ஸ்ரவணமபி ஸதா தேவி தத்வா க்ருபாப்தே

வித்யாம் சுத்தாம் ச புத்திம் கமலஜதயிதே ஸத்வரம் தேஹி மஹ்யம் ||

னு ஒரு அழகான ஸ்லோகம்.

கர்மஸு ஆத்மோசிதேஷு – அவரவர்களுக்கு வர்ணாஷ்ரமத்தின் படி உசிதமான கர்மத்தில்

ஸ்திரதர திஷணாம் – உறுதியான புத்தியும்

தேஹதார்ட்யம் ததர்த்தம் – அதற்கு தேவையான உடம்பில் வலுவும், சாப்பிட்டு தூங்கிண்டு இருக்கறதுக்கு உடம்பிலே வலு கேட்கலை. ஸத்கர்மம் பண்றதுக்கு உடம்பில வலிமை.

தீர்க்கம்சாயு: – மனுஷ ஆயுசு நூறு வருஷம்னு சொல்றா. அதாவது இந்த ஜன்மாவிலேயே ஞானத்தை அடையணும். அதற்கு கர்மா பண்ணி சித்த சுத்தி,

பக்தி, ஆத்ம விசாரம் அப்படி அந்த மார்கத்துல போறதுக்கு தீர்க்கம்சாயு: – நீண்ட ஆயுஸ்

யஷஸ்ச த்ரிபுவன விதிதம் – மூவுலகத்துலேயும் புகழ். நல்லவா புகழோட இருந்தா மத்தவா அவாளைப் பார்த்து நல்ல வழியில் இருப்பா. அதுல ஸ்வாமிகள் சொல்வார் 'இந்த உலகத்துல போஸ்டர் அடிச்சு புகழ் வாங்கலாம். யஷஸ்ச த்ரிபுவன விதிதம் – மூவுலகத்துலேயும் புகழ்னா தெய்வங்கள் சர்வ சாக்ஷி அவா, நம்ம மனசுல நினைக்கறது கூட அவாளுக்கு தெரியும். உத்தமமான நடத்தை இருந்தால் தான் தெய்வங்கள் கிட்ட நல்ல பேர் வாங்க முடியும். அந்த மாதிரி புகழைக் கேட்கிறார்.

பாபமார்காத் விரக்திம் – பாப வழியில் புத்தி போகவே கூடாது. அதுக்கு என்ன பண்ணணும்?

ஸத்சங்கம் –ஸாதுக்களோட சங்கத்துல இருக்கணம். கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் மாதிரி, மஹாபெரியவா மாதிரி, சிவன் ஸார் மாதிரி ஸாதுக்களை ஆஷ்ரயிக்கணும். அப்படி ஒரு ஸத்சங்கம் நேரிலே கிடைக்கலைனாலும்

ஸத்கதாயா: ஸ்ரவணமபி – அவாளோட கதைகளை கேட்டுண்டே இருக்கணும். ராமாயணம் கேட்கற மாதிரி மஹாபெரியவாளோட அனுபவங்களை கேட்டுண்டே இருந்தா அது தான் ஸத்கதா ஸ்ரவணம்

"ஸத்கதாயா: ஸ்ரவணமபி ஸதா தேவி தத்வா" எப்போதும் எனக்கு இதெல்லாம் வேணும்.

'க்ருபாப்தே' கருணைக் கடலே 'வித்யாம் சுத்தாம் ச புத்திம்' ஆத்ம வித்தையும் தூய்மையான புத்தியும், அதாவது சித்தசுத்தி,

'கமலஜதயிதே' தாமரையில் உதித்த பிரம்மனின் மனைவியான ஹே சாரதா தேவி,

'ஸத்வரம் தேஹி மஹ்யம்' வெகு சீக்ரமாக இன்னிக்கே அப்படி ஆத்ம வித்தையும் நல்ல புத்தியையும் கொடு. இப்படி ஒரு ஸ்லோகம்.

கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் எப்படின்னா, இப்படி ஒரு அருமையான அம்ருதமான விஷயத்தை, முதலிலேயே சின்ன குழந்தைகளுக்கு உள்ளுக்குள்ள

ஏத்திடுவார். 'ரொம்ப விஷமம் பண்றான்' னு ஒரு அம்மா வந்து வருத்தப்பட்டு சொன்னால் 'இந்த ஸ்லோகத்தை தினம் பன்னிரண்டு வாட்டி சொல்லுங்கோ'ம்பார். அவா அதைச் சொன்னா ரெண்டு பேருக்கும் ஒருத்தர் கிட்ட ஒருத்தருக்கு அன்பும் வளர்ந்துடும். இந்த ஸ்லோகத்தை சொல்லிண்டே வந்தான்னா நிச்சயமாக அவனுக்கு நல்ல குரு கிடைச்சு, நல்ல கதைகளைக் கேட்டு, நல்ல வழியில புத்தி இருந்து ஆத்ம ஞானத்தை அடைவான். அப்படி ஸ்வாமிகள் ஒண்ணு சொன்னதைக் கேட்டாலே இஹ பர க்ஷேமத்தை கொடுத்துடும். இந்த ஸ்லோகத்தை ஸ்வாமிகள் ரொம்ப விரும்பி சொல்வார்.

அந்த சச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதி ஸ்வாமிகளோட மஹிமை எப்படின்னா, ஸ்ருங்கேரியில ஒரு தம்பதிகளுக்கு பன்னிரண்டு குழந்தைகள் பிறந்து எல்லாமே தவறி போயிடறது. அவா இந்த ஆசார்யாள் கிட்ட முறையிட்டுக்கரா. அப்போ இந்த ஆசார்யாள் ஒரு சுவாசினி பூஜையின் போது ஆசீர்வாதம் பண்ணி 'உனக்கு ஒரு குழந்தை பிறப்பான். அவனை மடத்துக்கு குடுத்துடு'ன்னு சொல்லி குழந்தை பிறந்த உடனே நரஸிம்ம சாஸ்த்ரினு பேர் வெச்சு மடத்துல கூட்டிண்டு வந்து அவரை வளர்த்து உருவாக்கினார். அவர் தான் அடுத்த ஆசார்யாள் சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள். அவரோட இருபது வயசுல சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளுக்கு ஸன்யாசம் குடுத்து, மடாதிபதியாக வெச்சுட்டு, நரஸிம்ம பாரதி ஸ்வாமிகள் பகவான் கிட்ட போயிடறார்.

அந்த சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளோட பெருமை அளவிட முடியாதது. நம்ம சந்திரசேகர ஸரஸ்வதி ஸ்வாமிகளும் (மஹாபெரியவா) சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளும் வேத தர்ம சாஸ்த்ரங்களில் நம்பிக்கை, எளிமை, துறவு எல்லாத்துலேயும் ஒரே மாதிரி. தெய்வத்தின் குரல் படிச்சா, நமக்கு எவ்வளவு பெரிய விஷயங்களை மஹாபெரியவா எவ்வளவு எளிமையாக சொல்றாங்கர ஆச்சர்யம் ஏற்படற மாதிரி, சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளோட உபதேசங்களை படிச்சாலும் அதே ஆச்சர்யம் ஏற்படும். பெரிய சாஸ்திர விஷயங்களை, ரொம்ப அழகான தர்க்கங்களை சொல்லி, ரொம்ப எளிமையான உபமானங்களைச் சொல்லி மனசுல பதிய வெச்சுடுவார்.

ஸ்ருங்கேரி மடத்துல போட்ட புஸ்தகத்துல சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளைப் பத்தி இரண்டு விஷயங்களை படிச்சவுடனே எனக்கு ரொம்ப பரமானந்தம் ஆகிவிட்டது. அவரோட பத்து வயசுல, மடத்துல அவரை வளர்த்துண்டு இருக்கா. அவருக்கு மூக பஞ்சசதீ ஸ்தோத்ரத்துல ரொம்ப இஷ்டமாம். அவர் கிட்ட பணம் குடுத்து ஏதோ வாங்கிண்டு வான்னு சொல்லி அனுப்பி இருக்கா.

அவர் மூக பஞ்சசதீ சொல்ல ஆரம்பிச்சு, என்ன கார்யம் சொன்னா, என்ன வாங்க சொன்னா எல்லாம் மறந்து போய், அந்த ஐநூறு ஸ்லோகமும் சொல்லி முடிச்ச பின்ன, ஒரு பத்து கிராமம் தள்ளி வந்து நின்னுண்டு, எங்கே வந்தோம் எதுக்கு கிளம்பினோம்னு புரியாம திரும்ப வந்து கேட்டாராம். அப்படி சின்ன வயசுலேயே இந்த மூக பஞ்சசதீ ஸ்தோத்ரத்தோட இனிமையில மயங்கி ஒருத்தர் சமாதி நிலைக்கு போக முடியும்னா, அவர் பிறவியிலேயே மஹான். அவரோட குரு, ஏதோ ஒரு யோகியை, ஒரு காரணமாக இங்கே பிறக்க வெச்சு, அந்த மடத்துல கொஞ்ச நாள் ஆசார்யாளாக இருக்க வெச்சுருக்கார்.

அந்த சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள், இருபது வயசுல பீடத்துக்கு வந்து ஒரு நாற்பது வயசு வரைக்கும் பூஜை, சஞ்சாரம் எல்லாம் பண்ணி, ஜனங்களுக்கு தர்சனம் குடுத்து, ஸதுபதேசங்கள் எல்லாம் பண்ணி இருக்கார். அவருக்கு வால்மீகி ராமாயணத்துல ரொம்ப ப்ரியம். சின்ன வயசுலேர்ந்தே வால்மீகி ராமாயணம் நிறைய பாராயணம் பண்ணி இருக்கார். பக்கத்துல ஒரு பலகை போட்டுண்டு ஹனுமார் கேட்கரார்னு ஹனுமாருக்கு ராமாயணம் படிச்சுண்டே இருப்பாராம். பீடத்துக்கு வந்த பின்னும், அவர் சந்திரமௌலீச்வர பூஜையை முடிச்சுட்டு மணிக்கணக்கா ராமாயணம் பிரவசனம் பண்ணுவார், அப்படீன்னு நம்ம ஸ்வாமிகள் சொல்வார். அப்படி ராமாயண பாராயணம், பிரவசனம்ங்கிறது ஏதோ புடவை வேஷ்டிக்காக பண்ற விஷயம் இல்லை, ஸன்யாசிகள் கூட அனுபவிக்கற, ஞானத்தை குடுக்க கூடிய ஒரு கிரந்தம் அப்படின்னு ஸ்வாமிகள் சொல்வார்.

அந்த சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள், நாற்பது வயசு ஆனப்பின்ன அவருக்கு இந்த மடத்து நிர்வாகம் பண்ணவே முடியலை. அவருக்கு பஹிர்முகமாக எதுவுமே பண்ண முடியலை. அப்படி ஜீவன்முக்தராக ஆத்மாராமராக அந்தர்முகமாக போய்விட்டார். ஒரு உத்தம சிஷ்யருக்கு ஸன்யாசம் குடுத்து அடுத்த ஆச்சார்யாளாக அமர்த்திவிட்டு அவர் எப்போதுமே தனிமையில் இருந்தார். ஏதோ சில சமயங்களில் சங்கர பாஷ்ய பாடங்களில் கலந்துண்டு இருக்கார். பண்டிதர்களை எப்பவோ பார்த்து இருக்கார். வெளியில வந்து ஜனங்களோட பழகவே இல்லை. அப்படி ஒரு இருபது வருஷங்கள் இருந்துவிட்டு துங்கா நதியில் ஜல சமாதி அடைந்துவிட்டார். அப்பேற்பட்ட மஹான்.

அந்த மாதிரி அவர் தனிமையில் இருக்கும்போது ஒரு பண்டிதர் மஹாபெரியவா கிட்டேர்ந்து அங்க போயிருக்கார். மஹாபெரியவாளுக்கு சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள் மேலே அபார அன்பு, மதிப்பு. யாரோ 'ஸ்ருங்கேரி ஆசார்யாளுக்கு பித்து பிடிச்சுடுத்தாமே' னு சொன்ன போது மஹாபெரியவா கடும்கோபம் அடைந்து 'நீ ரொம்ப புத்தி ஸ்வாதீனமா? பெரியவாளை அபசாரமாக பேசாதே! போய் சந்திரமௌலீச்வரரை நமஸ்காரம் பண்ணி மன்னிப்பு கேள். என்ன தெரியும் உனக்கு? அவாளை மாதிரி (சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள்) மாதிரி ஜீவன் முக்தர் ஒருத்தர் இருந்தாலே போதும். அவரால் தான் மழை பெய்யறது. உலகமே சுபிக்ஷமா இருக்கு. அபசாரம் பண்ணாதே!' னு கடுமையாக கோச்சுண்டு இருக்கா.

அந்த காலத்துல பண்டிதர்கள் இரண்டு மடத்துக்கும் போயிண்டு வந்துண்டு இருக்கா. அப்படி காஞ்சிலேர்ந்து ஒரு பண்டிதர் ஸ்ருங்கேரி போன போது சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள் அவர்கிட்ட சொல்லி இருக்கார் 'இங்கே (என்னால்) பஹிர்முகமாக கார்யங்களே பண்ண முடியலை. இதைற்கும் (எனக்கும்) சேர்த்துவெச்சு அவா (மஹாபெரியவா) நல்ல திட்டங்களெல்லாம் போட்டு ரொம்ப நன்னா தர்ம பிரசாரம் பண்றார். அவருக்கு நான் க்ருதஞ்தை தான் தெரிவிக்க முடியும்' னு சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள் பேசி இருக்கார். அப்படி அவரோட பெருமை. இப்படி ஆனந்தமாக சந்திரமௌலீச்வர பூஜை பார்த்துட்டு, பக்கத்துல சில க்ஷேத்ரங்களையும் தர்ஷனம் பண்ணிண்டு ஆத்துக்கு வந்து சேர்ந்தோம். நினைச்சு நினைச்சு சந்தோஷப் படக்கூடிய ஒரு அனுபவமாக அமைஞ்சுது. துங்கா தீரம், நரஸிம்ம வனம், சாரதாம்பாள் சன்னிதி. அங்க இன்னும் கூட யானைகள், குதிரைகள், பெரிய காளைகள், பசுக்கள், நிறைய வெண்மையான கொக்கு போன்ற பறவைகள், துங்கா நதியில நிறைய மீன்கள் – அது அஹிம்சா க்ஷேத்ரம், மீன் பிடிக்க கூடாதுன்னு சட்டம் இருக்கு. அதனால இரண்டு அடி மூன்று அடி பெரிய மீன்கள், புறாக்கள், மான்கள், அப்படி ரம்யமான காட்சிகள் மனசுலேயே இருக்கு.

कर्मस्वात्मोचितेषु स्थिरतरधिषणां देहदार्ढ्यं तदर्थं

दीर्घंचायुर्यशश्च त्रिभुवनविदितं पापमार्गाद्विरक्तिम् ।

सत्सङ्गं सत्कथायाः श्रवणमपि सदा देवि दत्वा कृपाब्धे

विद्यां शुद्धां च बुद्धिं कमलजदयिते सत्वरं देहि मह्यम् ॥ னு வேண்டிப்போம்.

மஹாபெரியவா ஆராதனை

நாளைக்கு (26/12/2016) மஹாபெரியவாளோட ஆராதனை. உலகம் முழுக்க நாம எல்லாரும் சந்தோஷமா கொண்டாடறோம். "ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய", அப்படின்னு கச்யப்ப சிவாச்சாரியார், முருகப் பெருமானுடைய அவதாரத்தை பத்தி கந்த புராணத்துல பாடின மாதிரி, ஸ்வாமிநாதனா வந்து அவதாரம் பண்ணி தர்ம செங்கோலை வெச்சுண்டு நூறு வருஷம், அருளாட்சி பண்ணிணா பெரியவா. மஹாபெரியவாளை நினைக்கறது, பூஜிக்கரதுனால நமக்குதான் க்ஷேமம். அவருக்கு ஒண்ணும் ஆகப்போறது இல்லை. அவரை தியானம் பண்ணோம்னா, அவரை கொண்டாடினோம்னா நமக்கு இஹ பர சௌபாக்யங்கள் எல்லாமே கிடைக்கும்.

கலியோட பிரவாஹத்தை தடுத்த ஒரு மஹான். ரிஷிகள் கூட, சத்தியத்தையும் தர்மத்தையும் ஒரு ஆபத்து காலத்துல விட்டு குடுக்கலாம், ரிலாக்ஸ் பண்ணலாம்னு சொல்றா. ஆனா கொஞ்சம் கூட ரிலாக்ஸ் பண்ணாம, அன்னிக்கு ராமாவதாரத்துல ராமர் எப்படி சத்தியத்தையும் தர்மத்தையும் கடை பிடிச்சாரோ அப்படி கடை பிடிச்ச ஒரு மஹான்.

குழந்தைகளுக்கு கதை சொன்னோம்னா, “இந்த கதை தெரியும்ப்பா. வேற ஏதாவது புது கதை சொல்லுங்கோப்பா”, அப்படின்னு கேப்பா. அந்த மாதிரி மஹாபெரியவாள பத்தி புதுசா எதாவது சொல்லுங்கோளேன்னு கேக்கறா. அதனால இன்னிக்கு புதுசா ரெண்டு விஷயங்கள் சொல்றேன். ரெண்டு அனுபவங்கள்.

மஹா பெரியவாகிட்ட ரொம்ப நெருங்கி கைங்கர்யம் பண்ணிண்டு இருக்கிற ஒருத்தர். அவருக்கு செக்-போஸ்ட்ல வேலை போட்டா. அந்த செக்போஸ்ட்ல இருக்கற எல்லாரும் அவர்கிட்ட, “இங்க பாரு, நாங்க எல்லாரும் லஞ்சம் வாங்கறோம். நீயும் உன் பங்கை வாங்கிக்கோ. என்னமோ பண்ணிக்கோ. நடுவுல எதுவும் தகராறு பண்ணாதே” அப்படின்னு மிரட்டறா. அவர் வந்து பெரியவாகிட்ட சொல்றார். பெரியவா “நீ லஞ்சம் வாங்காதே” அப்படின்னு சொல்லிடறா. ஆனா, அந்த பக்தர் அங்க office போனா அவாக்கிட்ட பயத்துனால அவர் அந்த பணத்தை வாங்கி பெரியவாளுக்கு நகைகள் பண்ணி, அதை கொண்டு வந்து பெரியவாகிட்ட கொண்டு வந்து வைக்கறார். பெரியவா அவர் எது கொடுத்தாலும் ஏத்துப்பார். அத்தனை வருஷம்,பெரியவாகிட்ட நெருங்கி தொண்டு பண்ணியிருக்கார் அவர். அந்த நகைகள அவர் வெச்ச போது பெரியவா நிர்தாட்சண்யமா அதை “எனக்கு வேண்டாம்”, அப்படின்னு ஒதுக்கிடரா. இவர் அடுத்த நாளும் கொண்டு வந்து வெக்கறார், பெரியவா சொல்றாளாம், “இது லஞ்சப் பணத்துல பண்ணிணதோன்னு எனக்குத் தோன்றது, நானே ஸன்யாசி. நான் என்னுடைய நல்ல கதியை பாத்துண்டு போகணும். இதெல்லாம் என்னால ஜரிக்க முடியாது” அப்படின்னு சொன்னாளாம். சரின்னு அவர் அதை மடத்துக்கு சேர்ப்பிச்சுடறார்.

அந்த பக்தர் நிறைய புஷ்பங்கள் வெச்சுண்டு ஆத்துல தினமும் லலிதா ஸஹஸ்ரநாமம் சொல்லி பெரியவாளுக்கு அர்ச்சனை பண்ணிண்டே இருப்பார். அந்த பக்தர் அப்படி பண்ணறார்ங்கிறது பெரியவாளுக்குத் தெரியும். அடுத்தநாள் பெரியவாகிட்ட வந்தபோது யாரோ ஒரு கூடை புஷ்பம் கொண்டு வந்து வெச்சாளாம். பெரியவா இவரைக் கூப்பிட்டு பாதங்களை காண்பிச்சு, “அர்ச்சனை பண்ணு” அப்படின்னு சொல்லி எவ்வளவோ நேரம் அவர் திருப்தியா அர்ச்சனை பண்ணிணாராம். சீக்கரமே அவரை செக்போஸ்ட்லேர்ந்து கணக்கு எழுதற வேலைக்கு மாத்திட்டாளாம். இந்த incident அவரே என்கிட்டே நேரடியா சொன்னார்.

அப்படி, பெரியவா மகாபாரதத்தை பத்தி பேசும்போது கூட, "யாரும் பொய்யே பேசக் கூடாது, யாரும் லஞ்சமே வாங்கக் கூடாது", அப்படின்னு சொல்றா. மஹாபெரியவா பத்தி நினைக்கும்போது நாம இந்த நேர்மை, ஒழுக்கம், புலனடக்கம், பணத்துல பற்று இல்லாம இருந்தது, கொஞ்சம் கூட ஆசையே இல்லாம, எந்த ஒரு விதமான போகங்கள்லயும் மனசு வெக்காம, வாழ்க்கை முழுக்க மத்தவாளுக்காகவே வாழ்ந்தார், அப்படிங்கிறது தான் அடிக்கடி நினைக்கணும்.

மஹா பெரியவாளோட நினைப்பை நாம வைபவமா கொண்டாடணும். ஸ்வாமிகள் சொல்வார் "குருவை, ஆச்சார்யனை எப்பிடி கொண்டாடணும்கிறதை நாம வைஷ்ணவாகிட்டயிருந்து கத்துக்கணும்" அப்படிம்பார். இங்க பார்த்தசாரதிகோயில் பக்கத்துலதான் ஸ்வாமிகளும் இருந்தார். நானும் இருந்தேன். இருக்கேன். பார்த்தசாரதி கோயில்ல, பார்த்தசாரதிக்கு எப்படி உற்சவம் பண்றாளோ அந்த மாதிரி, அந்த சிம்ம வாஹனமோ, ஹம்ச வாஹனமோ வெச்சு, உடையவருக்கு, ராமானுஜருக்கு உற்சவம் பண்றா. ஸ்வாமிகள் சொல்வார் "வைஷ்ணவத்துல, குருவுக்கு உடம்பு சரியில்லேன்னா, அவரைத்தான் கவனிக்கனுமே தவிர, திருவாராதனம் கூட முக்கியம் கிடையாது, அவ்வளவு தூரம் அவா ஆச்சார்யனுக்கு முக்யத்துவம் கொடுத்துருக்கா" அப்படின்னு சொல்வார். அந்த மாதிரி இப்பதான் நாமளும், ஸ்மார்தாளும், பெரியவாளப் பார்த்து பார்த்து, பெரியவா தன்னோட குருவுக்குப் பண்ண ஆராதனைகள பார்த்து, பெரியவா தேசம் முழுக்க, ஆதி சங்கராச்சார்யாளுக்குப் பண்ணின சிலைகளும் கட்டின கோயில்களும் பார்த்து நாமளும் இப்பதான் குருபக்தி கத்துண்டு இருக்கோம்னு நினைக்கறேன். இப்படிதான் கொண்டாடணும் குருவை.

ராமனுஜரைப் பத்தி சொன்ன உடனே திருப்பாவை ஞாபகம் வரது. இது மார்கழி மாசம். ராமானுஜருக்கு திருப்பாவை ஜீயர்னே ஒரு பேரு. அந்த திருப்பாவை முப்பது பாசுரதுல அவருக்கு அவ்வளவு உயிர். அதுக்கு பாஷ்யம் எழுதியிருக்கார். அதை உபநிஷத்துக்கு சமானமா கொண்டாடியிருக்கார். அவர், தினம் உஞ்சவிருத்தி போகும்போது திருப்பாவை பாசுரங்களை சொல்லிண்டுதான் போவாராம். அதுகூட பாதுகைகள கழட்டி வெச்சுட்டுதான் போவாராம். ஏன்னா, அந்த திருப்பாவை மேலேயும், ஆண்டாள் மேலேயும்

இருக்கிற பக்தி. திருகோஷ்டியூர்ங்கிற ஒரு ஊரில அந்த திருப்பாவை முப்பது பாசுரங்களையும் சொல்லிண்டு உஞ்சவிருத்தி எடுத்துண்டு போயிண்டு இருக்கார். அவருடைய குரு திருகோஷ்டியூர் நம்பிகள்ன்னு ஒருத்தர். அவா ஆத்து வாசல்ல வரும்போது,

உந்துமத களிற்றன் ஓடாத தோள்வலியன்

நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்

கந்தம் கமழும் குழலீ கடைதிறவாய்

வந்தெங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்

பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்

பந்தார் விரலிஉன் மைத்துனன் பேர்பாட

செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப

வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

அப்படின்னு பாடிண்டு போகும்போது, அந்த திருகோஷ்டியூர் நம்பிகளுடைய பெண், அத்துழாய்ன்னு பேராம், அவள் கதவை திறந்துண்டு வரா. அந்த “வளையொலிப்ப வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்”, அப்படின்னு அவர் பாடறதுக்கும், அந்த குழந்தை கைகள்ல இருக்கிற வளை சத்தம் பண்ணும் படியா கதவை அவள் திறந்துண்டு வந்தாளாம். அதை பார்த்த உடனே ராமானுஜர் சமாதி நிலைமைக்கு போயிட்டாராம். அப்படி, பகவான் நாம பஜனம் பண்றதைக் கேட்கறார், அப்படிங்கிரத மஹான்கள் நினைச்சு நினைச்சு சந்தோஷப் படுவா. அதுதான் அவாளுக்கு அற்புதம். இந்த coincidence, நமக்கு coincidence தான்னு தோணறது. ஆனா பகவான் இருக்கார்ங்கிறதை எப்படி காண்பிச்சுக் கொடுகிறார். இந்த ஒரு coincidence மூலமாக தானே.

அப்படி ஸ்வாமிகள் விஷயத்துல ஒரு மஹாபெரியவாளோட ஒண்ணு நடந்துருக்கு. ரொம்ப சுவாரஸ்யமா சம்பவம். மஹா பெரியவாகிட்ட ஸ்வாமிகள் பாகவதப் பிரவசனம் பண்ணும்போது, கிருஷ்ணாவதாரம் சொல்லிண்டு இருக்கார், கிருஷ்ணர் அவதாரம் பண்ணிண உடனே, வசுதேவர் கிருஷ்ணரை தலைமேலே வெச்சுண்டு கோகுலத்துக்கு எடுத்துண்டு போறார். அப்போ யமுனை வழி விடறது. ஆதிசேஷன் மழை மேலே விழாம படமெடுத்துக் குடையா பிடிக்கறார். அப்போ,அவர்கிட்ட இருந்த ஒரு நாகமணி வெளிச்சம்

காண்பிக்கறது. ஒரு torch light மாதிரி, அப்படின்னு வர்றது. அந்த இடத்துல, ஸ்வாமிகள் மூகபஞ்சசதில இருந்து ஒரு ஸ்லோகம் சொல்வார்

क्षुण्णं केनचिदेव धीरमनसा कुत्रापि नानाजनैः
कर्मग्रन्थिनियन्त्रितैरसुगमं कामाक्षि सामान्यतः ।
मुग्धैर्द्रष्टुमशक्यमेव मनसा मूढस्य मे मौक्तिकं
मार्गं दर्शयतु प्रदीप इव ते मन्दस्मितश्रीरियम् ॥

க்ஷுண்ணம் கேனசிதேவ தீரமனஸா குத்ராபி னானாஜனை:
கர்மக்ரன்தினியன்த்ரிதைரஸுகமம் காமாக்ஷி ஸாமான்யத: |
முக்தைர்த்ருஷ்டுமஶக்யமேவ மனஸா மூடஸய மே மௌக்திகம்
மார்கம் தர்ஶயது ப்ரதீப இவ தே மந்தஸ்மிதஶ்ரீரியம் || 39 ||

“யாரோ, எங்கோ, ஒரு தீர புருஷனால், யோகியினால் இந்த முக்தி மார்கமானது அறியப்படுகிறது. மற்றவர்களுக்கு எல்லாம் அப்படி ஒன்னு இருக்குன்னே தெரிய மாட்டேன்ங்கிறது. கர்மாங்கிற கட்டுல இருக்கிற ஜனங்களுக்கு இந்த முக்தி மார்கமானது போகவே முடியாது இருக்கு. மூடர்களுக்கு அப்படி ஒரு வழி இருக்கறதே தெரியவே மாட்டேன்கிறது. எனக்கு, அம்மா உன்னோட மந்தஸ்மிதம், ஒரு தீபம் போல அந்த முக்தி மார்கத்துல போறதுக்கு வழி காண்பிக்கட்டும்”அப்படின்னு ஒரு ஸ்லோகம். இந்த வசுதேவருக்கு, ஆதிசேஷனுடைய நாகரத்தினம் ஒரு தீபம் போல வழி காண்பிச்சுதுங்கிற இடத்துல, ஸ்வாமிகள் இந்த மூகபஞ்சசதி ஸ்லோகத்தை சொல்றார். மடத்துல சொல்லும்போது, பெரியவா அப்பப்ப வந்து கேப்பா. இந்த ஸ்லோகத்தை சொல்லிண்டு இருக்கும்போது பெரியவா “நன்னா கேக்கறதே” ன்னு சொல்லிண்டே வந்தாளாம். ஸ்வாமிகள் சொல்லிண்டு இருக்கும்போது சில பேர் கேப்பா. அதுல ஒருத்தர் பெரியவாகிட்ட போயி, “இந்த மோட்டாரை போட்டுடறா. அதனால நன்னா கேட்கவே மாட்டேன்கிறது” அப்படின்னு ஒரு complaint சொல்லியிருக்கா. பெரியவா அங்க வரா. பெரியவா வரான்னு தெரிஞ்ச உடனே மோட்டரை ஐ off பண்ணிட்டாளாம். பெரியவாளுக்கும் அது தெரியும். உடனே. பெரியவா வந்து உட்கார்ந்துண்டு, “நன்னா கேட்கறதே” அப்படின்னு சொன்னாளாம். அந்த ஸ்லோகத்தை சொல்லி முடிச்ச உடனே. அப்போ அந்த complaint பண்ணினவர், “பெரியவா வந்த உடனே மோட்டாரை off பண்ணிட்டா, அப்படின்னு சொன்னாராம். அப்போ பெரியவா

சிரிச்சுண்டாளாம். அது அவருக்கும் தெரியும் அப்படின்னு ஒரு புன்சிரிப்பு. ஸ்வாமிகளுக்கு, "அம்மா காமாக்ஷி உன்னுடைய இந்த புன்சிரிப்பு எனக்கு மோக்ஷ மார்கத்துக்கு வழி காண்பிகட்டும்ன்னு ஸ்லோகத்தை சொன்ன உடனே பெரியவா "நன்னா கேக்கறதே"னு சொல்லிஅந்த ஒரு புன்னகை பண்ணதை வந்து, ஸ்வாமிகள் ஒரு ஆசிர்வாதமா எடுத்துண்டு இருக்கார்.இப்படி மஹான்கள் அந்த coincidence ஒரு பெரிய அனுக்ரஹமா நினைப்பா.

இந்த மாதிரி பெரியவாளை நினைக்கும்போது, அவாளை நமஸ்காரம் பண்ணா ப்ரொமோஷன் வந்தது, கஷ்டம் தீர்ந்தது, வியாதி போச்சு, அப்படின்னு நாம கேள்விப் படறோம். அதெல்லாம் பெரிய பாக்கியந்தான். அந்த பெரியவாளாலதான் எல்லா நன்மையும் நடந்ததுன்னு மனச பழக்கறத்துக்கு, அது ஒரு நல்ல வழி. ஆனா இந்த மாதிரி மஹாபெரியவாள ரசிக்கறதுக்கும் நாம அவர் குணங்களை நினைச்சு நினைச்சு அவர்கிட்ட ஒரு அன்பு வரும்படியான ஒரு மனப் பழக்கத்தை நாம ஏற்படுத்திக்கணும். "எனக்கு நல்ல புத்தி கொடுங்கோ பெரியவாளே. எனக்கு உங்க பாதபக்தி கொடுங்கோ பெரியவாளே" அப்படின்னு வேண்டிக்கணும் அப்படின்னு உங்களுக்கு சொல்றது மூலமா நான் எனக்கே சொல்லிக்கறேன்.

ஜானகி காந்த ஸ்மரணம் ஜய ஜய ராம ராம

ஸ்ரீராம: சரணம் மம
மஹாபெரியவா திருவடிகளே சரணம்



ஸ்ரீமத் வால்மீகி ராமாயண பாராயணத்தோட ஆரம்பத்துல தியான ஸ்லோகங்கள்னு, நம்ம ஸ்மார்த்த சம்பிரதாயத்துல ஒரு இருபது ஸ்லோகங்கள் சொல்றோம். அந்த இருபதாவது ஸ்லோகம்,

नमोस्तु रामाय सलक्ष्मणाय देव्यै च तस्यै जनकात्मजायै ।

नमोस्तु रुद्रेन्द्र यमानिलेभ्यः नमोस्तु चन्द्रार्क मरुद्गणेभ्यः ॥

நமோஸ்து ராமாய ஸலக்ஷ்மணாய

தேவ்யை ச தஸ்யை ஜனகாத்மஜாயை |

நமோஸ்து ருத்ரேந்த்ர யமாநிலேப்ய:

நமோஸ்து சந்திரார்க மருத்கணேப்ய: ||

அப்படின்னு இந்த ஸ்லோகத்தோட முடியறது.

ஸ்வாமிகள் என்கிட்ட, இதோட இன்னுமொரு நாலு ஸ்லோகம் சொல்றேன். இதையும் சேர்த்துண்டு, தினம் விடாம சொல்லுன்னு சொன்னார். அது என்னன்னா,

बुद्धिर्बलं यशो धैर्यं निर्भयत्वमरोगिता । अजाड्यं वाक्पटुत्वं च हनुमत्स्मरणाद्भवेत् ॥

புத்திர்பலம் யசோதைர்யம் நிர்பயத்வம் அரோகதா |

அஜாட்யம் வாக்படுத்வம்ச ஹனுமத் ஸ்மரணாத் பவேத் ||

இந்த ஸ்லோகத்துக்கு மஹாபெரியவா ரொம்ப அழகா ஒரு வியாக்யானம் பண்ணி இருக்கா. சில பேர் கிட்ட புத்தி இருக்கும், ஆனா நோஞ்சானா, பலஹீனமா இருப்பா. ரொம்ப பலசாலியா இருக்கிறவா எல்லாரும் புத்தியோட இருப்பான்னு சொல்ல முடியாது. புத்தி பலம் ரெண்டும் இருந்தாலும் தைர்யம் இருக்காது சிலபேருக்கு. தைர்யம் இருந்தாலும் புலனடக்கம் இருக்காது. மஹாபெரியவா அஜாட்யம்ங்கிறதுக்கு புலனடக்கம் அப்படின்னு அர்த்தம் சொல்லிருக்கா. அப்படி, ஒண்ணு இருந்தா ஒண்ணு இருக்காது. ஹனுமார் கிட்டதான் எல்லா குணங்களும் இருக்கு. அந்த ஹனுமாரை நாம வேண்டிண்டோம்னா நமக்கும் எல்லாத்தையும் கொடுப்பார். புத்திர்பலம் யசோதைர்யம் நிர்பயத்வம் அரோகதா அஜாட்யம் வாக்படுத்வம்ச்ச ஹனுமத் ஸ்மரணாத் பவேத், அப்படின்னு எல்லாத்தையுமே ஹனுமார் நமக்கு கொடுப்பார். அப்படின்னு பெரியவா அழகா சொல்லியிருக்கா. அந்த ஸ்லோகம்.

அடுத்தது

दूरीकृतसीतार्तिः प्रकटीकृतरामवैभवस्फूर्तिः ।

दारितदशमुखकीर्तिः पुरतो मम भातु हनुमतो मूर्तिः ॥

தூரிக்ருத சீதார்த்தி: பிரகடீக்ருத ராமவைபவ ஸ்பூர்த்தி: |

தாரித தச முக கீர்த்தி: புரதோ மம பாது ஹனுமதோ மூர்த்தி: ||

அப்படின்னு ஒரு ஸ்லோகம். இது ஆதிசங்கர பகவத்பாதாள் பண்ணின ஹனுமத் பஞ்சரத்னத்துல இருக்கிற ஸ்லோகம்.

'புரதோ மம பாது ஹனுமதோ மூர்த்தி:' – சீதா தேவியினுடைய கஷ்டத்தை போக்கின அந்த ஹனுமார், என் கண் முன்னாடி இப்போது ஒளியோடு விளங்கட்டும் அப்படின்னு அந்த ஸ்லோகம். இந்த ஸ்லோகத்தை ஆதிசங்கர பகவத்பாதாள் சொன்ன உடனே, அவருக்கு ஹனுமத் தரிசனம் கிடைச்சது, அப்படின்னு கதை. அதனால நம்ம ராமாயண பாராயணத்தும் போது ஹனுமாரை பக்கத்துல உட்கார வெச்சுண்டு, அவர் தான் ராமாயணம் கேட்கறதுல ரொம்ப சந்தோஷப் படறவர். யாரும் இல்லேனா கூட, ராமாயணம் கேட்கறதுன்னா ஹனுமார் இருந்தா போறும். அப்படி இந்த 'தூரிக்ருத சீதார்த்தி:' என்கிற ஸ்லோகத்தை சொல்லி, ஹனுமாரை வர வெச்சுடணும்.

அப்புறம், இந்த ரெண்டு ஸ்லோகம்.
धर्मात्मा सत्यसन्धश्च रामो दाशरथिर्यदि।
पौरुषे चाप्रतिद्वन्द्वश्शरैनं जहि रावणिम्॥
தர்மாத்மா சத்யசந்தஸ்ச ராமோ தாசரதிர் யதி |
பௌருஷே சாப்ரதித்வந்த்வ: ஷரைனம் ஜஹி ராவணிம் ||
அப்படின்னு இந்த ஸ்லோகம். லக்ஷ்மணஸ்வாமி இந்திரஜித்தை வதம் பண்ணும் போது சொன்னது. ரொம்ப முக்யமான ஸ்லோகம்.

அப்புறம் நாலாவது,
सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते ।
अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद् व्रतं मम ॥
ஸக்ருதேவ பிரபன்னாய தவாஸ்மீதி ச யாசதே |
அபயம் ஸர்வபூதேப்யோ ததாமி எதத் வ்ரதம் மம ||

அப்படின்னு விபீஷண சரணாகதிபோது ராமர் சொன்ன ஸ்லோகம். இந்த நமோஸ்து ராமாய ஸலக்ஷ்மணாய, தர்மாத்மா சத்யசந்தஸ்ச, ஸக்ருதேவ பிரபன்னாய இந்த மூணும் ராமாயணத்துல ரொம்ப முக்யமான ஸ்லோகங்கள்.

இன்னிக்கு அதோட அர்த்தத்தை சொல்லி, அந்த கதையை சொல்லி, நமக்கெல்லாம் ராமர் மஹாபெரியவா. இந்த மூணு ஸ்லோகத்துல இருந்து எப்படி பெரியவா பக்தி பண்ணணும்ங்கிறத நாம கத்துக்கலாம், எப்படீன்னு நான் உங்களுக்கு சொல்றேன்.

सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते । अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद् व्रतं मम ॥ அப்பபடின்னு ராமர் சொல்றார். இது எந்த இடம்னா, விபீஷணன் ராவணனோட சபையில சொல்றார் 'சீதாதேவியை திருப்பிக் கொடுத்துடு ராமர்கிட்ட' அப்பபடின்னு சொன்னபோது இந்திரஜித் எழுந்து 'இவன் ஒரு பேடி, சித்தப்பன்னு சொல்லி இங்க இருந்துண்டு இருக்கான்' அப்பபடின்னு ரொம்ப கர்வமா பேசறான். அப்போ, அவனை விபீஷணன் கண்டிக்கிறான். இது ராவணனுக்குப் பொறுக்கலை. ராவணன், விபீஷ்ணரை அவமானப் படுத்தி 'நீ எல்லாம் பங்காளி. கூட இருந்து குழி பறிக்கறவன், ஏதோ கூடப் பிறந்தவன்னு உன்னை கொல்லாம விடறேன்' அப்பபடின்னு ஒரு வார்த்தை சொல்றான். இது விபீஷ்ணனுக்குத் தாங்கலை. இங்க நாம இனிமே இருக்கக் கூடாது அப்பபடின்னு, அவன் ஆகாசத்துல கிளம்பிடறான். அவனோட அந்த நாலு மந்திரிகள் கிளம்பறா.

நேர கடலை தாண்டி இங்க வந்து, ஆகாசத்துல இருந்துண்டு சுக்ரீவன் முதலான வானரர்கள் எல்லாம் இருக்கா. அவாகிட்ட சொல்றான். 'என் பேர் விபீஷணன். நான் ராவணனுடைய தம்பி. ராவணனைக் கைவிட்டு ராமரை, 'சர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மனே', என்று 'எல்லாருக்கும் புகலிடம் தரும் ராமரை' சரணடைய வந்திருக்கேன், அவர்கிட்ட சொல்லுங்கோ', அப்பபடின்னு சொல்றான்.

உடனே, இந்த வானரா எல்லாம் ஓடி வரா ராமர்கிட்ட. 'விபீஷணன்னு ஒருத்தன் வந்திருக்கான். உங்களை சரணாகதி பண்றேன்னு சொல்றான். ஆனால், எதிரி பக்ஷத்துல இருந்து வந்துருக்கான். அவனை சேர்த்துக்காதிங்கோ' அப்பபடின்னு சுக்ரீவன் சொல்றான். 'யாரை வேணும்னாலும் நம்பலாம். எதிரி பக்கத்துல இருந்து வந்தவாளை நம்பக் கூடாது. பணம் கொடுத்துக் கூட, கூலிக்கு கூட படையை வாங்கிக்கலாம். எதிரியோட படையை உள்ள விட்டோம்னா, ஒண்ணு நமக்குள்ள கலகம் உண்டாக்கிடுவா. இல்லேன்னா தூங்கும்போது கொன்னுடுவா. இப்படி பல ஆபத்துக்கள் இருக்கு' அப்பபடின்னு சொல்றான்.

உடனே ராமர் சொல்றார். 'நீ சொல்றது வாஸ்தவம்தான். நீ நன்னா ராஜ்ய விவஹாரங்களைத் தெரிஞ்சவனா இருக்கறதுனால நல்ல ஒரு விஷயம் சொல்ற. ஒரு புத்திமதி சொல்ற. எல்லாரையும் கேட்போமே' அப்பபடின்ன உடனே

ஆளுக்கு ஒண்ணு சொல்றா. ஒருத்தர் சொல்றார். 'இவனுக்கு எதாவது வேலை கொடுத்து பார்ப்போம். அதுல இருக்கிற குண தோஷங்களை வெச்சுண்டு இவனை சேர்த்துக்கலாமா, வேண்டாமான்னு தீர்மானம் பண்ணலாம்', அப்படின்னு சொல்றார். இன்னோர்த்தர் சொல்றார். 'இவனை பத்தி ஒற்றர்களை அனுப்பி விசாரிச்சுண்டு வந்து அதுக்கபுறம் நாம தீர்மானம் பண்ணலாம். சேர்த்துக்கறது ஆபத்து தான்' அப்படின்னு எல்லாருமே சொல்றார். ஜாம்பவான் சொல்றார். 'இவன் வந்து இருக்கிற வேளை சரியில்லாம இருக்கே' அப்படின்னு சொல்றார். இன்னோருத்தன் மைந்தன்னு ஒருத்தன் சொல்றான் 'இவன்கிட்ட பேசி பார்ப்போம். பேசறதை வெச்சு இவனுடைய எண்ணம் என்னங்கிறது புரிஞ்சுடும். அப்புறம் வேண்ணா சேர்த்துக்கலாம்', அப்படின்னு சொல்றார்.

அப்போ, ஹனுமார் எழுந்து சொல்றார். 'ஹே ராமா, நீ ப்ருஹஸ்பதி போல புத்திமான். உனக்கு நாங்க ஒண்ணும் சொல்றதுக்கு இல்லை. இருந்தாலும், நீ கேட்டியேன்னு, உன்னையும் கௌரவிச்சுண்டு, இந்த விஷயமும் ரொம்ப முக்யமா இருக்கறதுனால, என்னோட அபிப்ராயத்தை சொல்றேன். ஒருத்தன் சரணாகதின்னு கேட்டு வந்திருக்கான். அவன்கிட்ட இப்ப எதாவது வேலை கொடுத்து அதை போய் பண்ணிண்டு வா அப்படின்னு சொல்றது நடக்காது. அவன் ஆகாசத்துல நின்னுண்டு இருக்கான். அவனை பத்தி, ஒற்றர்களை அனுப்பி விசாரிச்சுண்டு வர்றதுங்கிறதும் நடக்காது. அப்படி எல்லாம் நாம அவனை காக்க வெச்சாலும் அப்புறம் பின்னாடி நம்ம நட்புல அது வந்து ஒரு விரிசலாவேதான் இருக்கும். அவன் வந்திருக்கிற வேளை சரியில்லைன்னு சொல்றார். அதுல எனக்கு ஒரு அபிப்ராயம் இருக்கு. அவன், ராவணன் கிட்ட நீ பண்றது தப்புன்னு சொல்லி பார்த்துருக்கான். நாம் அதர்மத்தோட பக்கத்துல இருக்கோமேன்னு நினைச்சுண்டே இருந்துருக்கான். ஆனா, ஒரு க்ஷணத்துல இனிமே நாம இங்க இருக்கக் கூடாது, நாம ராமரோட தான் இருக்கணும் அப்படின்னு இவன் மனசுல, 'இந்த க்ஷணத்துல, இவனை நான் விட்டேன். இவனோட நான் இருக்க மாட்டேன். எனக்கு தர்மத்தோட பக்கத்துலதான் இருக்கணும்'னு நினைச்சப் பின்ன, பஞ்சாங்கமா பார்க்க முடியும். எப்ப நம்ம மனசுல தப்பு வழியில இருக்கோம்னு நினைச்சா, அந்த க்ஷணமே தானே மாறணும். அதை விட்டுட்டு, வேளை பாக்க முடியாது. மேலும் அவனோடு பேசி

அவனை பத்தி தெரிஞ்சுக்கலாம், அப்படின்னு ஒரு அபிப்ராயம் சொன்னா. வந்திருக்கிறவன் வில்லனா இருந்தா, எவ்வளவு பேசினாலும், அவன் சாமர்த்தியமா அவனோட எண்ணத்தை மறைச்சுண்டு பேச முடியும். அதுனால, பேசி பாக்கணும்ங்கிறது இல்லை.

எனக்கு தெரிஞ்ச வரையில், அதாவது ஹனுமார் அன்னிக்கு, ராவணன் சபையில இருந்தப்போ, ராவணன் ‘ஹனுமாரை கொல்லு’, அப்படிங்கிறான். அப்போ விபீஷணன் எழுந்து ‘தூதனைக் கொல்ல வேண்டாம். அது தப்பு. நீ வேற ஏதாவது பண்ணு’ அப்படிங்கிறான். ‘வாலில் நெருப்பு வை’ என்கிறான். அந்த வாலில் வெச்ச நெருப்பலேயே ஹனுமார் லங்கையையே எரிச்சுட்டு வரார். தர்மத்தை எப்போதும் சொல்றவன் விபீஷணன், அப்படிங்கிரதுக்கு, ஹனுமாருக்கு ஒரு proof இருக்கு. அதை மனசுல வெச்சுண்டு ‘இவன் நல்லவன், இவன் வந்துருக்கிற நோக்கம் சரியானது. வேற தப்பு எண்ணத்தோட வந்தா, இவ்வளவு தைர்யமா வந்து, நேரடியா அவன் அபயம் கேட்க மாட்டான். அவனோட முக பாவம், அவன் பேசின வார்த்தைகள், அவன் சொன்ன அந்த tone. இதை எல்லாத்தையும் வெச்சுண்டு, அவனோட ஆர்ஜவம் அந்த sincerity ஐ நான் புரிஞ்சுண்டுடேன். சேர்த்துக்கலாம்ங்கிறதுதான் என்னோட அபிப்ராயம். இருந்தாலும் உங்க புத்தில எட்டினது மாதிரி நீங்க பண்ணணும் ராமா’ அப்படின்னு ஹனுமார் சொல்லி முடிக்கறார்.

அப்போ சுக்ரீவன் திரும்பவும் ‘ராமா, அண்ணனை விட்டுட்டு வந்து இருக்கான் இவன், எதுக்கு வேணுமானாலும் துணியறான், சேர்த்துக்க வேணுமா, ஆபத்து’, அப்படின்னு சொல்றான். ராமர் சிரிச்சுக்கிறார். ஏன்னா, சுக்ரீவனும் வாலியை விட்டுட்டுதான் வந்தான். இருந்தாலும் அவன் சொல்றதை கௌரவிச்சுண்டு, ராமர் சொல்றார், ‘ஹே சுக்ரீவா, ஒரு friendனா உன்னை மாதிரியும், அண்ணாக்கு தம்பினா பரதனை மாதிரியும், அப்பாக்குப் பிள்ளைனா என்னை மாதிரியும் எல்லாரும் இருப்பாளா?’ அப்படின்னு சொல்றார். ‘விபீஷணனுக்கு அவனுடைய அண்ணன் பொல்லாதவனா இருக்கான். வேற வழி இல்லாம, அவன், அண்ணனை விட்டுட்டான். இங்க வந்துட்டான். மேலும், என்னுடைய எண்ணம் என்னங்கிறத நான் சொல்றேன்’, அப்படின்னு பேசறார்.

ஒரு கார்யத்தை முடிவு பண்ணனும்னா வேதம், தர்ம சாஸ்திரங்கள், மஹான்கள் நடத்தை, அப்புறம் தன்னுடைய மனசாட்சி இப்படி எல்லாத்தையும் வெச்சுண்டு இந்த orderல முடிவு பண்ணனும்னு இருக்கு. அப்படின்னு சொல்லி, ராமர் வேதத்துல இருந்து 'வந்து சரணாகதி பண்ணவனை ஏத்துக்கணும், அது உயர்ந்த தர்மம்', அப்படின்னு quote பண்றார். அப்புறம் ரிஷிகளுடைய வார்த்தைகளை quote பண்றார். அப்புறம் ஒரு புறா, தன்னுடைய மனைவியான புறாவை பிடிச்சுண்டு ஒரு வேடன் வரான். ஆனா மழைக்கு பயந்துண்டு இந்த மரத்துக்கு கீழ நின்னுண்டு இருக்கான். அவன் பசியால வாடறான். அப்போ அந்த புறா சுள்ளிகளை போட்டு நெருப்பு மூட்டி, தன்னை அந்த நெருப்புல போட்டு 'என்னை நீ சாப்டுக்கோ அப்படி'ன்னு சொல்றது. 'ரொம்ப பசியா இருக்க. என் வீட்டுக்கு நீ வந்துருக்க. சரணம்ங்கிற வார்த்தைக்கு வீடுன்னு ஒரு அர்த்தம் இருக்கு. என் வீட்டுக்கு நீ வந்து இருக்க. அதனால நீ என்னை சரணாகதி பண்றதா நினைச்சுண்டு நான் உனக்கு சாப்பாடு கொடுக்கறேன்', அப்படின்னு சொல்லி அந்த பெண் புறாவும் விழுந்துடறது. இப்படி சரணாகதி பண்ணவாளை காப்பாத்தணும், அப்படிங்கற தர்மத்தை மஹான்கள் நடத்தி காண்பிச்சிருக்கா. அதெல்லாம் இருக்கு.

மேலும் என்னுடைய தர்மம் என்ன, நான் சொல்றேன் கேளு, அப்படின்னு சொல்லிட்டு, सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते । अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद् व्रतं मम ॥ 'ஸக்ருதேவா பிரபன்னாய', ஒரு தடவை வணங்கி, ஸக்ருத் னா once ஒரு தடவை நமஸ்காரம் பண்ணி, 'பிரபன்னாய', 'தவாஸ்மி', உன்னை சேர்ந்தவனா நான் இருக்கேன், 'இதியாசதே' என்று யார் யாசிக்கறார்களோ, 'அபயம் ஸர்வபூதேப்ய:' அவனுக்கு சர்வ பிராணிகளிடதிலிருந்தும் நான் அபயம் கொடுப்பேன். எந்த கோணத்துல இருந்தும், எந்த நேரத்துலயும், யாரிடத்திலருந்தும் அவனுக்கு எந்த ஆபத்தும் வராமல் பாத்துக்கறது, இது என் பொறுப்பு. 'ஸர்வபூதேப்யோ அபயம் ததாமி எதத் வ்ரதம் மம' அப்படின்னு ராமர் சொல்றார்.

மஹான்கள் சொல்வா, இப்படி பகவான் தன்னோட பக்தனை காப்பாத்தறதை கடமையாக நினைக்கறதுனால, இப்போ குழந்தைகளை படிக்க வைக்கறதை கடமைன்னு நாம நினைச்சோம்னா அது அவாளுக்கு ஒரு உரிமையாக போயிடறது. அதே மாதிரி பெரியவாளை பாத்துக்கறது கடமைன்னு நாம

நினைச்சா, நம்மளை அவா ஆளாக்கினா, இப்போ அவாளை நாம் பாத்துக்கணும்னு நினைச்சா, அது அவாளுக்கு ஒரு உரிமையாக இருக்கு. இப்படி பகவான் 'என்னை சரணாகதி பண்ணினவனை நான் காப்பாத்துவேன். இது என்னோட விரதம்' அப்படின்னு சொல்லி இருக்கறதுனால நமக்கு அது உரிமை. நாம பண்ண வேண்டியதெல்லாம் 'ராமா காப்பாத்து' னு சொல்லி நமஸ்காரம் பண்ற கார்யம் ஒண்ணு தான், அப்படின்னு ஸ்வாமிகள் சொல்வார். அப்படி அந்த ஸ்லோகத்தோட பெருமை. வேதாந்த தேசிகர் இதுக்கு பக்கம் பக்கமாக வியாக்யானம் எழுதி இருக்கார். அவாளோட சரணாகதி தத்துவத்துக்கு இது ரொம்ப ஆதாரமான ஒரு ஸ்லோகம்.
सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते । अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद् व्रतं मम ॥ அப்படின்னு, ராமர் இருக்கார். நம்மைக் காப்பாற்றுவார்.

நமக்கெல்லாம் ராமர் மஹாபெரியவா.

எப்படி ராமன் தர்மத்தையும் சத்யத்தையும் எந்த ஆபத்துலேயும் அவ்வளவு உறுதியாக காப்பத்தினானோ, அந்த மாதிரி நம்ம காலத்துல, பெரியவா, நூறு வருஷங்கள், ஒரு நாள் கூட ரிஷிகள் சொன்ன தர்மத்துலேர்ந்து நூல் கூட விலகாம காப்பாத்தினா. இன்னிக்கு அதுனால நாம எல்லாரும், கோவில்கள் இருக்கு போறோம். ஒரு சந்த்யாவந்தனம் பண்றோம். ஒரு திருப்பாவை, திருவெம்பாவை பாராயணம் பண்றோம். இவ்வளவு தூரம் நம்முடைய வேத மதம் மிஞ்சி இருக்குன்னா, அது அந்த மஹாபெரியவாளோட அவதாரத்துனால தான். அதுனால அவரை நமஸ்காரம் பண்ணி 'உங்களை சேர்ந்தவனாக என்னை வெச்சுக்கோங்கோ' அப்படின்னு பிரார்த்தனை பண்ணினோமானால் பெரியவா நிச்சயமாக நம்மை எல்லா ஆபத்துலேர்ந்தும் காப்பாத்துவா.

இந்த இடத்துல அந்த பாக்கி ரெண்டு ஸ்லோகத்துக்கும் அர்த்தம் சொல்றேன்.
नमोस्तु रामाय सलक्ष्मणाय देव्यै च तस्यै जनकात्मजायै ।
नमोस्तु रुद्रेन्द्र यमानिलेभ्यः नमोस्तु चन्द्रार्क मरुद्गणेभ्यः ॥
நமோஸ்து ராமாய ஸலக்ஷ்மணாய
தேவ்யை ச தஸ்யை ஜனகாத்மஜாயை |
நமோஸ்து ருத்ரேந்த்ர யமாநிலேப்ய:
நமோஸ்து சந்திரார்க மருத்கணேப்ய: ||

அப்படிங்கற இந்த ஸ்லோகம் எங்கே வரதுன்னா, ஹனுமார் லங்கையில் போய் சீதாதேவியை தேடுகிறார். ராவணனோட அரண்மனையில் பார்க்கிறார். மந்தோதரியை பார்த்து இது சீதையா இருக்குமோ என்று ஒரு நிமிஷம் நினைக்கிறார். அப்பறம், ‘சீதை தபஸ் பண்ணிண்டு இருப்பா. இப்படி சுகமாக படுக்கையில் படுத்துண்டு இருக்க மாட்டா’ னு சொல்லி அப்பறம் அந்தபுரத்தில் மத்த பெண்களை பார்க்கிறார். நகரம் முழுக்க தேடறார். ‘ஒரு நாலு அங்குலம் கூட இடைவெளி இல்லாமல் இந்த நகரத்துல எல்லா இடத்திலும் தேடிட்டேனே! சம்பாதி சொன்னாரே, இங்க வந்து சீதையை தேடினேன். சீதையை காணோமே! இப்போ திரும்பி போய் சீதையை காணலைனு சொன்னா, அங்க காத்துண்டு இருக்கற வானரர்கள் எல்லாம் உயிரை விட்டுடுவா. ராமர் உயிரை விட்டுடுவார். ராமர் உயிரை விட்டுட்டா லக்ஷ்மணன் உயிரை விட்டுடுவான். பரதசத்ருக்னர்கள், அவா அம்மாக்கள் உயிரை விட்டுடுவா. குடுத்த வாக்கை காப்பாத்த முடியலையேனு சுக்ரீவன் உயிரை விட்டுடுவான். தாரை, ருமை, போயிடுவா. இப்படி பெரிய அனர்த்தம் ஆகிவிடுமே! என்றெல்லாம் நினைச்சு ஹனுமாருக்கு ஒரு மனக்கலக்கம் ஏற்படறது. அப்போ நான் திரும்பி போகாமலே இருந்து விடுகிறேன். இங்கேயே உயிரை விட்டுவிடுகிறேன்’ அப்படின்னு சொல்றார்.

அப்பறம் ‘ஆத்மஹத்தி பண்ணிக்கறது தப்பு. ஒருத்தன் உயிரோடு இருந்தால் நன்மை ஏற்படும்’ அப்படின்னு சொல்லிகிறார். அப்பறம் ‘நான் இங்கே எதுக்கு வந்தேன்? சீதாதேவி இங்கே இருக்காளானு தேடி கண்டுபிடிக்க வந்தேன். எதுக்கு உட்கார்ந்து விசனப்பட்டுண்டு இருக்கணும்?

यावत्सीतां हि पश्यामि रामपत्नीं यशस्विनीम्|

तावदेतां पुरीं लङ्कां विचिनोमि पुनः पुनः||

யாவத் சீதாம் ஹி பஷ்யாமி ராமபத்நீம் யஷச்விநீம் |

தாவதேதாம் புரீம் லங்காம் விசிநோமி புன: புன: ||

திரும்ப திரும்ப இங்கே தேடுகிறேன். உட்கார்ந்து யோசிச்சு என்ன ஆகப்போகிறது? சீதாதேவியை காணும் வரையில் தேடுவேன் அப்படின்னு சொல்றார். ஸ்வாமிகள் இந்த ஸ்லோகத்துக்கு ‘நாம் பகவத் தர்சனதுக்காக சுந்தரகாண்ட பாராயணம் பண்றோமானா, அம்பாளோட தர்சனம் கிடைக்கற

வரைக்கும் திரும்ப திரும்ப பாராயணம் பண்ண வேண்டியது தான்' அப்படின்னு இந்த ஸ்லோகத்துக்கு அப்படி ஒரு அழகான அர்த்தம் சொல்வார்.

அப்படி தீர்மானம் பண்ணிண்டு எழுந்த போது அப்பறம் அங்கே அசோகவனம் தெரியறது. அஹா! இந்த அசோகவனத்துல நாம இன்னும் பார்க்கலையே னு சொல்லிட்டு 'இங்கேயாவது நான் சீதாதேவியை தர்சனம் பண்ணனும்', என்று அங்கே, இந்த ஸ்லோகத்தை சொல்லி வேண்டிக்கறார். நமோஸ்து ராமாய ஸலசஷ்மணாய – ராம கார்யமாக வந்து இருக்கார். ராமரையே வேண்டுகிறார். 'ராமரையும் லக்ஷ்மணனையும் சீதாதேவியையும் இன்னும் எல்லா தெய்வங்களையும் நமஸ்காரம் பண்ணிட்டு நான் இங்கே போய் தேடறேன். கட்டாயம் இங்கே பார்ப்பேன்' னு சொல்லிட்டு போய் தேடறார். அங்கே சீதாதேவியை பார்த்துடறார். அவளை சமாதானப் படுத்தறார். அப்படி போறது கதை.

அப்படி இந்த ஸ்லோகம் ஒரு ஆபத்துலேர்ந்து நம்மை மீட்டு கொடுக்கற ஒரு ஸ்லோகம். இங்கே ஹனுமார் ராமரை நமஸ்காரம் பண்றார். ஏன்னா அந்த ராமரோட தர்மமும் சத்தியமும் தான் அபாரமான கார்யங்களை நடத்தி தரும். இந்த மாதிரி ஆபத்துலேர்ந்து மீட்டு கொடுக்கும்.

नमोस्तु रामाय सलक्ष्मणाय देव्यै च तस्यै जनकात्मजायै ।

नमोस्तु रुद्रेन्द्र यमानिलेभ्यः नमोस्तु चन्द्रार्क मरुद्गणेभ्यः ॥

அப்படின்னு எல்லா தெய்வங்களையும் வணங்கறார். ராமரை எல்லா தெய்வங்களுக்கும் மேலாக முதல்ல வெச்சு பிரார்த்தனை பண்றார். அப்படி அருமையான ஒரு ஸ்லோகம்.

அந்த காலத்துல, எதாவது ஒரு பேனா தொலைச்சா கூட, ஆத்துல பெரியவா, 'இந்த ஸ்லோகத்தை சொல்லி தேடுப்பா'னு சொல்லுவாளாம். சீதாதேவி தொலைஞ்சுட்டா. கிடைக்கணும். அதுக்காக தேடி வந்த இடத்துல இந்த ஸ்லோகத்தை சொல்றார். அதுனால தொலைஞ்ச பொருள் கிடைக்கணும்னா இந்த ஸ்லோகத்தை சொல்லுங்கோனு பெரியவா சொல்லுவாளாம். இதைக் கேட்ட போது ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

அப்பறம் இந்த மூணாவது ஸ்லோகம்
धर्मात्मा सत्यसन्धश्च रामो दाशरथिर्यदि।
पौरुषे चाप्रतिद्वन्द्वश्शरैनं जहि रावणिम्॥

தர்மாத்மா சத்யசந்தஸ்ச ராமோ தாசரதிர் யதி |

பௌருஷே சாப்ரதித்வந்த்வ: ஷரைனம் ஜஹி ராவணிம் ||

அப்படிங்கற ஸ்லோகம். லக்ஷ்மணஸ்வாமி இந்த்ரஜித்தோட யுத்தம் பண்றார். அந்த இந்த்ரஜித் முதல்ல என்ன பண்றான்னா, ஒரு சீதாதேவி மாதிரி மாயையால் சிருஷ்டி பண்ணிண்டு வந்து அதை ஹனுமார் முன்னாடி வெட்டி போட்டுடறான். ஹனுமார் தவிச்சு போயிடறார். அவர் ஒருத்தர் தான் சீதாதேவியை பார்த்து இருக்கார். ராம லக்ஷ்மணர்களை தவிர. அவர் கண்முன்னாடி அப்படி பண்ணின உடனே அவருக்கு ரொம்ப வருத்தம் ஜாஸ்தியாகி ராமர் கிட்ட இதை வந்து சொன்ன உடனே ராமர் மயக்கம் போட்டு விழுந்துடறார். ராமர் முகத்துல ஜலத்தை தெளிச்சு ரொம்ப முயற்சி பண்ணி அவரை தெளிவிக்கரா. அப்ப லக்ஷ்மணன் சொல்றான் 'அண்ணா நான் அன்னிக்கே சொன்னேன். நீ நாட்டை விட்டுட்டு வராதேன்னு. செல்வம் தான் எல்லாத்துக்கும் ஆதாரம். நீ தர்மம் தர்மம்னு சொல்லி எல்லாத்தையும் தூக்கி போட்டுட்டு வந்தாய். தர்மம் பெரிசா இருந்தா, அந்த ராவணன் மாண்டு போயிருக்கணும். நீ ஜெயிச்சு இருக்கணும். இப்போ பார் என்ன ஆச்சுன்னு' அப்படின்னு ஒரு வார்த்தை சொல்றான். அவனுக்கு ராமர் கஷ்டப்பட்டா தாங்காது. அதுனால இப்படி ஆகிவிட்டதேங்கிற புலம்பல். அப்ப அந்த வார்த்தைகளை சொல்றான்.

உடனே அங்க விபீஷணர் வரார். என்ன ஆச்சுன்னு கேட்கறார். இந்த மாதிரின்னு சொன்ன உடனே 'இந்த மாதிரி நடக்கவே நடக்காது. ராவணன் சீதாதேவியை கொல்லறதுக்கு எல்லாம் அனுமதிக்க மாட்டான். அப்படி இருந்தால் இந்த யுத்தமே இல்லையே. அதுனால இது இந்த்ரஜித்தோட மாயை. அவன் நிகும்பலைங்கற எடத்துல ஒரு யாகம் பண்றான். அந்த யாகத்தை அவன் முடிச்சுட்டா மறைஞ்சு இருந்து திரும்பவும் அடிப்பான். இந்த வாட்டி அவனை ஜெயிக்கவே முடியாது. ராமா, நீங்க லக்ஷ்மண ஸ்வாமியை என்னோடு அனுப்புங்கோ. நான் போய் அந்த இந்த்ரஜித்தை வதம் பண்ணிட்டு வரேன்'னு சொன்ன உடனே ராமர் 'லக்ஷ்மணா போயிட்டு வாப்பா'னு சொல்றார்.

லக்ஷ்மணன் போய் யுத்தம் பண்றான். மூணு நாள் ராப்பகலா யுத்தம் பண்றா. படிக்கறதுக்கு ரொம்ப நன்னா இருக்கும் அந்த சர்கங்கள் எல்லாம். அப்போ இரண்டு பெரும் மாத்தி மாத்தி அஸ்த்ரங்கள் போடறா. ஒரு அஸ்தரம் ஒரு அஸ்த்ரத்தை ஜெயிச்சுடறது. இரண்டுபேருக்கும் ஜயம் ஏற்படலை. இப்போ லக்ஷ்மணன் தளர்ந்து போறான். அப்போ இந்த ஸ்லோகத்தை சொல்றான்.

धर्मात्मा सत्यसन्धश्च रामो दाशरथिर्यदि। पौरुषे चाप्रतिद्वन्द्वश्शरैनं जहि रावणिम्॥
"என் அண்ணா, தசரத குமாரரான ராமர் தர்மாத்மா, சத்யசந்தர், பராக்ரமத்தில் எல்லாருக்கும் மேலானவர், யாரும் அவருக்கு நிகரில்லை என்பது உணமையானால், என்னுடைய இந்த அம்பு இந்த இந்த்ரஜித்தை கொல்லட்டும்" அப்படின்னு சொல்லி ஒரு அம்பு விடறான். धर्मात्मा सत्यसन्धश्च रामो दाशरथिर्यदि। पौरुषे चाप्रतिद्वन्द्वश्शरैनं जहि रावणिम्॥ னு சொல்லி அம்பு போடறான். இந்த்ரஜித் தலை கீழே விழுந்துடறது.

லக்ஷ்மணன் அதிகாயன்னு ஒருத்தனோட யுத்தம் பண்றான். அவன் மேலே பிரம்மஸ்த்ரத்தை போடறான். அந்த ப்ரம்மாஸ்த்ரம் வந்த போது அதிகாயன் பல விதமான அஸ்த்ரங்களை போடறான். ப்ரம்மாஸ்த்ரம் அதை ஒண்ணொண்ணா வீழ்த்திட்டு அப்பறம் அதிகாயனோட கவசத்தை பிளந்து அவனை வதம் பண்ணித்துனு வரும். அப்படி அந்த ப்ரம்மாஸ்த்ரம் கூட ஒரு முயற்சி பண்ண வேண்டி இருந்தது. ராமரோட பேரால லக்ஷ்மணன் போட்ட இந்த பாணம், பாணாத்தை போட்டான், இந்த்ரஜித்தோட தலை கீழே விழுந்தது அப்படின்னு வரது. அப்படி ராமரோட சத்தியமும் தர்மமும் தான் ஜெயிக்கறது. எந்த சத்தியத்தையும் தர்மத்தையும் மூணு நாள் முன்னாடி பழிச்சானோ, அந்த சத்தியமும் தர்மமும் தான் அவனுக்கு வெற்றியை கொடுத்தது.

ராமாயணம் முழுக்க சத்யம் தர்மம். அன்னிக்கு ராமர் காட்டுக்கு கிளம்பும் போது கௌசல்யா தேவி ஒரு விதமாக சமாதனம் பண்ணிண்டு சொல்றா, 'எந்த சத்யத்தையும் தர்மத்தையும் நீ இவ்வளவு நம்பிக்கையோடும் ப்ரியதோடும் காப்பாற்றுகிறாயோ ராமா, அந்த சத்தியமும் தர்மமுமே உன்னை காப்பற்றட்டும்' அப்படின்னு சொல்லி கௌசல்யா தேவி மங்களாசாசனம் பண்ணி அனுப்பறா.

यं पालयसि धर्मं त्वं धृत्या च नियमेन च । स वै राघव शार्दूल धर्मस्त्वामभिरक्षतु ।।

மஹாபெரியவா இந்த ஸ்லோகத்தை quote பண்ணி பேசி இருக்கா. 'ஒரு நாள், ரெண்டு நாள் ஊருக்கு போறான்னா ஏதாவது கட்டி குடுக்கலாம். பதினாலு வருஷம் கண்காணாத காட்டுக்கு போக போறான். அதுனால தர்மமும் சத்தியமும் தான் உனக்கு நான் கட்டி குடுக்கற சோறு'ன்னு அவ ஆசீர்வாதம் பண்ணி அனுப்பிச்சா. அந்த வார்த்தைப்படி ராமர் சத்தியத்தையும் தர்மத்தையும் காப்பாத்தினதுனால என்ன ஆச்சு? ராவணன் கிட்ட கோட்டை இருந்தது, தம்பிகள், பிள்ளைகள் இருந்தா. கும்பகர்ணன் இருந்தான். பெரிய படை பலம்

இருந்தது. அவ்வளவு எல்லாம் ராவணன் கிட்ட இருந்தாலும் அவனுடைய ஒரு தலை கூட மிஞ்சலை. ராமர் கிட்ட சத்தியமும் தர்மமும் தான் இருந்தது. ஆனா அவருக்கு வானரர்களும், கரடிகளும், ஜடாயு, சம்பாதி, போன்ற கழுகுகளும் எல்லாரும் வந்து சகாயம் பண்ணி ராமர் தான் ஜெயிச்சார். சத்தியமும் தர்மமும் காப்பாத்தும்.' னு மஹாபெரியவா பேசி இருக்கா.

அப்படி எந்த அரிய காரியம் நடக்க வேண்டுமானாலும், எந்த ஆபத்துலேர்ந்து மீள வேண்டுமானாலும் மஹாபெரியவாளை சரணாகதி பண்ணணும். எனக்கு, நான் பார்த்தது கோவிந்த தாமோதர ஸ்வாமிகளும் மஹாபெரியவாளை நினைச்சு நினைச்சு ராமத் தன்மையை அடைஞ்சு, தன்கிட்ட வந்தவா எல்லாருக்கும் அபயம் குடுத்தார்.

ஆனா ஸ்வாமிகள் கிட்ட 'பெரியவா மாதிரியே நீங்கள் அனுக்ரஹம் பண்றேள்' அப்படின்னு சொன்னா 'அப்படி சொல்லதே அப்பா. மஹாபெரியவா எல்லாருக்கும் மேலே. அவாளை மாதிரி நூறு வருஷங்கள் மன்மதனோட அம்புக்கே ஆட்படாம இருக்க முடியுமா? அவாளை மாதிரி வராது. அவா தனி.' அப்படின்னு சொல்வார். நான் பெரியவாளை பார்த்த பின் அதே ஸாரூப்யத்தோட ஸ்வாமிகள் இருந்ததுனால, மஹாபெரியவாளோட அனுக்ரஹதை ஸ்வாமிகள் கிட்ட அடைஞ்சேன். அதுனால எனக்கு ஸ்வாமிகள் தெய்வமாக இருக்கார்.

மஹாபெரியவாளை நமஸ்காரம் பண்ணினா எந்த ஆபத்துலேர்ந்தும் மீளலாம். எந்த அரிய காரியமும் நடக்கும். அதுனால 'குருமூர்த்தே த்வா நமாமி காமாக்ஷி' னு பெரியவாளை நமஸ்காரம் பண்ணுவோம்.

ஜானகி காந்த ஸ்மரணம் ஜயஜய ராம ராம

உ

கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் ஆராதனை (26/01/2017)

எங்கள் சத்குருநாதர் ஸ்ரீ கோவிந்த தாமோதர ஸ்வாமிகளுடைய ஆராதனை வைபவம் பழுவூர் கிராமத்துல, ரொம்ப 'அமோகமா' நடந்தது. அதுல கலந்துக்கிற பாக்கியம் எனக்கு கிடைச்சது. இந்த வைபவம் 'அமோகமா' நடந்ததுங்கிற வார்த்தையை ரொம்ப specific ஆ நான் உபயோகப்படுத்தறேன்.

ஸ்வாமிகள் ஸந்யாசம் வாங்கிக்கணும், அப்படின்னு ஆசைப்பட்டார். சிவன் ஸார் கிட்ட உத்தரவு கேட்டார். சிவன் ஸார், 'வாங்கிக்க சொல்லுங்கோ, அமோகமா இருப்பார்', அப்படின்னு சொன்னார். அந்த வார்த்தையோட பலத்தை இன்னிக்கும் நாங்கள் அதை கண்கூடாகப் பாக்கறோம். இந்த ஒரு ஆராதனை வைபவம் "எல்லாரும் பொருளுதவி பண்ண வேண்டியது, வந்து நடத்தி தர வேண்டியது", அப்படின்னு ஒருவிதமான வேண்டுதலும் இல்லாமல், தானா, அவா அவா சிஷ்யர்கள் வந்து அவா அவா ஒரு கார்யத்தை எடுத்துண்டு, அந்த ஆராதனையை ரொம்ப விமரிசையா நடத்தறா.

ஸ்வாமிகளை, அவருடைய சித்திரத்தை, அலங்காரம் பண்ணி, இப்ப அவருக்கு ஒரு அழகான விக்ரஹமூர்த்தியும் ஏற்பாடு பண்ணியிருக்கா. அந்த ஸ்வாமியை, அந்த பழுவூர் அக்ரஹாரத்துல, ஸ்வாமி புறப்பாடு பண்றா. அதுல எல்லாருமாக அந்த ஸ்வாமியைத் தூக்கிண்டு போகும் போது, ஒவ்வொரு ஆத்து வாசல்லயும் ஸ்வாமிக்கு ஆரத்தி காண்பிக்கறதும், கூட வேத கோஷங்கள், ஹரி பஜனம்,

குழந்தைகள் எல்லாம் திருப்புகழ் பாடறது இப்படி. அங்கே ஒரு ஆத்துல பதினாறு பிராமணர்களை ரொம்ப ஆச்சாரமா, அவாளை ஸ்நானம் பண்ணி வெச்சு, அவாளுக்கு மடி வேஷ்டி குடுத்து, சாப்பாடு போட்டு, அங்கே இருந்து அவாளை, மேளதாளத்தோட அதிஷ்டானத்துக்கு அழைச்சுண்டு வந்து, அங்கே தீர்த்த நாராயாண பூஜைன்னு, அவாளுடைய பாத தீர்த்தத்தை பூஜை பண்ணி, அவாளை பிரதக்ஷிணம் பண்ணும்போது அந்த பாத தீர்த்தத்தை தலையில வெச்சுண்டு, “இன்னிக்கு நம்முடைய குருநாதர், இந்த பிராமணர்கள் வடிவத்துல வந்தார், அவருடைய பாத தீர்த்தம் கிடைச்சுதே” அப்படின்னு, சந்தோஷத்துல குதிக்கணுமாம், பிரதக்ஷிணம் பண்ணி ஆடணுமாம், அப்போ அந்த ஜலம் அவா மேலே சிந்தணும், இப்படி மஹா பெரியவாளே பண்ணுவாளாம், தன்னுடைய குருநாதாளோட ஆராதனையை. ஸ்வாமிகளுடைய பூர்வாஸ்ரமப் பிள்ளை, ராகவ சாஸ்த்ரிகள், அவரும் அந்த தீர்த்த நாராயண பூஜை பண்ணி, அப்படி ஜலம் சிந்தும் படியாக பிரதக்ஷிணம் பண்ணுவார். அப்பறம் அந்த பெரியவா கையில இருந்து, அக்ஷதையை வாங்கிண்டு, தலையில போட்டுண்டு, ஆத்துல வந்து, குழந்தைகள் தலையில் போடறதுதான், இந்த ஆராதனையில முக்யமான நிகழ்ச்சிகள். அதிஷ்டானதுல, ருத்ர ஜபங்கள் சொல்லி, மஹாலிங்க ஸ்வாமிக்கு அபிஷேகம், அப்படி, அந்த ஊரே கோலாகலமா கொண்டாடறது.

எல்லா வேளையும் சாப்பாடு, கார்த்தால டிபன் கல்யாணத்துல போடற மாதிரி பலவிதமான அயிட்டங்கள் போட்டு, டிபன். மத்யானம் சாப்பாடு, சாயங்காலம் ட்ரைனுக்கு கட்டிக் கொடுக்கறது அப்படின்னு, ரொம்ப ஆசையா பண்றா. இந்த ஆராதனையில நான், முதல் நாளே போயிடுவேன், எனக்கு என்னன்னா, அங்க வரவா, ஸ்வாமிகளுடைய பெருமையை பேசுவா. गुणि निष्ट गुणाभिदानं स्तव: (குணி நிஷ்ட குணாபிதானம் ஸ்தவ:) அப்படின்னு, யாரிடத்துல குணங்கள் இருக்கோ அதை எடுத்து, பேசறதுக்கு ஸ்தோத்திரம்னு பேரு. அப்படி யாராவது, குணக்கடலா இருந்த ஸ்வாமிகளுடைய பெருமைகளை பேசினா கேட்கலாம்னு நான் ஓடிப் போயிடுவேன். பேசினா கேட்கறது, இல்லேன்னா யாராவது ஆசை பட்டா நாம சொல்றது, ரெண்டும் இல்லேன்னா பாராயணம் பண்ணிண்டு, அவரை தியானம் பண்றது, அப்படின்னு வருஷத்துல ஒரு நாளாவது, நாம ஸ்வாமிகளோட தியானத்துல இருக்கலாம்னு, நான் ஆராதனைக்குப் போவேன்.

உ

அருணகிரிநாதர் திருமுருகன்பூண்டித் திருபுகழ்ல, "அவசியம்முன் வேண்டிப் பலகாலும் (உன்னைத் தொழுவது அவசியமென அறிந்து பலமுறையும் பிரார்த்தித்து), அறிவினுணர்ந்து ஆண்டுக்கொருநாளில் (எனது அறிவினில் உன்னை உணர்ந்து வருஷத்திற்கு ஒரு நாளாவது) தவசெபமுந் தீண்டிக் கனிவாகி (தவ ஒழுக்கத்தையும் ஜப நெறியையும் மேற்கொண்டு உள்ளம் கனிந்து) சரணமதும் பூண்டற்கு அருள்வாயே" அப்படின்னு சொல்றார். இந்த திருப்புகழை எனக்கு சொல்லிக் கொடுத்ததும் ஸ்வாமிகள் தான். ஸ்கந்த சஷ்டி உற்சவத்துல, அட்டையில ஒவ்வொரு திருப்புகழ் வரிகளை எழுதி போட்டிருப்பாளாம், ஸ்வாமிகள் "ஆண்டுக்கொரு நாளாவது தவஜபங்கள் பண்ணி, பகவானோட சரணத்தை அடையணும் அப்படின்னு திருப்புகழ் இருக்கு பாரு" அப்படின்னு சொன்னார். அப்படி ஒரு நாளாவது ஸ்வாமிகளை நினைச்சுண்டு இருப்போம் அப்படின்னு, நான் ஆராதனைக்குப் போவேன்.

ஆராதனைக்கு முந்தின நாள் சாயங்காலம், பாட்டுக் கச்சேரி, அப்படி ஏதாவது ஒரு ஏற்பாடு பண்ணி இருப்பா. எனக்கு ஸ்வாமிகள் சன்னிதியில மூக பஞ்சசதி படிக்கணும்னு மனசுல ஒரு ஆசை இருந்தது. இந்த வாட்டி, அந்த நேரத்துல அங்க இருக்கும்போது சில பேர், "மூக பஞ்சசதி படிக்கிறியா? கேக்கறோம்" அப்படின்னு சொன்னா. சரின்னு, மூணறை மணியில இருந்து எட்டரை மணி வரைக்கும், சந்த்யாவந்தனம் break எடுத்துண்டு மூகபஞ்சசதியை முழுக்கப் படிச்சேன். நிறைய பேர் உட்கார்ந்து கேட்டா. எனக்கு ரொம்ப சந்தோஷம். ஸ்வாமிகள் கிட்ட ஒண்ணு வேண்டிண்டா கிடைக்கும்கிறதுக்கு, அந்த சந்நிதியில மூகபஞ்சசதியை படிக்கணும்னு ஆசை பட்டேன். அது கிடைச்சுது.

கேட்கறவா எல்லாம், நீ நன்னா உபன்யாசம் பண்ற, நீ உபன்யாசமே பண்ணலாம் அப்படின்னு சொன்னா. எனக்கும் அந்த ஆசை இருக்கு. ஆனா அது எப்படி பண்ணணும், அப்படிங்கிறதுக்கு, இப்படி பண்ணினா என்ன கிடைக்கும், அப்படிங்கிறதுக்கு, ரெண்டு பேர் என்கிட்ட தங்களுடைய ஸ்வாமிகளோடு கிடைச்ச அனுபவங்களை பகிர்ந்துண்டா. இதெல்லாம் எதேச்சையா நடக்கறதுதான். நாம போயி கேட்கணும்கிறது இல்ல. வர்றவா ஸ்வாமிகளை பத்தி பேசுவா.

ராகவ ஐயங்கார்னு எண்பத்தெட்டு வயசுக்காரர், என்கிட்ட வந்து பேசினார். ஸ்வாமிகள் கூட postal department ல ஒண்ணா வேலை பண்ணினவர். அவர் அந்த ஆரம்பக் கால அனுபவங்களை எல்லாம் சொல்லிண்டு இருந்தார். ஸ்வாமிகள், postal department ல வந்து சேர்ந்தார். அவர் வந்தபோது ரொம்ப ஸாதுவா இருக்கார்னு, வேலை எல்லாத்தையும் அவர் தலையில கட்டப் பாத்தபோது, அந்தண்டை போ அப்படின்னு, நான் அவரை protect பண்ணினேன். அதனால எங்க ரெண்டு பேர்க்குள்ள ஒரு நட்பு வளர்ந்தது. அப்புறம் பழகப் பழக, அவர் நேரம் கிடைக்கும்போதேல்லாம், ஸ்தோத்திரப் பாராயணம், நாராயணீயம் எல்லாம் படிச்சிண்டு இருக்கறதை பார்த்தேன், என்னத்துக்கு இதெல்லாம் அப்படின்னு கேட்டேன்.ஜென்ம லாபம், பகவானை அடையறது, அப்படின்னு சொல்வார். இவர் ஒரு விலக்ஷணமா இருக்கார். Unique ஆ இருக்கார்னு நான் புரிஞ்சுண்டேன். அவரை கொண்டு ஒருவாட்டி என் நண்பர்களுக்கு ப்ரஹ்லாத சரித்ரம் சொல்ல சொன்னேன். எல்லாரும் உருகி கேட்டா. ரொம்ப ஆனந்தப்பட்டா.

ஒரு நாள் ஸ்வாமிகள் (கல்யாணராம பாகவதர்), தன்னோட ஜாதகத்தை, நான் ஜாதகம் பாக்கறேன்னு சொல்லி, என்கிட்ட காண்பிச்சார். "எனக்கு பகவத் தரிசனம் கிடைக்குமா, மோக்ஷம் கிடைக்குமா" அப்படின்னு கேட்டார். சின்னப் பிள்ளையா இருந்துண்டு இவ்வளவு பெரிய விஷயம் கேட்கராறேன்னு அப்படின்னு சொல்லி, எனக்குத் தெரிஞ்சது சொன்னேன். "உன் ஜாதகத்தில் மோக்ஷத்துக்கு ஆதரவா நிறைய கிரகங்கள் பலத்தோட இருக்கு. ஆனா நாம வாழ்கையை எப்படி எடுத்துண்டு போறோம்னு ஒண்ணு இருக்கு. நீ ரொம்ப நன்னா பகவானை பத்தி பேசற. ராத்திரி பகல் பகவத்குணத்துலயே இருக்கணும், அப்படின்னு ஆசைப்படற. பாராயணம் பண்ணறே. பிரவசனம் பண்ணறே. இதையே நீ பண்ணிண்டு இருக்கலாம். இப்படி பண்ணும் போது உனக்கு நிறைய பணம் கிடைக்கும், புகழ் வேணும்னு கேட்டா அது கிடைக்கும். அதை வேண்டாம்னு நீ மனசுல தீர்மானம் பண்ணி வெச்சேன்னா, உனக்கு பகவத் தரிசனம் கிடைக்கும்", அப்படின்னு எனக்கு தெரிஞ்சதை சொன்னேன். இதை அவர் மனசுல வாங்கிண்டுட்டார்.

அப்புறம் ஒரு தடவை, "நாகபட்டினம் என்னோட ஊர். அங்கே நான் உன்னை கூட்டிண்டு போறேன், அங்க நிறைய படிச்சவா இருக்கா. நீ ராமாயணம்

சொல்லு, கேட்க ஆசைபடுவா"ன்னு சொன்னேன். சரின்னு சொன்னார். கூட்டிண்டு போனேன். அப்போ எனக்கு தெரிஞ்ச பத்து பேரை வரச் சொன்னேன், ஒரு நரசிம்மர் கோயில்ல அவரை ப்ரவசனம் பண்றதுக்கு ஏற்பாடு பண்ணினேன். ஒருத்தர் கிட்டையும் பணம் கேட்கலை. அதனால் யாரும் வந்து நடுவில பேசக் கூடாது. வந்தா கதை கேட்டுட்டு போகணும், அப்படின்னு strict ஆ சொல்லிட்டேன். அது என்ன அப்படின்னு சண்டைக்கு வந்தா. உன்கிட்ட பணம் கேட்டேன்னா, உனக்கு வேண்ணா கதை கேளு, இல்லேனா போயிண்டே இரு, அப்படின்னு அடிச்சுப் பேசிட்டேன். இந்த மாதிரி என்னோட friends வந்து பத்து பேர் கேட்டா. அதுல ஒருத்தர் கதை முடிஞ்ச பின்ன, என்னை தனியா கூட்டிண்டு போயி, "இவ்வளவு படிச்சவரா இருக்கார், இவ்வளவு அழகா கதை சொல்றார். இவரை போயி பத்துப் பேருக்கு இங்க வந்து, கதை சொல்றதுக்காக ஏற்பாடு பண்ணியிருக்கியே, அது தப்பு இல்லையா", அப்படின்னு சொல்லி, நான் எல்லாரையும் கூப்பிடறேன்னு, அவர் நோட்டீஸ் அடிச்சு, நிறைய பேருக்கு சொல்லி, அடுத்த நாள் நூறு பேர் வந்தா. அதுக்கு அடுத்த நாள், முந்நூறு பேர் வந்தா, ஒன்பது நாள், ஏற்பாடு பண்ணியிருந்த கதையை பதினைஞ்சு நாளா சொல்லுங்கோ அப்படின்னு, சொன்னா. அந்த மாதிரி பதினஞ்சு நாட்கள் உபன்யாசம் நடந்தது.

அந்த பதினைஞ்சாவது நாள், என்கிட்ட ரொம்ப வேண்டிண்டு, சரீன்னு இடம் கொடுத்த உடனே, எல்லாரும் அவரை, ரொம்ப கொண்டாடினா. நூறு வருஷம் முன்னாடி பெரியவாள் கிட்ட கேட்ட மாதிரி இருந்ததுன்னு ஒருத்தர் சொன்னார், அம்பாளே வந்து அவர் மடில உட்கார்ந்து பேசறார், அப்படின்னு ஒருத்தர் சொன்னார். எல்லாரும் ரொம்ப சந்தோஷப் பட்டா. எல்லாரும் கொஞ்சம் கொஞ்சம் பணம் கொடுத்தா. ஒரு இருநூறு ரூபாய் collect ஆச்சு. நான் வந்து பணத்தை collect பண்ணிண்டு வந்த உடனே, ஸ்வாமிகள், அங்க ரெகுலரா வந்து பத்து நாளாய் கேட்டுண்டு இருக்கற, வித்வான்கள், படிச்சவா, வைதீகா எல்லாம் இருக்காளான்னு பார்த்து, "எதாவது கொஞ்சம் பணம் சேர்ந்து இருந்துந்துன்னா, வெத்தலை பாக்குல வெச்சு ஒரு இருவது ரூபா இவருக்கு கொடேன்", "இவருக்கும் கொடு", அப்படின்னு சொல்லி சொல்லி, அங்க எட்டு பேருக்கு, வந்த இருநூறு ரூபாயில நூற்றி அறுபது ரூபாய கொடுக்க

சொல்லிட்டார். train charge இருந்தது, திரும்பி வந்தோம். இதே மாதிரி, அவருக்கு ஒரு பதினெட்டு, இருபது உபன்யாசங்கள் ஏற்பாடு பண்ணி கொடுத்தேன். போன இடத்துல எல்லாம் நல்ல பேர். ஆனா "எவ்வளவு collect ஆச்சு?"ங்கிற வார்த்தையை அவர் என்கிட்ட கேட்கவே இல்லை. அந்த பணத்துல மனசு வெக்காம இருந்தா பகவான் கிடைப்பார், அப்படின்னு நான் சொல்ல முடியும், என்னால அந்த மாதிரி வைராக்யமா இருக்க முடியாது. ஆனா அவர் அப்படி வைராக்யமா இருந்தார். எவ்வளவு பணம் collect ஆச்சுன்னு ஒரு தடவை கூட கேட்கலை. எதாவது சேர்ந்து இருந்துதுனா, இன்னாருக்கு குடு, கொஞ்சம் இவருக்கு குடு அப்படின்னு, நிறைய, வந்த பணத்துல இருந்து, தானம் பண்ணார். அப்பேற்பட்ட மஹா புருஷர்.

ராகவ ஐயங்கார் இன்னொண்ணும் சொன்னார். நான் நம்முடைய தீர்மானம், வாழ்கையை எப்படி எடுத்துண்டு போறது, அப்படின்னு சொன்னதுக்கு, என்னுடைய எழுபது வயசுல proof கிடைச்சது. இன்னொரு ஜாதகம் பார்த்தேன், இவருக்கு, (ஸ்வாமிகளுக்கு) few minutes differenceல அதே நாள்ல, அதே நேரத்துல பொறந்த ஒருத்தர் இருந்தார். இவருக்கு வர மாதிரி தசாபுக்திகள் அவருக்கு வந்தது. அதே லக்னம். அதே நக்ஷத்ரம். இவருடைய தசா புக்தி பக்கத்துலையே அவருக்கு வந்தது. அவர் IAS officers க்கு விசேஷங்களுக்கு சமைச்சு போட்டு பத்து கோடி ரூபா சம்பாதிச்சார். ஆனா என்கிட்ட வந்தபோது, நிம்மதியே இல்லை. எப்ப உயிர் போகும்., அப்படின்னு கேட்டார். பிள்ளைகள் எல்லாம் என்னை கொல்ல பாக்கறா, அப்படின்னு சொன்னார், அந்த மாதிரி ஜாதகத்துல, இருக்கற பலாபலன்களோட, நாம சில கொள்கைகள் வெச்சுக்கணும், அப்படின்னு நான் சொன்னேன். எனக்கு தெரிஞ்ச அறிவுல சொன்னதுக்கு, எனக்கு பதில் கிடைச்சது, அப்படின்னு அந்த ராகவ ஐயங்கார் சொல்லி முடிச்சார்.

அதனால பகவானை பேசணும்னா "அது profession கிடையாது. எதிரில் இருக்கறவாளோட திருப்தி முக்யமில்லை, இதுல இருந்து சம்பாதிக்கலாம், அப்படின்னு எண்ணமே வெச்சுக்கக் கூடாது. அந்த வைராக்கியம் வந்தா, இந்த ப்ரவசனமே பண்ணிண்டு இருக்கலாம்" அப்படின்னு எனக்கு ஒரு தோணித்து.

அதுக்கு பகவான் அனுக்ரஹம் பண்ணணும். அப்படி, ஸ்வாமிகள், என்னிக்காவது ஒரு நாள் வழி விடுவார், அப்படின்னு நான் நினைக்கிறன்.

இப்படி வைராக்யமா இருந்தா என்ன கிடைக்கும், அப்படிங்கிறதுக்கு, அன்னிக்கு ராத்திரி, ஸ்ரீரங்கம் ஸ்டேஷன்ல வந்து உட்கார்ந்துண்டு இருக்கோம். பதினொரு மணிக்கு வண்டி. பத்தரை மணிக்கு, குஞ்சிதபாதம் ஐயர் அப்படின்னு ஒருத்தர், அவரும் எழுபத்தேழு வயசுக்காரர். அவர் பக்கத்துல வந்து உட்கார்ந்துண்டார். என்ன பழூர் அதிஷ்டானம் ஆராதனைக்கு வந்தேளா. அப்படின்னு கேட்டார். ஆமாம், வந்துருந்தோம்னு சொன்ன உடனே, ஸ்வாமிகள், மாதிரி ராமாயணம், பாகவதம் யாரவது படிக்கிறவா இருப்பாளா இருக்கும், அவரை மாதிரி, ஒழுக்கம், நேர்மை, அவரை மாதிரி, வைராக்கியம், பக்தி, கருணை இதெல்லாம் கத்துக்கணும்ப்பா, அப்படின்னு சொல்லிட்டு, அவர் ஒரு நிகழ்ச்சி சொன்னார்.

ஸ்வாமிகள் பத்தி தெரிஞ்சுண்டு. அவர் ரொம்ப எல்லார்கிட்டயும். சுலபமா பழகுவார், ரொம்ப இனிமையா பேசுவார். எங்காத்துல ஒரு பாகவத ஸப்தாஹம் வெச்சுக்கலாமான்னு கேட்டேன். ஆஹா ன்னு சொன்னார். நான் எங்காத்துல ஏற்பாடு பண்ணிணேன். கார்த்தால பாராயணம். சாயங்காலம் பிரவசனம் பண்ணிண்டு இருக்கார். அந்த நேரத்துல நான் ஐயப்ப ஸ்வாமிக்கு விரதம் இருந்தேன். அந்த காலத்துல எல்லாம், மொத்தமா ஒரு வருஷத்துக்கே ஐயப்ப ஸ்வாமி கோவிலுக்கு, ஒரு ஆயிரம் பேர்தான் சபரி மலைக்கு போன காலம். யாரோ பக்கத்துல ஒரு பெரியவர் இருந்தார். அவர் நான் கூட்டிண்டு போறேன்னு சொன்னார். அதுதான் நான் முதல் தடவை, நான் பண்றேன். அந்த மாதிரி ரொம்ப தீவிரமா விரதம் இருந்து ஸ்வாமி தரிசனத்துக்காக, காத்துண்டு இருக்கோம். உங்காத்துல நாளைக்கு, ஐயப்ப பூஜை வெச்சுக்கோ, அப்படின்னு சொன்னார். ஆஹான்னு சொன்னேன். அதுக்கு அவர் ஒரு விக்ரஹம் வெச்சுண்டு இருந்தார். அதை நம்மகிட்ட கொடுக்கப் போறார். அந்த ஸ்வாமியை வெச்சுண்டு நாம பூஜை பண்ணலாம்னு நான் நினைச்சுண்டு இருந்தேன். அவர்கிட்ட கேட்டபோது, அது இன்னொரு ஆத்துல இருக்கு. நீ வேணா நாளைக்கு கார்த்தால வந்து ஒரு மூணு மணிக்கு நீ அவர் ஆத்துல போயி வாங்கிக்கோ, அப்படின்னு சொல்லிட்டார். நான்,என்னடா இது, இன்னிக்கு ஸ்வாமி கிடைச்சா, நிறைய புஷ்பங்கள், எல்லாம் ஏற்பாடு பண்ணி

இருந்தேன். அலங்காரம் எல்லாம் பண்ணலாமேன்னு என் மனசுல ஒரு எண்ணம் இருந்தது. அதை ஸ்வாமிகள்கிட்ட சொல்லிண்டு இருந்தேன். ஐயப்ப ஸ்வாமி இன்னிக்கு நம்மாத்துக்கு வருவார்னு நினைச்சேன், நாளைக்கு கார்த்தால போயி கூட்டிண்டு வரணும் அப்படின்னு சொல்லிண்டு இருந்தேன். ஸ்வாமிகள் கேட்டுண்டு சிரிச்சார்.

அவர் பாராயணம் பண்ணிண்டே இருக்கார், சாயங்காலம், பிரவசனம் பண்ணும்போது மோஹினி அவதாரம், சொல்லிண்டு இருக்கார். வாசல்ல, மேளதாளத்தோட ஏதோ ஸ்வாமி வர மாதிரி சத்தம் கேட்டுது. எல்லாரும் வெளியில வந்து பார்த்தோம். அந்த ஐயப்ப ஸ்வாமியை எடுத்துண்டு வந்துண்டு இருந்தா. என்னன்னு கேட்டேன். இன்னிக்கு அவா ஆத்துல ஒரு தீட்டு வந்துடுத்து. நீ ஆசை பட்டியே, இன்னிக்கே உங்காத்துக்கு ஸ்வாமி வந்துட்டார், அப்படின்னு என்னோட குருநாதர், ஐயப்ப ஸ்வாமியை உள்ள கூட்டிண்டு வந்தார். ஸ்வாமிகள் ரொம்ப உருகி கண் ஜலம் விட்டார். மோஹினி அவதாரம் படிக்கும்போது ஐயப்ப ஸ்வாமி வந்தாரே அப்படின்னு, ரொம்ப சந்தோஷப் பட்டார். அந்த விஷ்ணு பகவான் மோஹினி அவதாரம் எடுத்தபோது தானே, ஹரிஹரபுத்ரனா ஐயப்ப ஸ்வாமி அவதாரம் பண்ணார். அதை நினைச்சு ஸ்வாமிகள் ரொம்ப சந்தோஷப் பட்டார். அந்த மாதிரி, பகவானையே பேசிண்டு இருந்தா என்ன கிடைக்கும் அப்படின்னா, பகவானே கிடைப்பார். அப்படிங்கிறதுக்கு இது ஒரு ஸாக்ஷி.

அப்படி ஸ்வாமிகளை நினைச்சுண்டு இருக்கறதுக்கு இந்த ஆராதனை ஒரு வாய்ப்பா இருந்தது. ஶ்ரீ சுந்தர்குமார், ஸ்வாமிகளுடைய அத்யந்த பக்தர். ஸ்வாமிகள் ஸன்யாசம் வாங்கிண்ட அந்த பன்னிரெண்டு வருஷம், ஸ்வாமிகள்கிட்ட வந்து நிறைய பாகவதம் கேட்டு இருக்கார். ஸ்வாமிகளும் அவர் பாகவத ஸப்தாஹம், சாய் சமாஜ்யத்துல படிக்கும்போது, நிறைய ஸ்ரவணம் பண்ணி இருக்கார். அவர் ஒவ்வொரு வருஷமும் இந்த ஆராதனையை ஒட்டி ஒரு ஸப்தாஹம் பண்ணுவார். ஆராதனையில வந்து கலந்துப்பார். அவருடைய பக்தி பாக்கறதுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும். அங்கப்ரதக்ஷணம் பண்ணுவார். தோடகாஷ்டகம் சொல்லி நமஸ்காரம் பண்ணுவார். அஞ்சு நிமிஷம், ஸ்வாமிகளை பத்தி பேசுவார். அதை கேட்கறதுக்குகாகவே, நான் ஓடிப் போவேன். அந்த மாதிரி இந்த வாட்டி, பகவான் கபிலாவதாரம் பண்ணி, கபில முனியா வந்தபோது, தேவஹூதின்னு

அவர் அம்மா, "எனக்கு, இந்த உலக பந்தங்கள் எல்லாம் விடறதுக்கு வழி சொல்லுங்கோ" அப்படின்னு, கேக்கறா, "பகவான்கிட்ட பக்தி பண்றதுதான் வழி" அப்படின்னு சொல்றார். அந்த பக்தி எப்படி ஏற்படும்னு கேட்கும் போது, நான் உனக்கு பக்தியை தரேன்னு சொல்லலை. பகவானே எதிரில் உட்கார்ந்துண்டு இருக்கார். ஆனாலும், தன்னுடைய அம்மாக்கு "உனக்கு பக்தியை அனுக்ரஹம் பண்றேன்"னு சொல்ல முடியலையாம். "மஹான்களுடைய சரணத்தை நமஸ்காரம் பண்ணி, அந்த பாத துளியை தலையில ஏத்துண்டாதான் பக்தி ஏற்படும்", அப்படின்னு சொல்றார். அப்போ மஹான்களோட லக்ஷணம் என்ன, அவா எப்படி இருப்பா, அப்படின்னு கேட்டபோது, அழகான ஒரு நாலு ஸ்லோகங்கள் இருக்கு. அந்த ஸ்லோகங்கள் எல்லாம் சொல்லி, அதுல இருக்கிற ஒவ்வொரு வார்த்தைக்கும், அர்த்தம் சொல்லி, அந்த லக்ஷணம், எப்படி நம்ம ஸ்வாமிகள்கிட்ட இருந்தது, அப்படின்னு சொன்னார். ரொம்ப பேரானந்தமா இருந்தது.

அப்பேற்பட்ட சத்குருநாதர் நமக்கு கிடைச்சிருக்கார். அவருடைய மகிமையை நினைப்போம். "இந்த உலகத்துல செல்வம் வேணும், நல்ல வாழ்கை வேணும்னாலும் ஞானிகளை ஆஸ்ரயிக்கணும்" அப்படின்னு, உபநிஷத்லயும், வேதத்துலயும் இருக்கு. அது மாதிரி அந்த மஹான்களை நாம எதுக்காக ஆஸ்ரயிச்சாலும், அவா, படிப்படியா நமக்கு சித்தசுத்தியையும், பக்தியையும், ஞானத்தையும், வைராக்யத்தையும், நமக்கு கொடுப்பா. அந்த நம்பிக்கையோட நான் அவரை தினமும் நினைச்சுண்டு இருக்கேன்.

கோபிகா ஜீவன ஸ்மரணம்… கோவிந்தா கோவிந்தா…

உ

மோக்ஷமென்னும் மாடிக்கு பக்தி மார்கத்தின் ஏணிப்படிகள்



மஹாபெரியவா, வீழிநாதன் மாமா கிட்ட ஒரு தடவை, "நாம சூரியனை நோக்கி போயிண்டு இருந்தா நிழல், நம்மைத் தொடர்ந்து வரும். அந்த மாதிரி சாஸ்த்ரத்துல இருக்கிற ஒரு லக்ஷியத்தை வெச்சுண்டு, நாம அதை நோக்கிப் போயிண்டே இருந்தோம்னா, பணம், புகழ், பதவி எல்லாம், தானா நம்ம பின்னாடி வரும்." அப்படின்னு சொல்லியிருக்கா. இதை வந்து வீழிநாதன் மாமா, "நான் பல பிரசங்கங்கள்ல இதைச் சொல்லிடறது. ஒரு வாட்டி, கொல்லா சத்திரத்துல, பெரியவாளும் இருந்தா, வித்வான்களும் இருந்தா. அங்க நான் இதை சொன்னேன். அப்போ, பெரியவா, "நான் அப்படி சொல்லலியே", அப்படின்னா. நான் "காக்கிநாடால இருந்து ராமச்சந்திரபுரம் போகும் போது, பெரியவா பல்லக்குல வந்துண்டு இருந்தேள். நான் பக்கத்துல வரும்போது சொன்னேள்", அப்படிங்கறேன். பெரியவா, "நான் அப்படி சொல்லலையே", அப்படிங்கறாளாம். இவர் சொன்னாராம். "இந்த மாதிரி அர்த்தம் எனக்குத் தோணாது. எனக்கு சொல்றதுக்குப் பெரியவாளை தவிர யாரும் இல்லை. பெரியவாதான் சொல்லியிருக்கணும்", அப்படின்ன உடனே, பெரியவா சிரிச்சுண்டு, "நான் என்ன சொன்னேன்னா, லக்ஷியத்தை நோக்கி நாம

போயிண்டு இருந்தோம்னா, பணம், பதவி, புகழ் இந்த மூணும் வேண்டாம், வேண்டாம்னாலும் துரத்திண்டு வரும், அப்படின்னு சொன்னேன். அந்த emphasisஐ நீ விட்டுட்டியே” அப்படின்னு சொன்னாளாம்.

அந்த மாதிரி, போன generation ல வரைக்கும் லக்ஷத்துல ஒருத்தராவது அந்த மாதிரி விவேகத்தோடு இருக்கக் கூடிய வாய்ப்பு இருந்தது. ஒரு பாடம் சொல்லிக் கொடுக்கக் கூடிய வாத்தியார்கள், வைத்தியம் பாக்கறவா, வைதீகத்துல இருந்தவா. அவா எல்லாம் நாம கஷ்டப்படரவாளுக்கு உபகாரம் பண்ணணும்னு, ஒரு வைத்தியர், முடிஞ்ச பணத்தை கொடுங்கோ, அப்படின்னு வைத்தியம் பண்ணுவார். அப்படி பண்ணினாலும், அவருடைய வாழ்க்கைக்குத் தேவையான அளவுக்கு, ஒரு இருக்க இடமோ, சாப்பாடோ, பிள்ளைகள் படிப்போ, குழந்தைகளுக்குக் கல்யாணமோ எல்லாம் நடந்த போது, இந்த பெரியவா சொல்ற வார்த்தை, “நாம லக்ஷியத்துல பார்த்து போயிண்டே இருந்தா பணம், பதவி, புகழ் எல்லாம் தானா நம்மைத் தேடி வரும்”, அப்படிங்கிறதை நாம கேட்டு வியக்கறோம். அவ்வளவுதான். ஆனா அவா அதை, அனுபவிச்சிருப்பா. அந்த தரிசனம் அவாளுக்குக் கிடைச்சிருக்கும். போன generationல இந்த மாதிரி தியாக புத்தியோட இருக்கறவா இருந்தா.

அதே மாதிரி, நல்ல குழந்தைகள் இருந்தா படிப்பு சொல்லித்தரணும், அப்படின்னு எவ்வளவோ பேர், படிப்பு சொல்லித்தந்து அதனால அவாளுக்கும் ஒரு பெருமையும், நல்லாசிரியர் போன்ற பதவிகளும், பட்டங்களும், வாழ்க்கையை நடத்த வேண்டிய தேவையான பணமும் எல்லாம் வந்த காலம் உண்டு. இப்ப நமக்கு அந்த மாதிரி பண்றதுக்கே பயமா இருக்கு. சிவன் சாரும், இந்த காலத்தில் இரக்கம், அன்பு இதெல்லாம் பாத்துதான் பண்ணணும், அப்படின்னு சொல்லி இருக்கார். ஒரு விவேகமா நடந்துகிறதுக்கு, அவ்வளவு risk எடுக்க வேண்டியிருக்கு, அவ்வளவு பயப்பட வேண்டியிருக்கு. காலம் அந்த மாதிரி இருக்கு.

நான் இதைக் கேட்டபோது, “ஸ்வாமிகள் ராமாயண, பாகவதப் பிரவசனம் பண்றேன். பணம் கூட்டத்தை பத்தி எனக்கு அக்கறை இல்லை” அப்படின்னு பண்ணிண்டு இருந்தார். அப்படிங்கிற போது, இந்த சூரியனைப் பார்த்துப்

போனா, நிழல் கூட வரும், அப்படிங்கிறமாதிரி, இந்த பணம், பதவி, புகழ் எல்லாம் அவருக்கும் வந்தது. ஆனா "வெயிலுக்கு உதவா உடம்பின் வெறுநிழல் போல் கையிற் பொருளும் உதவாது காணும்கடை வழிக்கே" அப்படின்னு அருணகிரிநாதர் சொல்ற மாதிரி, இந்த பணம், பதவி எல்லாம் நிழல் மாதிரிதான், அப்படின்னு அதை அவர் துச்சமா நினைச்சு, பகவான்தான் சூரியன் மாதிரி, எனக்கு அதுதான் லக்ஷ்யம், அப்படின்னு ஸ்வாமிகள் போயிண்டே இருந்தார். அப்ப அவருக்கு பகவானே கிடைச்சார்", அப்படின்னு ஒரு வார்த்தையில முடிச்சுட்டேன்.

அப்புறம் ஸ்ரீ சுந்தர்குமார் அந்த பாகவதம் மூணாவது ஸ்கந்தம், இருபத்தைந்தாவது அத்யாயத்துல இருந்து சில ஸ்லோகங்கள் சொல்லி, மஹான்களுடைய லக்ஷணங்கள், அது ஸ்வாமிகளுக்கு எப்படி பொருந்தறது, அப்படின்னு சொன்னார். அதை திரும்பவும் கேட்டபோது, அந்த நான்கு ஸ்லோகங்களில் ஸ்வாமிகள், "பகவானையே நான் பேசிண்டு இருக்கப் போறேன், பணம், புகழ் எனக்கு ஒரு பொருட்டல்ல", அப்படின்னு தீர்மானம் பண்ணினது, ஒரு first step தான். அதுக்கப்புறம் அவர் எப்படி படிப்படியா உயர்ந்து அவர் பகவானை அடைஞ்சார் அப்படின்னு இந்த ஸ்லோகத்துல இருக்கிற ஒரு ஒரு குணத்தையும் எடுத்தா, அந்த படிகளை சொல்ற மாதிரி தோன்றது.

मय्यनन्येन भावेन भक्तिं कुर्वन्ति ये दृढाम् 'மயி அனந்யேன பாவேன பக்திம் குர்வந்தி யே த்ருடாம்' அப்படின்னு "பகவானைத் தவிர வேற எதுலயும் மனசு வெக்காம பக்தி பண்ண போறேன்" அப்படின்னு, அவர் முடிவு பண்ணார். அப்படி அவர் பண்ண ஆரம்பிச்சு, கொஞ்ச நாள்லயே அவருக்கு பணக்கஷ்டம். பணம் சேரலை. அவர் சேரவும் விடலை. ஆனா, பாக்கறவா எல்லாம், நாம அவருக்கு help பண்றோம்னு நினைச்சுண்டு, "இந்த மாதிரி பணத்தை நீங்க ரசிக்க மாட்டேங்கறேள். இந்த மாதிரி எல்லாம் இருந்தா நடக்காது" அப்படின்னு அவரை வந்து "முட்டாள்தனமா இருக்கு, உங்க கார்யங்கள். புத்தி இல்லாத behaviour" அப்படின்னெல்லாம் கூட கடுமையா பேசியிருக்கா. ஆனா ஸ்வாமிகள் तितिक्षवः 'திதீக்ஷவ:' அப்படின்னு, திதீஷான்னா, மான

அவமானத்தையோ, வெயில் மழையையோ எந்த கஷ்டத்தையும் பொறுத்துக்கறதுக்கு திதீக்ஷைன்னு பேரு. அப்படி ஸ்வாமிகள் materialists சொல்ற வார்த்தைகள் எல்லாம், "ராமாயணத்துல ராக்ஷசிகள் சீதா தேவிகிட்ட சொல்ற மாதிரி. இதெல்லாம் நான் காதுல வாங்க மாட்டேன்" அப்படின்னு அதை ஒரு அவமானமா நினைக்காம அதை அவர் பொறுத்துண்டு இருந்துட்டார்.

कारुणिका: 'காருணிகா:' ஆனா அதே ஜனங்களே கூட திரும்ப வந்து, தன்னுடைய கஷ்டங்களை அவர்கிட்ட சொல்லும்போது, "பகவான் இருக்கார், உன் கஷ்டம் சரியாயிடும்" அப்படின்னு அவர் ஆறுதல் வார்த்தைகள் சொல்லி இருக்கார். "இது எதுக்குப் பண்றேள்"னு நான் கேட்பேன். "உங்களுக்கே பாராயணம் இருக்கு. யார் யாரோ வந்துண்டே இருக்கா". நான் அப்ப bachelor. அதனால எனக்கு கஷ்டம் ஒண்ணும் சொல்லிக்கறத்துக்கு அவ்வளவு இல்லை போல இருக்கு. அதனால மத்தவா எல்லாம் வந்து சொல்லிண்டு இருக்கும் போது நான் அப்படி கேட்பேன். ஸ்வாமிகள் பாகவத்ததுல இருந்து ஒரு ஸ்லோகம் எடுத்துக் காண்பிச்சார். "ஆஷு துஷ்யதி ஜனார்தன:" யார் பகவான் பேரால ஆறுதல் சொல்றாளோ, அவாகிட்ட பகவான் வெகு சீக்கிரத்தில் திருப்தி அடைந்து அனுக்ரஹம் பண்ணுவார்"னு இருக்கு. அதனாலதான் சொல்றேன், அப்படின்னு சொன்னார்.

அடுத்தது सुहृदः सर्वदेहिनाम् 'ஸுஹ்ருத: ஸர்வதேஹினாம்' வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்கிற மாதிரி எல்லா உயிர்களிடத்தும் அன்போட, கருணையோட இருக்கறது. இந்த மாதிரி ஆறுதல் சொல்றது, அவர் வரவாளோட statusஐ பார்த்து சொன்னாரானு பார்த்தா, நான் அங்க உட்கார்ந்து இருக்கும்போது பாத்துருக்கேன். அழகா இருந்தாலும் சரி, அவலக்ஷணமா இருந்தாலும் சரி, படிச்சவனா இருந்தாலும் சரி, பாமரனா இருந்தாலும் சரி, ஏழையா இருந்தாலும் சரி, பணக்காரனா இருந்தாலும் சரி, யார் வந்தாலும் அவாளுக்கு, அவாளுடைய அப்பா, அம்மா, அண்ணன், தம்பி, பிள்ளைகள், friends எல்லாம் விட ரொம்ப ஸுஹ்ருத்தாக (well wisher) மாறி ஸ்வாமிகள் அவாளுக்கு க்ஷேமத்தை சொல்வார். அவா அதை கேட்டு ரொம்ப பெரிய நன்மைகளை அடைவா. நான் அதை நிறைய பார்த்து இருக்கேன்.

அடுத்தது, अजातशत्रवः 'அஜாதசத்ரவ:' அவாளுக்கு சத்ருவே கிடையாது. இந்த மாதிரி எல்லார்கிட்டயும் கருணையோடு இருந்து இருந்து, அவாளுக்கு யார் மேலேயும் த்வேஷமே வர்றது இல்ல. மத்தவா மேலே இருக்கிற தப்புகள் தெரியும். "ஸ்வ தோஷ பர தோஷ வித்" அப்படின்னு அவாளுக்கு மத்தவா மேலே இருக்கிற தோஷங்கள் தெரியும், ஆனா அதை பொருட் படுத்தறது இல்ல. நூறு தப்பு தன்னிடத்தில பண்ணினாலும் பொறுத்துக்கறது. அவா ஒண்ணு, தான் சொன்னதை கேட்டு நடந்துண்டா, ஒரு பாராயணம் பண்ணா, அவாளை encourage பண்றது. அப்படின்னு,வெச்சிருந்தார்.

அடுத்தது शान्ताः 'சாந்தா:' சாந்தம்கிற குணத்துக்கு, ஸ்வாமிகள் தான். epitome of சாந்தம். சாந்தம்னா மனசு அடங்கினவானு அர்த்தம். அவருக்கு கோபமே வராது. எவ்வளவு provoke பண்ணினாலும், irritate பண்ணினாலும், அவருக்கு கோபமே வராது.

साधवः साधुभूषणाः 'ஸாதவ: ஸாது பூஷணா:' அந்த நாகப்பட்டினத்துல ஒரு வாட்டி போயி அவர் பிரவசனம் பண்ணி இருக்கார். அடுத்த வாட்டி போகும்போது, யாரோ, "நீங்க இவ்வளவு அற்புதமா ராமாயணம் சொல்றேள். குடுமி வெச்சுக்க வேண்டாமா?" அப்படின்னு, ஒரு slip எழுதி அனுப்பிச்சிருக்கா. கூட வந்த ராகவ ஐயங்கார், "இதெல்லாம் நீ விட்டு தள்ளு. நீ வேலைக்கெல்லாம் போறே", அப்படின்ன உடனே, ஸ்வாமிகள் "அவர் கேட்டது நியாயம்" அப்படின்னு அடுத்த நாளே குடுமி வெச்சுண்டுட்டார். இப்படி அந்த ஸாதவ: ஸாது பூஷணா: அப்படின்னா, ஒழுக்கம். ஆசாரம் எல்லாத்தையும் follow பண்ணனும்னு, அவர் எல்லா ஆசாரங்களையும் ஒண்ணு ஒண்ணா எடுத்துண்டுட்டார். தர்ம சாஸ்திரங்கள்ள சொன்னதை எல்லாம், "நாம இந்த வழியில இருக்கோம், நாம ஒழுக்கமாக இல்லேன்னா, ராமாயணத்தை யாராவது கேலி பேசிடுவா", அப்படின்னு, ஒழுக்கமா இருக்கணும், அந்த தர்ம சாஸ்திரங்கள்ல சொன்னது முடிஞ்சது எல்லாம் follow பண்ணனும், சந்தியாவந்தனம், பிரம்மயக்ஞம், குடுமி, பஞ்சகச்சம், இப்படி எல்லா நேரமும் strict ஆ follow பண்ண ஆரம்பிச்சார்.

मय्यनन्येन भावेन भक्तिं कुर्वन्ति ये दृढाम् 'மயி அனந்யேன பாவேன பக்திம் குர்வந்தி யே த்ருடாம்' வேற எதுலயும் மனசு வெக்காம திருடமான பக்தி பண்றது, அப்படின்னு முடிவு பண்ணி ஸ்வாமிகள், பெரியவாகிட்ட உத்தரவு வாங்கிண்டு,

வேலையை resign பண்ணிட்டு, வெளியில வந்துட்டார். ராமாயண பாகவதமே படிச்சுண்டு இருந்தார். मत्कृते त्यक्तकर्माण: வேலையோடு, லௌகீக கார்யங்கள், கல்யாணங்கள் போறது, paper படிக்கறது இப்படி எல்லாத்தையும் விட்டுட்டார்

त्यक्तस्वजनबान्धवाः 'த்யக்த ஸ்வஜன பாந்தவா:' அவருக்கு ஆரம்பத்துல அக்கா, அத்திம்பேர் கூட வந்து இருந்தா, அப்பா அவரோட இருந்து கடைசி காலத்துல காலமானார். மனைவி, குழந்தைகள் எல்லாரையும் அவர் பொறுப்போட கடன் வாங்கி படிக்க வெச்சு, சாப்பாடு போட்டு, மருந்துகள் வாங்கிக் கொடுத்து இப்படி பாத்துண்டார். ஆனா அவாள பத்தின கவலையை பகவான்கிட்ட விட்டுட்டார். அப்படி பார்த்தா, நாங்க எல்லாருமே, அங்க வந்தவா எல்லாருமே பந்துக்கள் தான், ஆனா யார்கிட்டயும் அவருக்குப் பற்று கிடையாது.

मदाश्रयाः 'மதாஸ்ரையா:' தெய்வத்தை மட்டுமே ஆஸ்ரயிச்சு இருந்தா அவா. அந்த மாதிரி ஸ்வாமிகள், யாரையும் நம்பி இல்லை. தானும், தன்னை சேர்ந்த அந்த குழந்தைகள் எல்லாம் கூட, குருவாயூரப்பன் நமக்கு சாப்பாடு போடறான், அப்படிங்கிற ஒரு நம்பிக்கையோட, யார்கிட்டயும் எந்த ஒரு coffee க்கு கூட ஒரு அஞ்சு ரூபா கேட்காத மாதிரி வளர்த்து இருந்தார்.

कथा मृष्टाः शृण्वन्ति कथयन्ति च 'கதா ம்ருஷ்டா: ஸ்ருந்வந்தி கதயந்தி ச' என்னுடைய கதைகள் ல ரொம்ப பிரியமா இருப்பா. அந்த தெய்வம்னு ஒண்ணு இருக்குங்கிறதை நிஜமாவே உணர்ந்து, மந்திரத்துல மாங்காய் விழும்னா அவருக்கு விழுந்தது. ராமாயணம் படிப்பார். யாரையும் ஸ்தோத்திரம் பண்ண மாட்டார். சபா செகரட்டரி எல்லாம் அனுசரிச்சு போகணும், அவாளோட சௌகர்யா சௌர்யங்கள் பாக்கணும் அப்படியெல்லாம் எதுவுமே, வெச்சுக்காம, நான் பகவானுடைய கதைகளை படிப்பேன், கேட்பேன், சொல்லுவேன். இது மட்டுமே பண்ணிண்டு இருப்பேன், அப்படின்னு இருந்த ஒருத்தர்.

அவருக்கும், அப்புறம் அவரை சேர்ந்த எல்லாருக்கும் சாப்பாடு, துணிமணி எளிய தேவைகளை எல்லாம் பகவான் பூர்த்தி பண்ணிண்டு இருந்தார். வந்தவா எல்லாம், நமஸ்காரம் பண்ணி தான், அவர்கிட்ட பணத்தை கொடுத்துட்டு போனா. ஒருத்தராவது அவர் thanks சொல்லணும்னு எதிர்பார்க்கலை. அப்படி நினைக்கறதே தப்பு அப்படின்னு புரிஞ்சுண்டு இருந்தா. அப்படி ஸ்வாமிகளுக்கு கண்கூடா பகவான் நம்மளை காப்பாத்தறார், அப்படிங்கிறது தெரிஞ்சதுனால,

அவர் இந்த ராமாயணத்தையும் பாகவதத்தையும் சொல்லும்போது, அதில் அந்த சத்யத்தோட த்வனி இருக்கும். பகவான் காப்பாத்துவார் அப்படின்னு சொல்றது பலிக்கும். சுக்ரீவன், "நான் கனவிலேயும் நினைக்காத ராஜ்யமும், என் மனைவியும் எனக்கு திரும்ப கிடைச்சா", அப்படின்னு சொல்லும்போது, ஸ்வாமிகள் "ராமர் அனுக்ரஹத்துனால எல்லாம் கிடைக்கும்", அப்படின்னு சொல்வார். அது அவருடைய தரிசனம். அவருடைய அனுபவத்துல இருந்து சொல்ற வார்த்தை. அதோட power ஏ தனியா இருந்தது.

तपन्ति विविधास्तापा: नैतान्मद्गतचेतसः 'தபந்தி விவிதாஸ்தாபா: நைதான் மத்கதசேதஸ:' இதுதான் ஸ்வாமிகளுடைய வாழ்க்கைக்கு ஒரு இலக்கணமா அமைஞ்சுது. இன்னிக்கு ஒரு இலக்கியமா நினைச்சு நினைச்சு அதுல இருந்து படிச்சு, பாடம் கத்துக்கிற மாதிரி இருக்கு. विविधास्तापा: 'விவிதாஸ்தாபா:' பலவிதமான தாபங்கள். அவருக்கு, உடம்புல பிரஷர், sugar, ஹார்ட் trouble இன்னும் piles, இருக்கிற எல்லா வியாதியும் உடம்புல இருந்தது. family sideலயும் அவருக்கு கஷ்டங்கள் இருந்தது. குழந்தைகளுக்கு ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு ஸ்ரமம் இருந்தது. பணத்துல கஷ்டம் இருந்தது. இந்த கலிகாலத்துல 1950 ல இருந்து 1985 வரைக்கும் கடன் வாங்கிண்டு, வட்டிக்கு வட்டி கட்டிண்டு இருந்தார், அப்படின்னா நம்ப முடியுமா! அப்படி அவர் இருந்தார். அவர் சொல்லுவார். இந்த பணக் கஷ்டம் 1986க்கு அப்புறம் தீர்ந்தது. இல்லேன்னா எல்லாருக்குமே ரொம்ப ஸ்ரமமா போயிருக்கும். பகவான் அதை ஒண்ணை மாத்தினார், பாக்கி எல்லாம் அப்படி இருந்துண்டே இருந்தது, அப்படிம்பார். மூகபஞ்சசதில

आकाङ्क्ष्यमाणफलदानविचक्षणायाः कामाक्षि तावककटाक्षककामधेनोः ।

सम्पर्क एव कथमम्ब विमुक्तपाश-बन्धाः स्फुटं तनुभृतः पशुतां त्यजन्ति ॥

ஆகாம்க்ஷ்யமாணபலதானவிசக்ஷணாயா: |

காமாக்ஷி தாவககடாக்ஷக-காமதேனோ: |

ஸம்பர்க ஏவ கதமம்ப விமுக்தபாச

பந்தா: ஸ்புடம் தனுப்ருத: பசுதாம் த்யஜந்தி ||

அப்படின்னு ஒரு ஸ்லோகம். அதுல "அம்மா காமாக்ஷி, கேட்ட வரங்களை எல்லாம் கொடுக்கக் கூடிய காமதேனுவா உன்னுடைய கடாக்ஷம் இருக்கு. ஆனா அந்த பசுவுடைய ஸங்கம் கிடைச்சுடுத்துன்னா, சிலருக்கு பசுத் தன்மையே போயிடறது. பசு, பதி, பாசம் அப்படின்னு சொல்றது இல்லையா. அந்த மாதிரி, பசுத்தன்மை, பாசங்கள் எல்லாம் விட்டு அவா, பகவானாவே ஆயிடறா. அப்படின்னு ரெண்டாவது வரி. முதல் வரில கேட்ட வரங்கள் கிடைக்கும்னு இருக்கு. ஸ்வாமிகள் "இந்த முதல் வரி, இந்த பணத்துனால ரொம்ப வந்து மனக்லேசம், சுத்தி இருக்கிறவாளுக்கு போகணுமேங்கிறதுனால அந்த முதல் வரியும் பலிச்சுது. ரெண்டாவது வரில அந்த வைராக்கியம் கிடைக்கும்கிறதும் எனக்கு பலிச்சுது" அப்படின்னு சொல்வார். அப்படி பலவிதமான தாபங்கள் ஸ்வாமிகளுக்கு வாழ்க்கையில இருந்தது नैतान तपन्ति 'நைதான் தபந்தி' ஆனா இதெல்லாம் அவாளை கஷ்டப்படுத்தறது இல்லை. ஏன்னா मद्गतचेतसः 'மத்கதசேதஸ:' அவா மனசை முழுக்க எடுத்து என்கிட்ட வெச்சுட்டா. அந்த கதைகள் மூலமாகவும், ரூபத்தியானத்து மூலமாகவும், நாம ஸ்மரணத்து மூலமாகவும் மனசை முழுக்க எடுத்து என்கிட்ட வெச்சதுனால, அவாளுக்கு அந்த தாபங்கள் இருக்கு, ஆனா அது அவாளை ஒண்ணுமே பண்ணலை. இது நாம ஸ்வாமிகள் கிட்ட ஐம்பது வருஷம் பார்த்தோம்.

सर्वसङ्गविवर्जिताः 'ஸர்வஸங்கவிவர்ஜிதா:' இவர்கள் எல்லா சங்கத்தையும் விட்டவர்களாக, இருக்கிறார்கள். இந்த மாதிரி, ஸ்வாமிகள் ஸந்யாசம் வாங்கிண்டார். பிரவசனம் பண்றதை விட்டுட்டுடார். எல்லா சங்கத்தையும் விட்டுட்டு பகவானிடத்தில் லயிச்சு இருந்தார்.

ஸ்வாமிகளை புரிஞ்சுக்கறது கஷ்டம். ஏன்னா நாம எல்லாரையும் இந்த காலத்துல மஹான்னு, நினைக்கிறோம். ஒரு தியாகம் பண்ணி பகவானுக்காக கொஞ்ச நாள், உழைக்கறா. அப்புறம், கொஞ்சம் புகழ் வந்த உடனே, ஒரு கோயில் கட்டறேன், அப்படின்னு காசு collect பண்ண ஆரம்பிச்சுடறா. இல்ல ஒரு மடம் வெச்சுக்கறேங்கிறா. இல்ல ஒரு சங்கத்துல ப்ரெசிடென்ட், செகரட்ரி அப்படின்னு பேர் போட்டுக்கறா. எல்லாருக்கும் அந்த ego வோட நமைச்சல் இருக்கு. அதுக்கு ஏதாவது ஒண்ணு, இந்த உலகத்துல பண்றா. இந்த உலகத்துல இருக்கிற மனுஷர்களை, கண்ணால் காண்கின்ற உலகத்தை ரொம்ப சத்யமா நம்பி, இதுல புகழ், பணம் கௌரவம், இதை எதிர்பார்த்து, அவா தெய்வ

கார்யங்கள் எல்லாம் பண்றா. அப்படி இல்லாம, நமக்குக் கண்ணுக்குத் தெரியாத அந்த தெய்வத்தையே தன்னுடையக் கண்ணால பார்த்து, அந்த குருவாயூரப்பனுக்குப் பூஜை பண்ணி, அவருடைய கதைகளைப் பேசி, அப்படி வாழ்ந்த ஒரு மஹான் நம்ம ஸ்வாமிகள்.

அப்பேற்பட்ட மஹான்களோட சங்கம்தான் நாம விரும்பணும் सङ्गस्तेष्वथ ते प्रार्थ्यः 'ஸங்கஸ்தேஷு அதை தே ப்ரார்த்ய:' தேவஹூதி கிட்ட கபில முனிவர் சொல்றார். இப்பேற்பட்ட மஹான்களோட சங்கத்தைதான் நீ ஆசை படணும். ஏன்னா, सङ्गदोषहरा हि ते 'ஸங்கதோஷ ஹரா ஹி தே' நம்முடைய பாசங்களை அடியோடு வெட்டக் கூடிய சக்தி அவாளுக்குதான் இருக்கு.

அதை அவா, எப்படி பண்ணுவான்னா, அவா என்னுடைய கதைகளை சொல்லுவா. அது ஒரு ரசாயனம் மாதிரி, ஒரு மருந்து மாதிரி. அது மனசுல வொர்க் பண்ணி, तज्जोषनात् आशु अपवर्ग वर्त्मनि श्रद्धा रतिः भक्तिः अनुक्रमिष्यति 'தஜ்ஜோஷநாத் ஆஷு அபவர்க வர்த்மனி ஷ்ரத்தா ரதி: பக்தி: அனுக்ரமிஷ்யதி' மோக்ஷ வடிவமான பகவான்கிட்ட, இந்த सतां प्रसङ्गात् मम वीर्यसंविदः भवन्ति हृत् कर्ण रसायनाः कथाः 'ஸதாம் பிரசங்காத் மம வீர்ய சம்வித: பவந்தி ஹ்ருத் கர்ண ரஸாயனா: கதா:' என்னுடைய வீர்யத்தையும், பிரபாவத்தையும், ஔதார்யத்தையும். என்னுடைய குணங்களை எல்லாம் பேசக் கூடிய அந்த கதைகளை இப்பேற்பட்ட மஹான்கள் கிட்ட கேட்டா, அது காது மூலமா மனசுக்குள்ள போயி ஒரு chemical reaction பண்றது அது. ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, आशु 'ஆசு', வெகு விரைவில், வெகு விரைவில் ங்கிறதுக்கு, ஒரு முயற்சியும் இல்லாம, இந்த மஹான்களை பார்த்து அவாளுடைய கதைகளை கேட்டாலே போறும். श्रद्धा रतिः भक्तिः अनुक्रमिष्यति 'ஷ்ரத்தா ரதி: பக்தி: அனுக்ரமிஷ்யதி' என்னிடத்துல உனக்கு பக்தியும், ஆசையும், நம்பிக்கையும் அதெல்லாம் தானா வளரும், அப்படின்னு சொல்லி,

பகவான், மோக்ஷம் அடையறதுக்கு, உலக பாசங்களில் இருந்து விடுபடறதுக்கு, கபில முனிவரா அவதாரம் பண்ணின போது, தன்னுடைய அம்மா தேவ ஹூதிக்கு சொன்ன வார்த்தைகள், ஸ்வாமிகளுடைய வாழ்கைக்கு விளக்கமாக இருக்கு. ஸ்வாமிகள் அந்த பகவானுடைய கதைகளை சொன்னார். பணத்துல ஆசை இல்லாம, அப்படிங்கிறது மட்டும் இல்லை. அது ஆரம்பம்.

அங்கே இருந்து இத்தனை கொள்கைகளும் வெச்சுண்டு, விவேகி, ஸாது, முற்றின விவேகி, தெய்வஸாது இத்தனைப் படிகளும் தாண்டி, ஞானியான மஹா பெரியவாளும், துறவியான சிவன் சாரும் மஹான்னு போற்றக் கூடிய நிலைமையை அடைஞ்சார். அவாளை நமஸ்காரம் பண்ணுவோம்.

கோபிகா ஜீவன ஸ்மரணம்…கோவிந்தா கோவிந்தா…

ௐ

कारुण्यसार-सान्द्राः

काङ्क्षित-फल-दान कल्पक-विशेषाः ।

श्रीगुरु-चरण-कटाक्षाः

शिशिराः शमयन्तु चित्त-संतापम् ॥



காருண்ய ஸார ஸாந்த்ரா:

காங்க்ஷித பல தான கல்பகவிசேஷா: ।

ஶ்ரீகுருசரண கடாக்ஷா:

ஶிஶிரா: ஶமயந்து சித்த ஸந்தாபம் ॥